விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 08 திங்கட்கிழமை (22.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 154


அன்பு வாசகர்களே...
புருசோத்தமன் எழுதும்
**தமிழரின் தலைவிதி எப்படியாகும்?**
கட்டுரை உள்ளே...

# இது தனிச்சிங்கள பௌத்த நாடு!

## பொது பல சேனா குழப்பம் விளைவிப்பு

(கண்டி)

ஞானசார தேரரை கொலை செய்ய சதி நடப்பதாகவும் அதனைத் தடுக்க சிங்களவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு தமது பலத்தை முழு நாட்டுக்கும் காண்பிக்க வேண்டும் என அறை கூவல் விடுத்துள்ள பொது பல சேனா அமைப்பினர், வீதிகளில் மக்களில் இயல்பு வாழ்க்கைக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலும் குழப்பங்களை ஏற்படுத்தியிருந்தனர். (04-ம் பக்.)



## படகு சேவையில் பாரபட்சம் !

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவானில் இருந்து தீவகங்களுக்கு செல்லும் படகு சேவையில் சுற்றுலாப் பயணிகளுக்கே கடற்படையினர் முன்னுரிமை வழங்குகின்றனர் என்றும் இச் 23

## டெங்கு ஒழிப்பு
## 2000 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

டெங்கு அபாயம் நிலவும் 12 மாவட்டங்களில் இரு நாட்களாக முன்னெடுக் 24

## சட்ட விரோதமாக மணல் அகழ்வு
## 12 பேர் கைது

(பரந்தன்)

கிளிநொச்சி கல்லாறு காட்டுப்பகுதியில் இருந்து சட்ட விரோதமாக மணல் 23

## ராஜித இன்று விசேட உரை

(ஜெனிவா)

ஜெனிவாவில் இன்று ஆரம்பமாக உள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் 70 ஆவது மா 04

## மோகனதாஸ் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக கடந்த 19-ம் 02

## வைத்தியசாலை புதிதாக திறப்பு

(வேரஹெர)

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் புதிய போதனா வைத்திய 23

## அச்சுறுத்தல்களை நிறுத்த சர்வதேச அழுத்தம் தேவை
### தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீது தொடரும் அச்சுறுதல்களை நிறுத்த சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பில் நேற்று தமிழ் மக்கள் பேரவையால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கை வருமாறு.

முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வொன்றை ஒழுங்கு படுத்திய நீண்டகால மனித உரிமை செயற்பாட்டா 23

## நாகர்கோவில் பகுதியில் குழுக்களிடையே மோதல்
### மூவர் படுகாயம்; குடிசை தீக்கிரை

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் மூவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் குடிசை ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரு பகுதியினருக்கு இடையில் மோதல் சம்பவம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இதில் கத்திக்குத்து மற்றும் போத்தல் குத்துக்கு இலக்காகி மூவர் படுகாயமடைந்த 24

## மீளவும் போராட்டம்

(கொழும்பு)

திருகோணமலை எண்ணெய்க் களஞ்சியத் தொகுதி தொடர்பாக இந்தியாவுடன் உடன்பாடு செய்து கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இலங்கையின் பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர் தொழிற்சங்கங்கள் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகிறது. இதன்படி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

இந்தியாவுடனான இந்த உடன்பாட்டை நிறுத்தக் கோரிய இந்தப் திடீர் போராட்டத்தில் ஈடுபட, பெரும்பாலான தொழிற்சங் 04

# மக்களை அடக்கியே மகிந்த அரசு ஆட்சி!
## நல்லாட்சி அப்படியல்ல – விஜயகலா

(பச்சிலைப்பள்ளி)


மகிந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்கு தெரிவானபோதும், நாடாளுமன்றத்தில் மக்களின் பிரச்சினைகளை தெரிவிப்பதற்கோ, மக்களை நேரில் சந்திப்பதற்கோ அனுமதி வழங்கப்படவில்லையென இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாறாக கடந்த அரசாங்கத்தை தலைமையேற்று நடத்தியவர்களே மக்களை அடக்கி கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாக 04

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தேவையற்றது
### தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதாக தற்போதைய அரசாங்கமும் அதற்கு முன் 23



## ஒற்றுமையை உடைக்க சதி!

(வவுனியா)

தமிழர்கள் ஒன்றாக இருக்கின்ற கூட்டு முயற்சியை உடைத்தெறிய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் 04

## அமைச்சரவையில் இன்று மாற்றம்

(கொழும்பு)

இன்றைய தினம் அமைச்சரவையில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாக பல்வேறு தரப்பினரும் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பின்புலத்திலேயே அனைத்து அமைச்சர்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்துள்ளார்.

இவ்வாறு அனைத்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும்,பிரதி அமைச்சர்களும் இராஜாங்க அமைச் 04

## முதியோர் இல்லங்கள் முழுமை பெறவேண்டும்
### முதலமைச்சர் சி.வி கருத்து

(வவுனியா)

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் வடக்கு மாகாணத்தை மாற்றியமைக்க முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்,

முதியோர் இல்லங்களை அமைக்கும்போது அவற்றை சௌகரியமான முறையில் அமைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தகாலமாக அவுஸ்ரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் பேரா 23


## புகலிடக் கோரிக்கைக்கு 4 மாத கால அவகாசம்!
### அவுஸ். அரசு அறிவிப்பு

(சிட்னி)

அவுஸ்திரேலியாவிற்குள் படகுகள் மூலம் பிரவேசித்துள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்பதற்கு அந்த நாட்டு அரசாங்கம் நான்கு மாத கால அவகாசம் வழங்கியுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக புகலிடக் கோரிக்கையாளர்கள் தமது பாதுகாப்புக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும் என அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பீற்றர் டுட்டன் 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




மனமுவந்து

# வாழ்த்துகின்றோம்

எமது தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலராக பணியேற்றுள்ள என்றும் எங்கள் பெருமதிப்புக்குரிய

**உயர்திரு.**

## சண்முகராஜா சிவஸ்ரீ

அவர்களின் வருகையால் இன்புற்றுள்ள எம் மக்களின் வாழ்வு தங்களின் மகத்தான சேவையால் மேன்மையுற வாழ்த்தி வரவேற்கின்றோம்.

**அளவெட்டி மத்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்**
**J/216 அளவெட்டி மத்தி**

(C-8635)


## மோகனதாஸ்...

ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபரான மோகனதாஸ் தனது கடமையைப பொறுப்பேற்றுக்கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கடந்த ஜனவரி மாதம் மாகாண சபைக்கு இவர் அனுப்பப்பட்டிருந்தும் எந்தப் பொறுப்புக்களுமே வழங்கப்படாதிருந்த நிலையில் கடந்த வாரம் ஆளுநரால் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இருப்பினும் குறித்த பதவியில் இதுவரை காலமும் பதவி வகித்த ரூபிணி வரதலிங்கத்தை வட மாகாண முதலமைச்சரின் அமைச்சுக்கு உட்பட்ட அமைச்சின் செயலாளராகவும் ஆளுநர் நியமித்திருந்தார்.

குறித்த நியமனங்கள் தொடர்பாக ஆளுநருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அதுவரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கேட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த உத்தியோகத்தர்கள் செய்வதறியாது மீண்டும் ஆளுநரை நாடியுள்ளனர் அதன் பிரகாரம் ஆளுநரோ உங்களிற்கு எழுத்தில் வழங்கப்பட்டதே பதில் எனத் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை மோகனதாஸ் தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். எனினும் முதலமைச்சரின் அமைச்சிற்கு செயலாளராக நியமிக்கப்பட்ட ரூபிணி வரதலிங்கம் தற்போது வரையில் பதவி ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)


ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள்
**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

**முகாமைத்துவ உதவியாளர் (M.A)**
**போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்**

**35%** விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்

**May 28 பரீட்சை**

தொடர்புகளுக்கு: 077 651 0375 (8692)
**யாழ்.ராகஸ்வரம்** புத்தகசாலை
e-mail:jaffnarakaswaram@gmail.com



# கண்ணீர் அஞ்சலி



(8694)

## அருளப்பு ஞானானந்தன்

(ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்)

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி இராஜநாயகி ஆனந்தராஜன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர் அருளப்பு ஞானானந்தன்**
21.05.2017 அன்று காலமாகி விட்டார்.
அவரது பிரிவால் துயர் உற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/மயிலிட்டி றோ.க.த.க பாடசாலை**
**ஆனைக்கோட்டை.**





# முதலாம் ஆண்டு

# நினைவஞ்சலி

## இரத்தினசாமி சண்முகதாஸ்

தோற்றம்:- 13.09.1954 மறைவு:- 01.06.2016

**திதி: துவாதசி**

கடந்த 01.06.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் **இரத்தினசாமி சண்முகதாஸ்** அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு **23.05.2017** அன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**- குடும்பத்தினர்**
**கொத்தியால் ஒழுங்கை,**
**வேம்படி, வல்வெட்டித்துறை.**

(C-8634)

# இனவாதம் தொடருமானால் சுயாதீனமாகச் செயற்படுவோம்

## முஜிபுர் ரஹ்மான் அறிவிப்பு



இன நல்லிணக்கத்துக்கு எதிராக சில நபர்களினால் முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்படும் என, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட சந்திப்பின் போது இது தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களாக முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் மற்றும் வியாபர்ர நிறுவனங்கள் ஆகியவற்றின் மீது 14 தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள முஜிபுர் ரஹ்மான், இச் செயற்பாடு தொடருமானால் விரைவில் தீர்மானமொன்றிற்கு வரவேண்டி ஏற்படும் என்று தெரிவித்தார்.

இதேவேளை நேற்று அதிகால்ல மல்லவபிட்டிய ஜும்மா பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட பெற்றோல் குண்டுத்தாக்குதலுக்கும் முஜிபுர் ரஹ்மான் கண்டனம் வெளியிட்டுள்ளார். (இ-7)


## நீரிழிவுப் பாதிப்புக்களுக்கு ஆயுர்வேத மருத்துவம்


ஆரம்ப - நாட்பட்ட நீரிழிவுப் பாதிப்புக்கள் அதிகதாகம், அதிக பசி, அடிக்கடி சிறுநீர் வெளியேறுதல், இளைப்பு, களைப்பு, நரம்புப் பாதிப்புக்கள் (Diabetic neuropathy), கை - கால் விறைப்பும் உணர்வற்ற நிலையும் (Numbness of hands and legs), சமிபாட்டுக் குழப்பம், மலச்சிக்கல், அதிக இரத்தக் கொலஸ்ரோல், உயர் இரத்த அழுத்தம், இதய இரத்தக் குழாய் அடைப்பு (Coronary heart disease), இதய வலி (Chest pain / Angina) சிறுநீரகப் பாதிப்புக்கள் (Diabetic nephropathy), சிறுநீரில் ஏற்படும் கிருமித் தொற்றுக்கள் (Renal infections), மற்றும் சிறுநீரில் அதிகளவு புரோட்டின், யூரியா அதிக அளவில் காணப்படுதல் போன்ற நீரிழிவுப் பாதிப்புக்களிற்கு ஆயுர்வேத முறைப்படி மருந்து, உணவு, வாழ்க்கை முறை போன்ற ஆலோசனைகளுடன் சிகிச்சை பெறலாம்.


ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251
8691


# ஆட்சியாளர்கள் தீவிர சக்திகளுக்கு மீண்டும் அச்சப்படுகின்றார்களா?

## மு.கா.அமைச்சர் ஹக்கீம் கேள்வி






(கொழும்பு)

**கடந்தகால பூதங்கள் வெளிக்கிளம்பும் இந்தச் சூழலில் நடக்கின்ற சில சம்பவங்களைப் பார்த்தால் மீண்டும் ஆட்சியாளர்கள் தீவிர சக்திகளுக்கு அச்சப்படுகின்றார்களா? என்ற கேள்வி எழுகின்றது என நகர அபிவிருத்தி வடிகாலமைப்பு அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

புதிதாக காப்பெற் இடப்பட்ட மட்டக்களப்பு திசவீரவிங்கம் வீதியை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திறந்துவைத்து உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கிழக்கின் ஆட்சியின் பங்காளர்கள் என்கின்ற அந்தஸ்து. நிரந்தர அந்தஸ்தாக இருக்க வேண்டும். அதன்மூலம் நிறைய விடயங்களை சாதிக்கமுடியும்.

கிழக்கில் ஒரு மொழி பேசும் சமூகம் என்பதால் தொடர்ந்து ஒன்றித்து பயணிக்க வேண்டியது அவசியமாகும். தீவிர சக்திகளின் சம்பவங்களைப் பார்க்கின்றபோது இரு சமூகங்களும் இறுக்கமாக ஒற்றுமைப்பட வேண்டியுள்ளது.

அபிவிருத்தி விடயத்தில் ஒரு சமத்துவத்தைப் பேண வேண்டிய அவசியத்தை ஆட்சியிலிருக்கும் நாங்கள் தெளிவாக தார்மீக பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டியுள்ளது" என்றார்.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்காள என். ஸ்ரீநேசன், சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஷீர் அஹமட், மாகாண சபை உறுப்பினர்கள், மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-7)


## குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

## Special Treatment for Gastric Ulcer


சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251
8691


# எமது கொள்கைகளை ஏற்காவிட்டால் இந்த அரசிலிருந்து வெளியேறுவோம்

## அமைச்சர் சுசில் கூறுகிறார்



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளை அரசாங்கம் ஏற்காது போனால் அரசிலிருந்து விலகி எதிர்க்கட்சிக் குழுவாக இயங்குவோம் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது கருத்துக்களை ஜனாதிபதிக்கு ஏற்கனவே அறிவித்துள்ளோம். இன்றளவில் நாடு பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றமைக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதாரம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் குழுவின் செயற்பாடுகளே காரணமாகும்.

கூட்டு அரசாங்கமாகச் செயற்பட வேண்டுமானால் இரண்டு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொருளாதாரத் திட்டங்களையே அரசாங்கம் நடைமுறைப்படுத்தவேண்டும்" என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பரபரப்பான இறுதியாட்டத்தில் புனேயை இறுதிப்பந்தில் வென்றது மும்பை அணி



ஐ.பி.எல் - 2017 இன் இறுதியாட்டம் ஹைதராபாத் ராஜீவ் காந்தி சர்வதேச அரங்கில் நேற்று இரவு 8.00 மணிக்கு நடைபெற்றது.

இதில் ஸ்ரீபன் ஸ்மித் தலைமையிலான ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட் அணியுமரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி ஆரம்ப வீரர்களாக சிமன்ஸ் மற்றும் பார்த்திப் பட்டேல் ஆகியோர் களமிறங்கினர். ஆரம்பம் முதலே புனே அணியின் பந்து வீச்சுக்கு தடுமாறிய மும்பை அணி வீரர்கள் சிமன்ஸ் 3 ஓட்டங்களுடனும் பார்த்திப பட்டேல் 4 ஓட்டங்களுடனும் ராயுடு 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அணித் தலைவர் ரோஹித் சர்மா களமிறங்கினார் ஆனால் அவரும் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

குருனல் பாண்டியா மட்டுமே ஓரளவு தாக்குப்பிடித்து 47 ஓட்டங்கள் எடுத்தார் பொல்லார்ட் 7 ஓட்டங்களுடனும் கார்ட்டிக் பாண்டியா 10 ஓட்டங்களுடனும் கருன் சர்மா 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். ஜோன்சன் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்கள் எடுக்க மும்பை அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை எடுத்தது.


புனே அணியின் பந்து வீச்சு சார்பில் உனட்கட், சம்பா, கிரிஸ்ரன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு 130 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய புனே அணியின் ஆரம்ப வீரர்களாக திரிபாதி மற்றும் ரகானே களமிறங்கினர்.

திரிபாதி 3 ஓட்டங்களுடனும் ரகானே 44 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பின்னர ஜோடி சேர்ந்த தற்போதைய அணித் தலைவர் ஸ்ரீபன் ஸ்மித் மற்றும் முன்னாள் அணித் தலைவர் தோனி நிதானமாக துடுப்பெடுத்தாடினர். தோனி பும்ராவின் பந்து வீச்சில் பட்டேலிடம் பிடிகொடுத்து 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ஸ்மித் 51 ஓட்டங்களுடனும் திவாரி 7 ஓட்டங்களுடனும் கிரிஸ்டின் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க மும்பை அணி ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்று ஐ.பி.எல் - 2017 கோப்பையைக் கைப்பற்றியது.

பந்து வீச்சில் ஜோன்சன் 3 விக்கெட்டுக்களும் பும்ரா 2 விக்கெட்டுக்களும் கைப்பற்றினர்.




## வாழ்த்தி வரவேற்கின்றோம்



### திருவாளர் சண்முகராஜா சிவஸ்ரீ

கரவெட்டி பிரதேச செயலராக இருந்து அரும் பணியாற்றி தற்போது யாழ். மண்ணில் சகல வளங்களும் கொண்ட எமது தெல்லிப்பளை பிரதேச செயலராக பதவியேற்றுள்ள திருவாளர் சண்முகராஜா சிவஸ்ரீ அவர்களை வருக வருக என வரவேற்பதுடன் தங்கள் நேர்மையான அர்ப்பணிப்புடன் கூடிய சேவையின் மூலம் மக்களின் குறைகள் நீங்குவதுடன் தாங்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**அளவெட்டி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்**
**அளவெட்டி வடக்கு மகளிர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்**
**யா/215 அளவெட்டி வடக்கு**

(C - 8635)


## இது தனிச் சிங்கள...

சிங்களவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு, சிங்களவர்களின் ஒற்றுமையை முழு நாட்டுக்கும் தெரியப்படுத்த வேண்டும், உடனடியாக சிங்களவர்கள் அனைவரும் ஒன்று திரளுங்கள் என அவரச அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கையை நேற்றுக் காலை தொடக்கம்பொது பல சேனாவினர்சமூக வலைத் தளங்கள் ஊடாகவும் காணொளிகள் மூலமாகவும் வேகமாக பரப்பி வருகின்றனர்.

மேலும் அவர்கள் விடுத்துள்ள காணொளியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) பொது பல சேனாவின் ஞானசார தேரரை கைது செய்ய பொலிஸார் வந்த நிலையில் குருநாகல் பகுதியில் பதற்றத்தையும் ஏற்படுத்தினர். எனினும் பிக்குகளும் சிங்கள இளைஞர்களும் ஒன்றுதிரண்டு ஞானசார தேரரை காப்பாற்றினோம்.

எனினும் ஞானசார தேரரின் உயிருக்கே தற்போது ஆபத்து ஏற்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து சிங்களவர்கள் அனைவரையும் ஒன்று திரள வேண்டும் என கோரிக்கை விடுத்தோம்.

அதன் காரணமாக கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் ஏராளமான சிங்கள இளைஞர்களும் பிக்குகளும் ஒன்று கூடினர்.

எனினும் நாட்டில் அனைத்து பாகங்களில் உள்ளவர்களையும் உடனடியாக தலதா மாளிகைக்கு முன்னே, ஒன்றுகூட வேண்டும். முதலாவதாக மாத்தளை, குருநாகல், தம்புள்ளை என அருகில் உள்ள சிங்களவர்கள் இங்கு வருகைதர வேண்டும்.

ஞானசார தேரர் மட்டுமே எமக்காக இருக்கின்றார். அவரை கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டு விட்டது. அவரைக் காப்பாற்ற வேண்டும். அத்தோடு இது சிங்கள நாடு அதனை புரிய வைக்க வேண்டும்.

அதனால் கண்டி தலதா மாளிகையின் முன்னால் அனைவரும் ஒன்றிணைந்து எமது பலத்தை முழு நாட்டுக்கும் காட்ட வேண்டும்.

இந்தக் காணொளியை பார்ப்பவர்கள் உடனடியாக பகிருங்கள், அனைவருக்கும் தற்போது உள்ள நிலைமையை தெரிவியுங்கள். எந்த அமைப்பினராக இருந்தாலும் பரவாயில்லை.

பாரபட்சம் பார்க்காது பௌத்தத்தையும் ஞானசார தேரரையும் காப்பாற்ற உடனடியாக வாருங்கள். இராவண பலய, சிங்கலே போன்ற அமைப்புக்கும் இதனைப்பற்றி தெரிவித்துள்ளோம்.

அவர்களும் கூடிய விரைவில் இங்கே வருகைத் தரவுள்ளனர். எனவே முடிந்தளவு விரைவாக அனைவரும் ஒன்றுதிரண்டு வாருங்கள் எனவும் குறித்த காணொளியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் குருநாகல் பகுதியில் பொதுபல சேனாவினரால் பதற்ற நிலை ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்று கண்டியில் அவசரமான ஒன்றுகூடல் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில்,

ஒன்றுகூடல் முடிவில் ஞானசார தேரர் உண்ணாவிரத போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளார்.

கண்டி மல்வத்து விகாரைப் பகுதியிலேயே அவர் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள நிலையில், அப்பகுதியில் வாழும் சிறுபான்மை மக்கள் பலரும் அச்சமடைய நேரிட்டுள்ளது. (செ)

## ஒற்றுமையை...

எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற 'நினைவு முற்றம்' மண்டபம் திறப்பு விழா மற்றும் அடிக்கல் நாட்டும் வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த மண்ணில் தமிழர்களுக்கு பல சவால்களும் நெருக்கடிகளும் காணப்படுகின்றது என சுட்டிக்காட்டிய சிறீதரன், ஒற்றுமையாக இருக்கும் வரையிலேயே மதிக்கப்படுபவர்களாக இருக்க முடியும் என மேலும் தெரிவித்தார். (செ)

## மக்களை அடக்கி ...

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பச்சிளைப்பள்ளி பிரதேசத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்தோடு, கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு, தெற்கை அபிவிருத்தி செய்ததாகவும், தெற்கிலுள்ளவர்கள் வடக்கிற்கு வந்துசெல்வதற்காகவே ஏ9 போன்ற வீதிகள் புனரமைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட விஜயகலா, இதனால் வடக்கு மக்கள் எவ்வித நன்மையையும் அனுபவிக்கவில்லையெனவும் குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்கத்தின் இவ்வாறான அநீதியான செயற்பாடுகளால் மக்கள் இன்னும் முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் சிரமத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருவதாக இராஜாங்க அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்நிலையில், தற்போதைய அரசாங்கத்தில் மக்களை நேரடியாக சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளை கேட்கவும் பார்க்கவும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதென்றும், மக்களது பிரச்சினைகள் படிப்படியாக தீர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (செ)

## அமைச்சரவையில் ...

சர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

அரசியல், சமூக மற்றும் பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை 91 உறுப்பினர்களைக் கொண்டதுடன் அதில் 46 பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாவர்.

அத்துடன் இராஜாங்க அமைச்சர் 20 பேரும் பிரதியமைச்சர்கள் 25 பேரும் அடங்குகின்றனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அனைத்து அமைச்சர்களும் நேற்று இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## மீளவும் போரா ...

கங்கள் இணங்கியுள்ளன என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜனக ராஜகருண தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்டுள்ள இந்த உடன்பாடு இந்திய எண்ணெய் நிறுவனத்துக்குச் சாதகமானது என்றும், நாடு முழுவதும் அந்த நிறுவனம் தன்னை விரிவுபடுத்திக் கொள்வதற்கே இந்த உடன்பாடு உதவும் என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

திருகோணமலையில் உள்ள எண்ணெய்க்குதங்களை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## ராஜித இன்று...

நாட்டில், அமைச்சர் ராஜித சேனாரத்ன கலந்துகொள்ளவுள்ளார். இதன்போது விசேட உரையொன்றையும் பொதுநலவாய ஒன்றியத்தின் சுகாதார அமைச்சர்களின் கூட்டத்தில் ஆற்றவுள்ளார். இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய நாடுகளின் சுகாதார அமைச்சர்களது மாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட கொழும்பு பிரகடனம் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

# அமைச்சரவை மாற்றம் சட்டம் ஒழுங்கு அமைச்சு சரத் பொன்சேகாவிடம்?


(கொழும்பு)

முக்கிய அமைச்சுப் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

நிதி அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் சட்டம் ஒழுங்குகள் அமைச்சு உள்ளிட்ட முக்கிய அமைச்சுக்கள் பலவற்றிலும் மாற்றங்களை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்சட்டம்ஒழுங்குகள் அமைச்சின் பொறுப்புக்களை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்குவதற்கான எதிர்பார்ப்புகள் ஜனாதிபதியிடம் உள்ளதாக அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். இதனடிப்படையில் இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் அமைச்சரவை மாற்றம் குறித்து தீர்மானிக்கப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனா செல்வதற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன்போது குறிப்பிட்ட சில முக்கிய அமைச்சுக்களில் மாற்றங்கள் கொண்டு வருவதற்கும் புதிய அமைச்சர்கள் சிலரை நியமிக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.



இ.தொ.காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் புதிய அமைச்சு பதவிகளுக்காக உள்வாங்கப்படவுள்ளனர்.

எனினும் அமைச்சரவை மாற்றம் தொடர்பில் இரு முக்கிய கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் மேலோங்கியுள்ளன.

எவ்வாறாயினும் கடந்த 2015 ஒகஸ்ட் மாதம் பதவியேற்ற கூட்டு அரசாங்கத்தின் அமைச்சரவை முதல்முறையாக மறுசீரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திருமணத்தால் வேலையிழந்த பொலிஸாருக்கு மீள வேலை

தகுதிகாண் காலத்தில் திருமணம் முடிந்த காரணத்தினால் வேலையில் இருந்து நீக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்கப்படவுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தராக நியமனம் பெற்ற திகதியில் இருந்து மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலமாகும்.

இந்த நிபந்தனையினால் வேலையை இழந்த உத்தியோகத்தர்கள் சட்டம், ஒழுங்கு மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க ஊடாக தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தனர்.

இதன் பயனாகவே அவர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்கப்படவுள்ளது.

2 உப பொலிஸ் பரிசோதகர்களும் 133 ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களும் 13 பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களும் இதில் அடங்குவர். (இ-7)

# மரண அறிவித்தல்

## அருளப்பு ஞானானந்தன்



பிறப்பு 24 08 1936

இறப்பு 21 05 2017

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அருளப்பு ஞானானந்தன்**

அவர்கள்நேற்றுஞாயிற்றுக்கிழமை (21.05. 2017) காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற அருளப்பு- புலோமினாவின் அன்பு மகனும் காலஞ் சென்ற நாகேந்திரம்- ஆசைப்பிள்ளையின் மூத்த மருமகனும் விஜயதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மரியானந்தம் அல்லேலூயா மற்றும் ஆரோக்கிய நாயகியின் அன்புச் சகோதரனும் இராஜநாயகி (ஆசிரியை - யா/ மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை), லோறன்ஸ் (அன்றா பதிப்பகம்), ஹேமலா (ஆசிரியை - கி/இரணைதீவு ஆர்.சி. பாடசாலை), சத்தியசீலன் (பான்சி கடை உரிமையாளர், நவாலி), கருணாகரன் (கிளிநொச்சி வைத்தியசாலை உளவளத்துணை ஆலோசகர்), நிர்மலா (கிளி/ பாரதிபுரம் ம.வித்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தராஜன் (புடைவை வியாபாரி, சங்கானை), சரினா (ஆசிரியை - கிளி/ பரந்தன் இந்து ம.வி.), திருச்செல்வம் (ஊழியர் இ.போ.ச. கோண்டாவில் சாலை), சிவசாந்தினி, அமிர்தா (சாவகச்சேரி பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜீவன்போல், பவிசாளினி, டில்க்சியா, கிளின்ரன்போல், டியானி ஆகியோரின் அன்புப் பேரனும் அருட்சகோதரி - புறோத் மேரியின் சிறிய தந்தையுமாவார்.


அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று திங்கட்கிழமை (22.05.2017) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நவாலி சென் .பீற்றர் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நவாலி சென் பீற்றர்ஸ் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

மடுமாதா ஒழுங்கை,
அரசடி வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(சி-8632)

தகவல்:-
குடும்பத்தினர்.
077 101 7118

# வர்த்தக நிலையத்தில் தீ



(காலி)

காலி மாவட்டத்தின் பெந்தோட்டை, எல்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான வர்த்தக நிலையம் ஒன்றில் தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

ஒரு pvc குழாய் ஒன்றை முன் கதவால் உள்ளே அனுப்பி அதன் ஊடாக தீ வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# இராசி பலன்

22.05.2017

(வைகாசி 08, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 10.39 மணிவரை
உத்தரட்டாதி காலை 6.16 மணிவரை
ரேவதி பின்னிரவு 5.17 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் சந் | புத | சூரி செவ் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரம் அதிகாலை 5.21 மணிக்கு மேட-சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், வரவு வந்தாலும் அதற்கேற்ப செலவுகள் ஏற்படலாம், தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம்பெறலாம்.

**மேடம்** கொடுக்கல் - வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நிர்வாகத் திறமை வெளிப்படும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்** எதிர்பார்ப்புகள் எளிதில் கை கூடும் நாள், நல்லவர்கள் தொடர் புகள் கிடைக்கும் வாய்ப் புண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**கடகம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், உடல்நலம் சீராகும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்** சகோதர வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம்.

**சிம்மம்** வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** திட்டமிட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


**விருச்சிகம்** இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பிள்ளைக்ளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**துலாம்** போட்டிகளைச் சமாளித்து வெற்றி காண்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், போசன சுகமுண்டு.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, பெண்களின் சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

# வித்தியா கொலை வழக்கு யாழ்.நீதி நியாயாதிக்க எல்லைக்குள்ளேயே நடைபெற வேண்டும்

## சிறிதரன் எம்.பி.ஜனாதிபதியிடம் கோரிக்கை





புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கோரமாகக் கொலை செய்யப்பட்ட வழக்கினை யாழ்ப்பாண நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட நீதிமன்றத்திலிருந்து கொழும்பிற்கு மாற்றுவதனை நிறுத்தி யாழ்ப்பாணத்திலேயே தொடர்ந்தும் வழக்கு விசாரிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விட்டுள்ளார்.

அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கோரிக்கைக் கடிதத்தில்,

"யாழ்ப்பாணம் புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வி சிவலோகநாதன் வித்தியாவினது கொலை வழக்கினை கொழும்பிற்கு மாற்றுவது தொடர்பில் தாங்களின் கவனத்தை ஈர்க்க இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

செல்வி. வித்தியா சிவலோகநாதன் கோரமான முறையில் கொலை செய்யப்பட்டமை பற்றியும் அதனால் சமூகத்தில் எழுந்த உணர்வின் பிரதிபலிப்புக்கள் பற்றியும் தாங்கள் நன்கு அறிவீர்கள். இத்தகைய கொலைகள் ஏற்கனவே பலமுறை இங்கு நடைபெற்றிருக்கின்றது. அத்தகைய கொலைகளின் பின்னணியில் செயற்பட்ட காரணகர்த்தாக்களை எமது மக்கள் தெளிவாக இனம்கண்டும் இருந்தனர். ஆனால் நீதி விசாரணைகள்நேர்மையான முறையில் நடைபெற இடமளிக்கப்படவில்லை என்பதை வரலாற்றின் சம்பவங்கள் தங்களுக்கு நினவூட்டக் கூடும். ஆனால் நல்லாட்சி அரசின் வரவுக்குப் பின்னர் நீதித்துறையின் சுயாதீனம் அதிகரிப்பதாக நம்பப்பட்ட வேளையில்தான் செல்வி வித்தியாவின் கொலை இடம்பெற்றது. கொலையின் பின்னர் சமூக அமைதி குலைவிற்கான வாய்ப்புக்கள் தென்பட்டன. எப்போதும் போலவே நீதி இருட்டடிப்புச் செய்யப்படும் என்றே மக்கள் நம்பினர்.

ஆனால் 26.05.2016 அன்று நீங்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து செல்வி வித்தியாவினது பெற்றோருக்கு வழங்கிய உறுதிமொழிகள் வித்தியா குடும்பத்தினரதும் எமது சமூகத்தினதும் நம்பிக்கைகளைப் பலம் பெறச் செய் தது.

ஆனால் அண்மைக் காலங்களில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்ற வித்தியா கொலை வழக்கினை மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்படவுள்ள நிலையில் அதனைக் கொழும்பிற்கு மாற்றுவதற்கு முயற்சிக்கப்படுகின்ற தகவல்கள் அதிர்ச்சி அளிக்கின்றன. யாழ்ப்பாண நீதிநியாயாதிக்க எல்லைக்குள் இவ்வழக்கு நடத்தப்படுவதையே வித்தியா குடும்பத்தினரும் நீதிமீதான ஆர்வலர்களும் விரும்புகின்றனர். யாழ்ப்பாணத்திலே நீதிமன்ற மொழியாக தமிழ் பயன்படுத்தப்படுவதும், நம்பத்தகுந்த நீதித்துறையினர் பணியில் இருப்பதும், கொழும்பிற்கு மாற்றுவதால் எழுகின்ற செலவீனங்களை தாங்கும் சக்தி வித்தியா குடும்பத்திற்கு இல்லை என்பதாலும் குறித்த வழக்கு யாழ்ப்பாணத்தில் ட்ரஜல் அற்பார் (Trial at Bar) முறையிலான நீதிமன்றத்திலேயே நடைபெற வேண்டும். என்பதே மக்களது எதிர்பார்ப்பு. வரலாற்றில் பல தடவைகள் இத்தகைய வழக்குகள் தென்னிலங்கைக்கு மாற்றப்பட்டு நீதிவழங்குவது தடுக்கப்பட்டும் தாமதப்படுத்தப்பட்டும் வந்தமை எமது மக்களின் மனங்களில் மாறாத விடயமாக பதிவாகியுள்ளது. அதனால் இவ்வழக்கினை கொழும்பிற்கு மாற்றுவது தொடர்பில் அவரகள் கொண்டி ருக்கும் சந்தேகங்களில் அதிக நியாயங்கள் உண்டு என்பதை தங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

எனவே மேற்குறித்த விடயங்களை ஆராய்ந்து நீதித்துறையின் சுயாதீனம் நிலைபெறும் வகையில் வித்தியா கொலை நிகழ்ந்த நியாயாதிக்க எல்லைக்குள் வாழ்கின்ற மக்களின் நம்பிக்கை பெருகும் வகையில் குறித்த வழக்கினை யாழ்ப்பாண நீதிநியாயாதிக்க எல்லைக்குள் நடத்துவதே பொருத்தமானது என்பதை தங்களின் கவனத்திற்கு பணிவுடன் அறியத் தருகின் றேன்." என்று அக்கடிதத்தில் சிறிதரன் எம்.பி குறிப்பிட்டுள்ளார்.(இ-7)

# அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கம்பன் விழா-2017

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 2017ஆம் ஆண்டிற்கான "கம்பன் விழா" எதிர்வரும் ஜூன் மாதம் 23ஆம் திகதி முதல் நான்கு நாட்கள் நல்லூரில் நடைபெறவுள்ளது. இவ்வாண்டுக் கம்பன் விழாவினையும் வழமைபோல மிகச் சிறப்பாக நடத்த அகில இலங்கைக் கம்பன் கழகம் இறையருள் வேண்டி ஆவன செய்து வருகிறது.

இவ்விழாவின் காலை நிகழ்ச்சிகள், நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள கம்பன் கோட்ட மேல் மண்டபத்திலும், மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீ துர்க்கை அம்மன் மணி மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. இவ்விழாவில் நம் நாட்டு, தமிழ் நாட்டு அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு கம்பன் புகழ்ப் பாடிக் கன்னித்தமிழ் வளர்க்க உள்ளனர்.

வழமைபோல இவ்வாண்டும் பட்டிமண்டபம், வழக்காடு மன்றம், கவியரங்கம், கருத்தரங்கம், இலக்கிய ஆணைக்குழு, இலக்கியப் பேருரை, விவாத அரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் இவ்விழாவில் நடைபெற உள்ளன.

விழாவில் கலந்து கொள்ள விரும்புவோர் தனிப்பட்ட அழைப்பிதழைப் பெற வேண்டின் கம்பன் கோட்டம், இல. 300, கோயில் வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு தங்கள் முகவரியை அனுப்பி வைக்கலாம்.

கம்பகாவியத்தினூடு தமிழ் இன்பம் பருகக் காத்திருக்கும் அன்பர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி கம்பன் கழகம் வேண்டி நிற்கின்றது. (இ-7)

# பிரதமர் வாக்குறுதியை நிறைவேற்றும் வரை வடக்கு பட்டதாரிகளின் போராட்டம் தொடரும்

(யாழ்ப்பாணம்)

பிரதமர் தனது வாக்குறுதியை நிறைவேற்றும் வரை தமது போராட்டம் சுழற்சி முறையில் முன்னெடுக் கப்படும் என வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பட்டதாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அதன்போது பட்டதாரிகளுக்கு கட்டம் கட்டமாக வேலைவாய்ப்பு வழங்குவதாகவும் முதலில் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வார காலத்தில் சிறு தொகையினருக்கும் பின் ஏனையவர்களுக்கும் கட்டம் கட்டமாக வழங்குவதாக உறுதியளித்திருந்தார். அத்துடன் அவர்களால்மேற்கொள்ளப்படும் கவனயீர்ப்பு போராட்டத்தினை கைவிடுமாறும் கோரியிருந்தார்.


இது தொடர்பில் நேற்றைய தினம் பட்டதாரிகள் ஒன்றுகூடி தமது தீர்மானத்தினை அறிவித்திருந்தனர்.

பலருடைய வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துள்ளோம். ஆகவே எமக்கு அடுத்து வரும் பட்டதாரிகளுக்கு இந்த நிலை ஏற்படக்கூடாது. எனவே எமக்கான சரியான முடிவை விரைவில் வழங்க வேண்டும்.

வாக்குறுதிகளை நம்பி போராட்டங்களை கைவிட முடியாது. வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்வரை சுழற்சி முறையில் போராட்டம் நடைபெறும்.

சமுர்த்தி மற்றும் ஆரம்ப தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்களிலும் பட்டதாரிகளை உள்வாங்குவதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்டவர்கள் எடுக்க வேண்டும்.

விரைவில் எமது கோரிக்கைகளை நிறைவேற்ற அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.(இ-9)



யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மருத்துவ கண்காட்சியில் பிரதி சுகாதார அமைச்சர் யாழ். நீரிழிவுக் கழக காட்சிக் கூடத்தில் நீரிழிவு பரிசோதனை மேற்கொள்வதையும் அருகில் நீரிழிவுக் கழகத் தலைவர் தி.மைக்கல், செயலாளர் க.கணபதி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## 'தூளி'கவிதை ஓவிய தொகுப்பு வெளியீடு

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தால் நடத்தப்படும் மானியூர் ரட்ணேசின் தூளி எனும் கவிதை ஓவியத்தொகுப்பு நாளை மறுதினம் 24 ஆம் திகதி புதன்கிழமை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் கலந்து கொள்வார். (இ-7)







வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலராக சண்முகராஜா சிவஸ்ரீ அண்மையில் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

47

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



கூட்டு அறிக்கையில் தாம் கையொப்பமிடவில்லை என ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஜெனிவாவில் வைத்துத் தெரிவித்த போது தமிழ் மக்கள் அதிர்ந்து போயினர்.

தமிழ் மக்களின் அரசியல் தலைமை ஏதோ காரணத்திற்காகத் தடம்புரள்கிறது என்ற உண்மையை தமிழ் மக்கள் உணரத் தலைப்பட்டனர்.




பொதுவில் ரெலோ அமைப்பில் இருக்கக்கூடிய சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் போன்றவர்கள் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு தமிழ் மக்களின் உரிமை என்ற விடயத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி நிற்கையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மட்டும் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை போடுகின்ற ஆட்டத்திற்கு அசைந்தும் இசைந்தும் போவது அவர் மீதான நன்மதிப்பைக் கடுமையாகப் பாதித்துள்ளதெனலாம்.

பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்கியதன் மூலம் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை எது சொன்னாலும் அதற்குத் தலை அசைக்கின்ற ஒருவராக செல்வம் அடைக்கலநாதன் செயற்படுவதால் கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் என்பன தமிழ் மக்கள் சார்ந்து ஒட்டுமொத்த முடிவை எடுப்பதில் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

இவை ஒருபுறம் இருக்க 14.09.2015 இல் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் 30 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகியது.

அன்றையதினம் இலங்கை அரசின் பிரதிநிதியாக வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் உரையாற்றுகின்றார். அவரின் உரை சர்வதேச விசாரணை என்பதை நிராகரிப்பதாக இருந்ததுடன் உள்ளக விசாரணைக்கு அனுமதியளிக்குமாறு கேட்பதாகவும் இருந்தது.

இலங்கையில் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி இல்லாமல் போய் நல்லாட்சி பொறுப்பெடுத்த பின்பு, நடக்கின்ற ஐ.நா. மனிதவுரிமைகள் கூட்டத் தொடரில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஆற்றுகின்ற உரையை சாதகமாகப் பரிசீலிக்க முடியும் என்பது போல வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் முகபாவனைகள் அமைந்திருந்தன.

இலங்கையின் கோரிக்கை தொடர்பில் 01.10.2015 அன்று அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்து ஒரு பிரேரணையை முன்வைக்கின்றன.

அதில் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரிக்கும் நீதி விசாரணையில் வெளிநாட்டு வழக்கறிஞர்கள் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் எனினும் இதனை இலங்கை அரசின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள வேண்டும் எனவும் முன்மொழியப்படுகின்றது.

இப்பிரேரணை ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் பிரதிநிதிகளால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதேநேரம் அமெரிக்காவும் பிரிட்டனும் கொண்டுவந்த மேற்படி பிரேரணைக்கு இலங்கை அரசும் தனது சம்மதத்தைத் தெரிவித்துக் கொண் டது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது, வன்னிப் போரில் நடந்த போர்க்குற்றம் குறித்த தீர்மானம் ஜெனிவாக் கூட்டத் தொடரில் முதற்தடவையாக எடுக்கப்பட்ட போது சர்வதேச விசாரணையை வலியுறுத்தி பேரவையின் பிரதிநிதிகளின் ஆதரவைப் பெறுவதற்கு மிகக் கடுமையாகப் பாடுபட்ட அமெரிக்கா இலங்கையின் ஆட்சி மாற்றத்தோடு தனது நிலைப்பாட்டையும் மாற்றிக் கொண்டது.

## சர்வதேச விசாரணைக்கு மாற்றீடாக கலப்பு நீதி விசாரணைப் பொறிமுறை

இது தமிழ் மக்களுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது. ஆட்சி மாறாமல் மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருந்திருந்தால் சர்வதேச விசாரணை என்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் நிகழாமல் இருந்திருக்குமோ என்று எண்ணுமளவில் நிலைமை இருந்தது.

தமிழ் அரசியல் தலைமை இராஜதந்திரத்துடன் செயற்பட்டிருக்குமாக இருந்தால், மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பதற்கு இடம் கொடுத்திருக்க வேண்டும் எனக் கூறுவோரும் உளர்.

அதாவது மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் ஜனாதிபதி ஆசனத்தில் இருந்திருந்தால் அவர் மீது சர்வதேச விசாரணை நிச்சயம் இடம்பெற்றிருக்கும் என்பது இவர்களின் கருத்து.

இக்கருத்தை அடியோடு நிராகரித்து விடுவதும் அவ்வளவு பொருத்தப்பாடல்ல.

ஏனெனில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் உரையாற்றி சர்வதேச விசாரணைக்கு மாற்றீடாக கலப்பு நீதி விசாரணைக்கான அனுமதியை பெற்றுக் கொண்ட' போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியது; வெற்றிவீரர்களை மின்சார நாற்காலியில் இருந்து நாம் காப்பாற்றி விட்டோம் என்பதுதான்.

ஆக, மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருந்திருந்தால் அவருக்கு மின்சார நாற்காலித் தண்டனை நிச்சயம் கிடைத்திருக்கும் என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்து.

ஆக, மகிந்த தேர்தலில் தோற்றதால் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை எடுத்துக் கொண்டோம். எங்கள் நல்லாட்சியில் ஐ.நா. பேரவையின் தீர்மானத்தையே மாற்ற முடிந்தது. இந்த மாற்றம் தான் மகிந்த ராஜபக்ஷவையும் அவர் தரப்பையும் மின்சார நாற்காலியில் இருந்து காப்பாற்றியது என்பதாக ஜனாதிபதி மைத்திரி கருத்தாக அமைந்தது.

(வளரும்)

-புருசோத்தமன்-

# வடக்கு மாகாண பெண்கள் சாரணிய பொதுக்கூட்டம் வவுனியாவில் நடைபெற்றது





வடக்கு மாகாண பெண்கள் சாரணிய வருடாந்த பொதுக்கூட்டம் வவுனியாவில் நடைபெற்றது. வடக்கு மாகாண பெண்கள் சாரணிய வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் சாரணிய வடக்குமாகாண ஆணையாளர் திருமதி.நீ.தர்மகுலசிங்கம் தலைமையில் வவுனியா சைவப்பிரகாசா மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கல்லூரியின் அதிபர் பாக்கியநாதன் கமலேஸ்வரி, வலயக்கல்வி பணிப்பாளர் எம்.ராதாகிருஸ்ணன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பெண்கள் சாரணிய சங்கத்தலைவி அணோஜா பெனாண்டோ. பெண்கள் சாரணிய பிரதம ஆணையாளர் யஸ்மின் ரகீம், பெண்கள் சாரணிய பிரதி ஆணையாளர் விசாக்கா திலகரட்ண மற்றும் சாரணிய மாணவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய வவுனியா வலயக்கல்வி பணிப்பாளர் எம்.இராதாகிருஸ்ணன் நல்ல தலைமைத்துவத்தை ஆண்களும் பெண்களும் இணைந்து கல்விகற்கும் போது உருவாக்க முடியும். அத்துடன் அந்த கலாசாரம் இன்று மாற்றமடைந்து வருவதாகவும் தெரிவித்தார். (2-250)

# பார்த்தீனியச் செடிகளால் சூழ்ந்து காணப்படும் அரச விடுதிக் காணி

வவுனியா மாவட்ட சமூக சேவைத்திணைக்களத்திற்கு அருகாமையில் உள்ள அரச விடுதிக் காணியின் உள்ளேயும் முன்பக்கமாகவும் பெருமளவிலான பார்த்தீனிச்செடி வளர்ந்து காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

முற்றிய நிலையில் காணப்படும் பார்த்தீனியத்தால் மேலும் கூடுதலான விதைப் பரம்பல் ஏற்பட்டு பெருக்கமடையும் நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதனால் பார்த்தீனியத்தைக் கட்டுப்படுத்த முடியாத அபாயகரமான நிலையுள்ளதாகவும் இதன் சுற்றாடலில் உள்ளோரால் கவலை தெரிவிக்கப்படுகிறது. இச்செடி காணப்பட்டால் தண்டப் பணம் அறவிடப்படும் என்ற அறிவித்தல்கள் காணப்படும் நிலையில் அரச விடுதி விலக்கானதா? எனவும் மக்களால் விசனம் எழுப்பப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் ஏற்ற நடவடிக்கை மேற்கொண்டு பார்த்தீனியத்தை இல்லாதொழிக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-254)




# சமுர்த்திப் பயனாளிகள் பங்கேற்ற பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்





கிளிநொச்சி ஸ்கந்தபுரம் சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் சித்திரை புதுவருடத்தையொட்டி அண்மையில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வன்னேரிக்குளம், ஆனை விழுந்தான், அக்கராயன்குளம், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், கோணாவில், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், சிவநகர், உருந்திரபுரம் மேற்கு, உருந்திரபுரம் வடக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த சமுர்த்திப்பயனாளிகள் பங்குபற்றியிருந்தனர். இதன்போது பாரம்பரிய விளையாட்டுக்களான கயிறு இழுத்தல், தேங்காய் துருவுதல், கிடுகு பின்னுதல், கிளித்தட்டு போன்ற விளையாட்டுக்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-5-272)

# இளைஞர், யுவதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு தொழில் பயிற்சி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் "நெஸ்கோ" கூட்டுறவுப் பிரிவின் ஏற்பாட்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட பிரிவின் ஒழுங்குபடுத்தலிலும் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்/ யுவதிகளுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தொழில் பயிற்சிகளை வழங்கும்வகையில் "மீனைக் கொண்டு உணவு பதனிடல் மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தல்" எனும் தலைப்பில் வதிவிடச் செயலமர்வு நடைபெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி மாணிக்கப்போடி - சசிகுமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இளைஞர்கள் / யுவதிகளில் அநேகம்பேர் தொழில் முயற்சிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

இந் நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வளங்களின் மூலப் பொருட்கள் தென்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அதனைக் கொண்டு பல்வேறு வடிவங்களில் பொருட்கள் தயாரிக்கப்பட்டு மீளவும் வடக்கு மாகாணம் உட்பட நாடு தழுவிய ரீதியில் அதிக இலாபத்துடன் விற்பனை செய்யப்படுகின்றது.

இதன் மூலம் அங்குள்ள பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற நிலையிலும் இங்குள்ள பலரும் வறுமையுடன் போராடி வரும் நிலையிலும் காணப்படுகின்றனர்

இதனைத் கருத்தில் கொண்டு இங்குள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி இங்கேயே முடிவுப் பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பில் இத் துறைசார்ந்த நிபுணத்துவம் பெற்ற வளவாளர்கள் மூலம் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். இதனடிப்படையில், முதல் கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகமாக காணப்படும் கடல்வளம்மூலம் பெறப்படும் மீனைக் கொண்டு உணவு பதனிடல் மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்திசெய்து விற்பனை செய்வது தொடர்பான பயிற்சி நெறியை முன்னெடுக்கவுள்ளோம்.

இந்த வதிவிடச் செயலமர்வு இரண்டு நாட்களைக் கொண்டதாகவும் எதிர் வரும் 24,25 முறையே புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்களில் முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள அமைதித் தென்றல் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இதில், 26 இளைஞர்களையும், 4 யுவதிகளையும் உள்ளடக்கிய 30 பேர் கொண்ட அணி பயிற்சி பெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கு பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப் படவுள்ளனர். எதிர்காலத்தில் இவர்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்களையும்,

ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# உறவுகளைத் தேடி பரிதவிப்பு மாதங்கள் கடந்தும் முடிவில்லை





முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்து வருகின்ற தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்றுடன் 76 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக முன்னெடுத்துள்ள தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் இரவு- பகலாக எந்தவித முடிவுகளும் எட்டாப்படாத நிலையில் தொடர்கின்றது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு தகுந்த பதில் கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லையென அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-281)

# மின்னியலாளர், மருத்துவதாதி உதவியாளர் பயிற்சி நெறிகளுக்கு நேர்முகத் தேர்வு

(மல்லாவி)

மத்திய அரசிற்குட்பட்ட திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கி வரும் "தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின்" கிளிநொச்சி மாவட்ட பிரிவினால் கட்டணம் ஏதுவுமின்றி நடத்தப்படவுள்ள மின்னியலாளர் மற்றும் மருத்துவத் தாதிய உதவியாளர் ஆகிய இரு பயிற்சி நெறிகளுக்குமான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளதாக தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட பிரிவின் முகாமையாளர் எஸ்.எச்.எம். நளீம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

போர்ச்சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட நிலையில் தொழில் முயற்சிகளின்றி இருக்கும் 16-35 வயதுக்கும் உட்பட்ட இருபாலாரும் மற்றும் பாடசாலை கல்வியை முடித்துள்ள அல்லது அதனை விட்டு இடை விலகியவர்களுக்குமான பல்வேறு தொழிற் பயிற்சி நெறிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது மின்னியலாளர், மருத்துவத் தாதிய உதவியாளர் ஆகிய இரு பயிற்சி நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள், யுவதிகள் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறிகளுக்கான நேர்முகத் தேர்வு கிளிநொச்சி A -9 வீதி ஆனந்தபுரத்திலுள்ள தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு மின்னியலாளர் பயிற்சி நெறிக்கான நேர்முகத் தேர்வும், அன்றைய தினமே முற்பகல் 11 மணிக்கு மருத்துவ தாதிய உதவியாளர் பயிற்சி நெறிக்கான நேர்முகத் தேர்வும் நடை பெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் இணைய விரும்பும் இருபாலாரும் தேசிய ஆள் அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ். அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் உட்பட பொருத்தமான ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் அதன் நிழல் பிரதிகளுடன் நேரில் சமுகமளிக்குமாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப் படுவோர் 021-228 5615 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# ஆளணிப் பற்றாக்குறையினால் மக்களுக்கான தேவைகள், சேவைகள் வழங்குவதில் இடர்பாடு

## கரைதுறைப்பற்று பிரதேசசபை செயலாளர் சபேசன் தெரிவிப்பு

(மே்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபையில் பல்வேறு பிரிவுகளில் ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருவதால் பொது மக்களுக்கான தேவைகளையும் சேவைகளையும் நிறைவேற்றுவதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் சி. சபேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கரைதுறைப்பற்று பிரதேசசபையானது 728. 6 சதுர மைல் தூரம் கொண்ட ஒரு பரந்துபட்ட பிரதேச சபையாகும்.

இங்குள்ள 46, கிராம அலுவலர் பிரிவுகளிலும் மொத்தம் 12 ஆயிரத்து 725, குடும்பங்களைச் சேர்ந்த 40, ஆயிரத்து 556 அங்கத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது அதிகரித்துள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப ஆளணித் தொகுதியிலும் மாற்றம் செய்ய வேண்டும் என எமது மேலதிகாரிகளுக்கு தெரியப் படுத்தியுள்ளோம்.

உதாரணமாக சுகாதார பணியாளர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள், நூலகர்கள், வரி அறவீட்டாளர்கள் உட்பட பல்வேறு பதவி நிலைகளுக்கு ஆளணிவளப் பங்கீடு அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறான நிலையில், அனைத்து தரப்பினருக்குமான பிரதேச சபையின் சேவைகளையும், தேவைகளையும் பிரதேச சபையின் கீழுள்ள முள்ளியவளை, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு, செம்மலை, கொக்கிளாய் ஆகிய 5 உப அலுவலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது எமது சபையின் கீழ் 4 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில், 2 பேர் மட்டும் கடமையில் உள்ளனர்.

இதேபோன்று, வரி அறவீட்டாளர்கள் 4 கடமையாற்ற வேண்டிய நிலையில், தற்போது 2 பேர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

முகாமைத்துவ -உதவியாளர் 15 பேர் கடமை யாற்ற வேண்டிய நிலையில், தற்போது 12 பேர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 8 பேர் கடமையாற்ற வேண்டிய நிலையில், தற்போது 6 பேர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

நூலகர்கள் 3 பேர் தேவையான இடத்தில் 3 இடங்களுமே வெற்றிடமாகவுள்ளன.

ஆயுள்வேத வைத்தியர் ஒருவருக்கே அனுமதி காணப்படும் நிலையில் இதனை 2 ஆக அதிகரிக்க வேண்டியுள்ளது.

இதே போன்று, சுகாதார பணியாளர்கள் 16 பேருக்கு அனுமதி காணப்படும் நிலையில், இந்த பணி நிலைக்கான ஆளணி யினர் தொகையும் அதிகரிக்கப்பட வேண்டும்.

5 சாரதி வெற்றிடங்களுக்கு 5 பேர் கடமையாற்றும் நிலையில் மேலும் பௌசர் வண்டிகளுக்கும் கழிவு முகாமைத்துவ வாகனங்களுக்கான சாரதிகள் பற்றாக்குறை காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




## 19 சிறுவர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை



இந்தியாவில் பிறந்த இலங்கை அகதிகளின் பிள்ளைகள் 19 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழக அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் போதே இப் பிரஜாவுரிமை வழங்கி வைக்கப் பட்டது.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவுக்கு சென்று அங்கு அகதி முகாம்களில் வசித்து வந்த நிலையில் சிலர் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளனர்.

தற்போது அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று நாடு திரும்பிய நிலையில் பிரஜாவுரிமை பிரச்சினை காரணமாக சிறுவர்கள் பலர் தமது கல்வியை சீராக தொடர முடியாத நிலை ஏற்பட்டதுடன், அசௌகரியங்களையும் எதிர்நோக்கினர்.

இந்நிலையில் இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகம் அவர்களுக்கான பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தது.

அதன்படி 19 சிறுவர்களுக்கான பிரஜாவுரிமை மேற்படி கழகத்தின் தலைவி சின்னத்தம்பி சூரியகுமாரியால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கழக ஊழியர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# கணவனைக் கடத்தியவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள்


## மனைவி கண்ணீருடன் தெரிவிப்பு

எனது கணவரை கடத்தியவர்கள் இன்றும் உயிருடன் இருக்கின்றார்கள். ஆனால் கடத்தப்பட்ட தனது கணவன் தொடர்பில் இதுவரை எந்தவொரு தகவலும் இல்லை என மனைவி ஒருவர் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமது உறவுகள் தொடர்பில் உரிய பதிலை வழங்குமாறு கோரி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்னாள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளோரின் உறவுகள் முன்னெடுத்துள்ள தொடர் போராட்டம் நேற்றுடன் 76 ஆவது நாளை எட்டியுள்ளது.

இந்த நிலையில் தனது கணவன் கடத்தப்பட்டு காணாமல்ஆக்கப்பட்டுள்ள நிலையில் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தனது கணவனை தேடி வரும் மனைவி கவலை வெளியிட்டார்.

தனது கணவர் உயிருடன் உள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தபோதும் இதுவரை விடுவிக்கப்படவில்லை என கணவனை தேடிவரும் மற்றுமொருவர் குறிப்பிட்டார்.




இதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் தொடர் போராட்டம் இன்றும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. (2-250)

# கேப்பாப்பிலவு முகாம் முன்பாகவுள்ள பாரிய தொட்டிகளை அகற்ற கோரிக்கை

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு இராணுவ படை கட்டளை தலைமையகம் முன்பாகவுள்ள பாரிய 3 தொட்டிகளையும் அகற்றுமாறு பொது மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது



முல்லைத்தீவு கேப்பாப்பிலவு ,இராணுவ படை கட்டளை தலைமையகம் முன்பாக இராணுவம் பாரிய 3 தொட்டிகளை அமைத்துள்ளது எந்தவித பயன்பாடுகளுமின்றி அமைக்கப்பட்டுள்ள இந்த தொட்டியில் கால்நடைகளும் காட்டு விலங்குகளும் தண்ணீர் குடிப்பதற்கு வரும்வேளை தண்ணீரினுள் விழுவதும் இராணுவமும் மக்களும் மீட்பதுமாக தொடர்கிறது.எனவே எந்தவித பயன்பாடும் இன்றி கட்டப்பட்டுள்ள இந்த 3 தொட்டிகளையும் அகற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-281)

## முல்லையில் ஆடைத்தொழிற்றுறை பயிற்சி நிலையம் ஆரம்பிப்பு

### முதற்கட்டமாக 35 பேருக்கு பயிற்சி - அரசாங்க அதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் வாய்ப்புக்களின்றி வறுமைக் கோட்டின் கீழ் போராடி வரும் மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருவதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

மக்களிற்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள் தொடக்கம் ஏனைய தொழில் முயற்சிகள் வரை பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு கிடைக்கும் வகையில், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வழங்கி வருகின்றோம்.

இதனடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆடைத் தொழிற்றுறைப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமது மாவட்டச் செயலகமும் முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கு பொறுப்பான இராணுவ கட்டளைத் தளபதியின் ஒத்துழைப்புடனும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்குட்பட்ட 6 பிரதேச செயலக பிரிவுகளிலும் இருந்தும் சுமார் 150 இளைஞர், யுவதிகளுக்கு இந்த பயிற்சி நெறி தொடர்பிலான நேர் முகப்பரீட்சை நடத்தப்பட்டுள்ளன.

இவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 35 பேருக்கு முதல் கட்டமாக ஆடைத் தொழிற்பயிற்சி . வழங்கப்படவுள்ளது.

இதனையடுத்து. படிப்படியாக ஏனையவர்களுக்கும் இந்த பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது.

இந்த பயிற்சி நெறி தொடர்பில் தனியார் ஆடைத் தொழிற்றுறை நிறுவனம் ஒன்று எமக்கு உதவ முன்வந்துள்ளது.

இதன் மூலம் எதிர்வரும் காலங்களில் ஆடைத் தொழிற்றுறையில் 300 இளைஞர், யுவதிகளிற்கு தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படும் என அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# பச்சிலைப்பள்ளி நடமாடும் சேவையில் அமைச்சர் வஜிர அபேவர்த்தன பங்கேற்பு

பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களிற்கான நில மெஹெவர ஜனாதிபதி மக்கள் சேவை தேசியத் திட்டத்தின் நடமாடும் சேவை நேற்று நடைபெற்றது.

பளை மத்திய கல்லூரியில் இடம்பெற்றுவரும் குறித்த நடமாடும் சேவையை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன், அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நடமாடும் சேவையில் 2 தம்பதியினருக்கு பிந்திய திருமண பதிவு இடம் பெற்றது. அவர்களிற்கான சாட்சி பத்திரத்தில் அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் கையொப்பமிட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து குறித்த பிரதேசத்தில் உள்ள மக்களிற்கான அரச ஆவணங்களை பெற்றுக்கொள்ளல், சாரதி அனுமதி பத்திரம் உள்ளிட்டவற்றிற்கான நடமாடும் சேவை தொடர்ந்தும் இடம்பெற்றது. (2-15)



# கள்ளக்கடத்தலில் கட்டுநாயக்க விமான நிலைய ஊழியர்கள்?

## சிக்கியது ஆதாரம்

(கொழும்பு)

விமானத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு வியாபார நடவடிக்கைகளுக்கு விமான நிலைய ஊழியர்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றனரா என்பது குறித்து ஆராய விமான நிலைய சுங்கப் பிரிவினர் விஷேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் தங்கம் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் வழங்கிய தகவலுக்கு அமைய இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக, சுங்க பிரதிப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

மலேசியாவில் இருந்து இலங்கைக்கு வந்த விமானத்தில் பணியாற்றிய ஊழியர் ஒருவர் வசம் இருந்து சுமார் 35 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான தங்கம் கைப்பற்றப்பட்டது.

இதற்கமைய, இந்த வியாபாரம் குறித்து விமான நிலைய சுங்கப் பிரிவினர், சம்பந்தப்பட்ட விமான நிலையத்தின் உதவியுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக, பராக்கிரம பஸ்நாயக்க கூறியுள்ளார். (இ-7)

# பள்ளிவாசல்களுக்கு பாதுகாப்பு வேண்டும்

## அப்துல் சத்தார் வலியுறுத்து



(கொழும்பு)

நோன்புகாலம் நெருங்குகின்ற நிலையில், பெண்கள் உட்பட முஸ்லிம்கள் பள்ளிவாசல்களுக்கு செல்வதற்குரிய தேவை இருப்பதால் உடனடியாக முஸ்லிம்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து தருமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் தேசிய அமைப்பாளர் அப்துல் சத்தார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை மல்லவபிட்டிய ஜும்ஆப் பள்ளிவாசல் மீது நடந்த பெற்றோல் குண்டுத் தாக்குதல்தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் முற்போக்கு முன்னணியினால் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம்களின் உடைமைகளுக்கும் உயிர்களுக்கும் உரிய பாதுகாப்பை வழங்குமாறு கோரி குருநாகல் பிரதி பொலிஸ்மா அதிபர் கிரகரி குறேயைச் சந்தித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

முப்பது வருடகால யுத்த முடிவின் பின்பு முஸ்லிம்களை இலக்கு வைத்து மீண்டும் நாட்டில் ஒரு யுத்தத்தை உருவாக்கும் நோக்குடன் சிங்கள முஸ்லிம் மக்களுக்கிடையில் பிரச்சினைகளை உருவாக்கக்கூடிய சூழ்நிலையினை சில இனவாதிகள் தோற்றுவித்து வருகின்றனர்.

அளுத்கம கலவரம் தொடக்கம் இன்று வரையில் பல பள்ளிவாசல்களுக்கும் மக்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதுடன் அச்சத்துடன் வாழும் சூழ்நிலையேற்பட்டுள்ளது" என அப்துல் சத்தார் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசைக் கவிழ்ப்பதற்கு ஆளும் தரப்பே சூழ்ச்சி!

## தேசிய புலனாய்வுத் துறை தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஆளும் கட்சிக்கு உள்ளேயே சூழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேசியப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சில அமைச்சரவை அமைச்சர்கள் கூட்டு எதிர்க்கட்சியுடன் இரகசிய தொடர்புகளைப் பேணி வருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் இந்த சதித்திட்டத்தில்இணைந்து கொண்டுள்ளதாகவும் அமைச்சரவையில் அங்கம் வகித்துக் கொண்டே ஜனாதிபதியையும் பிரதமரையும் பிழையாக வழிநடத்த முயற்சிப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சில அமைச்சர்களை இலக்கு வைத்து இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்ற நிலையிலேயே அமைச்சரவையில் மாற்றம்செய்யப்படுவது குறித்து ஆராயப்பட்டுள்ளது. (இ-7)

# மாணிக்கம் சுப்பிரமணியத்தின் இழப்பு சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாதது



சமூக ஜோதி, வித்தியாதான கீர்த்தி அமரர் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் ஓராண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

02.06.2016 அதிகாலை 4.30 மணியளவில் அமரர் சுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்தி எனக்குக் கிடைத்தது. எங்கள் குடும்ப உறுப்பினர் போலவும் உடன் பிறவாச் சகோதரன் போலவும் பழகிய எங்களுக்கு இச் செய்தி பெரும் அதிர்ச்சியை கொடுத்தது மட்டுமல்லாமல் அதில் இருந்து விடுபட பல மணி நேரங்கள் ஆகியது.

மணியண்ணர் என அன்போடு நான் அழைப்பதும் தம்பி நகுலன் என என்னை அவர் அழைப்பதும் எங்களுக்கிடையிலான இறுக்கமான உறவுகளை வெளிப்படுத்துவதாகும். கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு மேலாக அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டடம் அவரின் நிதியினால் அமைக்கப்பட்டபோது தான் பழைய மாணவர் சங்கச் செயலாளராகவும் அமரர் நடராசா அவர்கள் தலைவராகவும் இருந்தோம். இக் காலப்பகுதியில்அவரின் இணைப்பாளராக இருக்க எனக்குக் கிடைத்ததை நான் பெரும் பேறாகவே கருதுகிறேன்.

இக் காலப்பகுதியில் மணியண்ணரின் நிதி உதவியினால் பாரிய வளங்கள் பெறப்பட்டன. இக் காலப்பகுதியில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக மூன்று மாடி வகுப்பறைக் கட்டடங்கள், விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கமைதானத்தில் அமைந்துள்ள மாலதி கலையரங்கம் கல்லூரியின் கிழக்குப் பக்கமாக சிவத் தமிழ் மானிடவிடியற் கழகம் இயங்குகின்ற காணியும் கட்டடமும் இவரினால் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

இன்று இவற்றின் பெறுமதி பல கோடி ரூபாவிற்கு மேலாகவே அமையும். மேலும் கொக்குவில் கிராமத்தில் பல வேலைத்திட்டங்கள் இவரினால் வழங்கப்பட்டது. இவற்றுக்கு உதவியாளராக இவருடன் செயற்பட்டேன் என்பது என்னை மகிழ்வடையச் செய்கின்றது. இதனை நான் பெரும் பேறாகவே கருதுகின்றேன். அண்மையில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு நவீன வசதிகளுடனான மாதிரி வகுப்பறை ஒன்றினை பல இலட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார்.

இதற்கு முன்பாகவும் இதே பாடசாலைக்கு கேட்போர் கூடம், வகுப்பறைப் பாவனைக்கு இரண்டாவது மாடிக் கட்டடத்தினை அமைத்து பூர்த்தி செய்து கொடுத்துள்ளார்.

இவர் செய்த சேவைகள் யாழ். மாவட்டத்தில் மட்டுமல்லாது கொழும்பிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எமது கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதிய போசகராகத் திகழும் அமரர் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் இழப்பு சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் குடும்பத்தாருடன் குடும்ப அங்கத்தவர் போல் பழகியதை நினைவு கூர்ந்து மகிழ்வடைகின்றேன்.

மணியண்ணர் அவர்கள் வாரத்தில் 3,4 தடவைகளுக்கு மேலாக என்னுடன் தொலைபேசியில் நீண்ட நேரம் உரையாடுவது வழக்கம். அவருடன் உரையாடும் போது நேரம் போவதே தெரியாது.

உரையாடலின் போது தம்பி, தம்பி என அழைத்து பல நல்ல விடயங்களையும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வழங்குவார். இதனை நினைக்கும் போது என் கண்கள் குளமாகின்றன.

அமரர் அவர்களினால் செய்து கொடுக்கப்படுகின்ற சமூக வேலைத் திட்டங்கள் யாவும் அவரினால் நன்றாக பரிசீலித்தே செய்து கொடுப்பது வழக்கம். எல்லோருடைய வேண்டுதலையும் செவி மடுப்பார். ஆனால் முடிவுகளையும் தீர்மானங்களையும் தானே எடுப்பார்.

அன்னாரின் உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட சில கருத்துக்களை கீழே குறிப்பிடுகின்றேன்.

இன்றைய உலகமானது மிகவும் சுருங்கிய காலகட்டத்திலே கல்வியானது மிகப்பரந்து விரிவடைந்து கனி, மடிக்கணனி எனப் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. இவ் வளர்ச்சிக்கேற்ப பாடசாலைகளையும் விரிவடையச் செய்வது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

''அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்

ஆலயம் பதினாயிரம் நாட்டல்

அன்னயாவிலும் புண்ணியம் கோடி

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

எனவே சின்னஞ்சிறார்களின் கல்விக்கண்களைத் திறந்தால் நமது நாடே சிறப்புற்றோங்கும். அவர்களின் வளர்ச்சிக்காக வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டிய தேவை உள்ளது.

எமது சமூகத்திலே ஆலயங்களும் கல்விச்சாலைகளுமே எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுத்தன. வளர்த்துக்கொண்டே இருக்கின்றன. அந்த வகையில் ஆலயங் களுக்கு திருவிழாக்களுக்கு உதவு வதற்கு பலர் முன்னிற்பர். ஆலயங்கள் வளர்ச்சியடைய வேண்டியது எமது ஆன்மீக வளர்ச்சிக்கு அவசியமானது. ஆலயங்களின் வளர்ச்சிக்கும் புனருத்தாரண வேலைகளுக்கும் எனது பங்களிப்பைச் செய்து வருகின்றேன்.

எமது அழியாச் செல்வம் என்றும் நிலைத்திருப்பது கல்விச்செல்வமே. இச் செல்வத்தை வளர்த்தெடுப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்பது எனது நீண்ட நாள் கனவாகும்.

எனவே பிறந்தஊரிலும் என்னை சிறப்புற வளர்த்த கொழும்பு மாநகரிலும் பல பாடசாலைகளுக்கு என்னாலான உதவிகளையும் கட்டடங்களையும் கட்டிக்கொடுத்துள்ளேன்.

இந்தவகையில்2010ஆம்ஆண்டு கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு இரண்டு மாடிக் கட்டடமொன்றையும் எனது பவளவிழாவின் நினைவாக கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு இரண்டு மாடிக்கட்டடத்தையும் கட்டி மாணவச் செல்வங்களுக்கு அன்பளிப்புச் செய்துள்ளேன். எனது ஆத்ம திருப்திக்காக நான் பிறந்த ஊருக்கு கல்வி கற்ற கல்லூரிக்கு உதவுவதில் மிகவும் பெருமையடைகின்றேன்.

"என் செயலாவது யாதொன்றுமில்லை

அவனருளாலே அவன் தாள் வணங்கி"

செய்யப்பட்டவையாகும். தொடர இருக்கும் என் பணிக்கு ஆண்டவன் அருளாசி கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலையையும்கொக்குவில் தந்த அன்னையாம் எமது கல்லூரியும் சிறப்புற்றோங்க வேண்டுமெனவும் வாழத்துகின்றேன்.

மேற்குறிப்பிட்டவையாழ். கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட அமரரின் பவள் விழா நிகழ்வில் வெளியிடப்பட்ட பவளவிழா மலரில் அன்னாரின் உள்ளத்திலிருந்து வெளியிடப்பட்ட செய்தியாகும்.

எனவே அன்னாரின் ஆற்றிய பாரிய சேவைகளுக்கு பின்புலமாகவும் லட்சுமி கடாச்சமாகவும் இருந்து உதவிய மனைவி மாலதி அக்கா மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் தனிப்பட்ட ரீதியாகவும் குடும்பம் சார்பாகவும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கைநிதியம்சார்பாகவும்ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கல்விக்கு உயிர் கொடுத்தார் என்றும் மரணிப்பதில்லை

இப் பூவுலகம் இருக்கும் வரை இவர் புகழ் ஓங்கிக் கொண்டே இருக்கும்.

இ.செல்வநாதன் (நகுலன்)
(ஜே.பி)
செயலாளர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்க,
நம்பிக்கை நிதியம்.

# மாணவர்கள் - மருத்துவ எழுத்தாளர்களுக்கான நூல்

மருந்தியலாளரான நடராசா இராசநேரு தொகுத்துள்ள மருத்துவச் சொல் அகராதி என்ற நூலின் வரவானது அவசியமானதாகவும் ஒரு முக்கிய இடைவெளியை நிரப்புவதாகவும் இருக்கிறது. தமிழில் மருத்துவக் கட்டுரைகளை எழுதுபவர்கள் தாம் சொல்ல வருபவற்றை மிகத் தெளிவாகச் சொல்லுவதற்கு கைகொடுக்கும் அதேபோல அவற்றை ஆர்வத்துடன் வாசிப்பவர்களுக்கும் இந்த நூல் பெரிதும் உதவும்.

இருந்த போதும் இந்த நூலின் முக்கிய நோக்கம் அதுவல்ல. இலங்கையிலுள்ள தமிழ் மாணவர்கள் ஆங்கிலத்தில் உள்ள மருத்துவ மருந்தக மற்றும் மருத்துவத்துறை சார்ந்த துணை நூல்களை தமிழில் இலகுவாக புரிந்து கொண்டு கற்பதற்கு உதவியாக பயன்படுத்தக் கூடிய ஆங்கில, தமிழ் அகராதிகள் இல்லாத குறையினை நிவர்த்தி செய்வதன் பொருட்டு இந்த மருத்துவ சொல் அகராதியைத் தொகுத்துள்ளார் என இந் நூலுக்கான முன்னுரையை வழங்கியுள்ள வட இலங்கை மருந்தியலாளர் சங்க செயலாளரான ப. ஆர்த்திக் குறிப்பிடுவதே முக்கிய நோக்கமாகும்.




நூல் : மருத்துவ சொல் அகராதி
ஆசிரியர் :நடராசா இராசநேரு
தொடர்புகளுக்கு : 021 222 3382

எமது பகுதியில் தனியார் மருத்துவத்துறை போலவே துணை மருத்துவத் துறையும் துரிதமாக முன்னேற்றம் கண்டு வருகிறது. அரச துறையில் மட்டுமின்றி தனியார் துறையிலும் மருந்தாளர்கள், தாதியர் மகப் பேற்று மருத்துவிச்சிகள் எனப் பலதரப்பட்ட உதவியாளர்கள் பல்லாயிரக் கணக்கில் பணியாற்றுகிறார்கள்.

தனியார்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யு முகமாக துரித பயிற்சிகள் தமிழில் அவர்களுக்கு ஆரம் பிக்கப்பட்டுள்ளன. இவர்களது கல்விக்கான வழிகாட்டல் நூல்கள் தமிழில் இல்லாதிருப்பதால் ஆங்கில நூல்களையே பயன்படுத்துகிறார்கள். ஆங்கில நூல்களை தமிழ் மாணவர்கள் கற்கும் போது அவற்றைத் தெளிவாகப்புரிந்துகொள்வதற்கு இந்த நூல் நன்கு பயன்படும். 350 பக்கங்கள் வரை விரியும் இந்த நூல் தரமான ஆர்ட் தாளில் அச்சிடப்பட்டுள்ளதால் நீண்ட காலத்திற்கு தாக்குப் பிடிக்கும். ஏனெனில் கற்கும் காலத்தில் மட்டுமின்றி பின்னைய ஆண்டுகளில் உசாத்துணை நூலாகவும் பயன்படுத்தக் கூடிய நூலாகவும் இதுஇருக்கிறது.

இந்த நூலின் பெரும் பகுதியான 280 பக்கங்களில் ஆங்கில - ஆங்கில - தமிழ் மருத்துவச் சொல் அகராதி விரிகிறது. ஆங்கில மருத்துவ பதங்களுக்கான தமிழ் சொல்லைத் தருவதுடன் நின்றுவிடாது அவற்றிற்கான விளக்கங்களை ஆங்கிலத்திலும் தந்திருப்பதால் இதைக் கலைக் களஞ்சியமாகவும் சொல்லலாம். இதன் காரணமாக மாணவர்கள் குறிப்பிட்ட சொல்லிற்கானதமிழ்சொல்லை மட்டுமின்றி அதன் அர்த்தத்தையும் மிகவும் தெளிவாக புரிந்து கொள்ள உதவும்.

நூலின் மிகுதி 70 பக்கங்களையும் மிகவும் பயனுள்ள பின்னிணைப்புகள் அணி செய்கின்றன. இலங்கையில் பாவனையில் உள்ள பொதுவான மருந்துகளின் பெயர்த் தொகுப்பு, மருந்தாக்கல் இரசாயனம், உடற்கூற்றியலும் சுகாதாரமும், பொதுவான நோய்களின் பெயர்த் தொகுப்பு, பொதுவான பக்கவிளைவுகளின் தொகுப்பு முதற்கொண்டு 13 பின்னிணைப்புகள் இருப்பது நூலின் பெறுமதியை அதிகரிக்கிறது.

இந்தநூலை வட இலங்கை மருந்தியலாளர் சங்கம் வெளியிட்டுள்ளது. நூலாசிரியர் நடராசா இராசநேரு தொகுத்துள்ளார். மருந்தியலாளரான இவர் தான் வட இலங்கையில் மருந்தியலாளர்கற்கைநெறியை வட புலத்தில் ஆரம்பித்த முன்னோடி எனலாம். 2003 ஆம் ஆண்டு சாயிராம மருந்தியலாளர் கல்வி நிறுவனத்தை வட பகுதியில் ஆரம்பித்தார். அதனூடாக மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் கொடுத்து வெளிவாரி பரீட்சைக்கு தயார் படுத்தினார். இவரது பயிற்சி வகுப்புகள் காரணமாக வட பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வெளிவாரி மருந்தியலாளர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரி பட்டப்படிப்பு பிரிவில் மருந்தியலாளர் கல்வி இணைப்பாளராக பணியாற்றி வருகிறார். இத் துறையில் இவர் பெற்ற பரந்த அனுபவங்கள் துணையுடன் எழுதப்பட்ட இந்த நூல் பலருக்கும் பயன்படக் கூடியதாகும்.

டாக்டர் எம். கே. முருகானந்தன்

# நடிகரின் உயிரை காப்பாற்ற ஜனாதிபதி நடவடிக்கை!

பொலநறுவையில் சுகயீனமடைந்த நடிகர் ஒருவரை கொழும்புக்கு அழைத்து வர ஹெலிகொப்டர் வழங்கப்பட்ள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய ஹெலிகொப்டர் வழங்கப்பட்டுள்ளது.

பொலநறுவையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற தொலைக்காட்சி நாடக நடிகர் சுராங்க லக்மாலுக்கு மாரடைப்பு ஏற்பட்டமையால் அவசர சிகிச்சை அளிக்கும்வகையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

அவரின் ஆபத்தான நிலையை அறிந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய ஹெலிகொப்டர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைக்கு கலைஞர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

நடிகர் ஒருவர் தொடர்பில் ஜனாதிபதி இவ்வளவு பெரிய அர்ப்பணிப்பு செய்வது கலைஞர்கள் மீது அவர் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தியுள்ளதாக 'பிரபல நடிகரான சரத் விமலசூரி தெரிவித்துள்ளார்.

குறித்த நடிகர் கலந்து கொண்ட நிகழ்வு அரசாங்க தகவல் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சுயாதீனமாக செயற்பட்டால் அங்கத்துவம் இழக்கப்படும்

## சு.க. செயலாளர் கூறுகிறார்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் எந்தவொரு உறுப்பினருக்கும் மாகாண சபைக்குள் சுயாதீனமாக செயற்பட முடியாது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியிலுள்ள ஒரு மாகாண சபை உறுப்பினராவது இவ்வாறு கட்சியின் கொள்கையை மீறும் வகையில் சுயாதீனமாக செயற்பட தீர்மானம் எடுப்பாராயின், அவர் உடனடியாக கட்சியிலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள் அக்கட்சியின் கொள்கைக்கு ஏற்ப செயற்பட வேண்டும் எனவும், அவ் வாறில்லாமல் தமது தனிப்பட்ட தீர்மானங்களின்படி செயற்பட முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தலைமை பிக்கு மீது கடுமையான தாக்குதல்

பண்டாரவளை - ஹில்ஓய விஹாரையின் தலைமை பிக்கு மீது கடுமையான தாக்குதல்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு வேளை நடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த தாக்குதல் சம்பவம் குறித்து சந்தேகத்தின் பேரில் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பிக்கு மத நிகழ்வு ஒன்றுக்கு சென்றுவிட்டு தனது வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது இந்த தாக்குதல் சம்பவம் ஏற்பட்டுள்ளது. வாகனத்தை வழிமறித்த சிலர் பிக்குவையும், வாகனத்தின் சாரதியையும் கடுமையாக தாக்கியுள்ளனர்.

படுகாயமடைந்த பிக்குவும் வாகனத்தின் சாரதியும், பண்டாரவளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த தாக்குதல் சம்ப வம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (இ-7)

# ஹற்றனுக்கு சுற்றுலா சென்ற இளைஞர்களுக்கு குளவிக் கொட்டு

பிலியந்தலையிலிருந்து ஹற்றனுக்கு சுற்றுலா சென்ற ஐந்து இளைஞர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று லெத்ண்டி தோட்ட தேயிலை மலையை சுற்றிப் பார்கும் வேளையே அவர்கள் இந்த சம்பவத்திற்கு முகம் கொடுத்துள்ளனர்.

இதன்போது, தேயிலைச் செடியினுள்ளிருந்த குளவி கூடு கலைந்து இவர்களைத் தாக்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட இளைஞர்கள் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# தமிழ் பிரதேசங்கள் அபிவிருத்தியில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளன

## ஸ்ரீநேசன் எம்.பி. தெரிவிப்பு

தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதை இலக்காகக் கொண்டு செயற்பட்டதன் காரணமாகவே அபிவிருத்தியில் ஆர்வம் காட்டவில்லையென தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இதன் காரணமாக தமிழ் பிரதேசங்கள் அபிவிருத்தியில் பின்னடைவை எதிர் நோக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புனரமைக்கப்பட்ட வீதிகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று காலை மட்டக்களப்பு திசவீரசிங்கம் சதுர்க்கத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பி.எஸ். எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹபீஸ் நஷீர் அஹமட், நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், அலிஸாஹிர் மௌலான, கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் முப்பது வருட கால யுத்தம் காரணமாக தமிழர்கள் வாழும் பகுதிகள் அபிவிருத்தியில் பின்னோக்கிக் காணப்பட்டதாகத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் அபிவிருத்தியை விட அரசியல் உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்ற வகையில் செயற்பட்டிருந்தார்கள்.

இதனால் யுத்தம்மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்கள் வாழ்ந்த பகுதிகள் அபிவிருத்தியில் பின்னடைவை சந்தித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் தமிழ் மக்களின் பகுதிகளை துரித கதியில் அபிவிருத்தி செய்வது அரசியல் வாதிகளின் கடமையென நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக மட்டக்களப்பு மாநகரம் அபிவிருத்தியில் பின்னோக்கி காணப்படுகின்ற அதே வேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தி என்ற விடயத்தை இன்னும் காணாத பல கிராமங்கள் உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான் கரைப் பிரதேசம் யுத்தத்தின் முழு சுமைகளை தாங்கிய பிரதேசமாக காணப்படுவதுடன் குறித்த பகுதிகளில் குடிநீர் எட்டாக் கனியாக இருந்து தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

படுவான்கரைப் பிரதேசத்தில் அடிப்படைத் தேவையாக இருக்கின்ற குடிநீரை வழங்க வேண்டிய பொறுப்பு அரசியல் வாதிகளுக்கு காணப்படுகின்றது.


உன்னிச்சை குளத்திலிருந்து பெறப்படும் நீரை அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. அந்த கிராமங்களுக்கு நீரை விநியோகிப்பதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணக்க அரசியலை செய்து வருகின்றது.

இந்நிலையில் மாகாண சபைக்குரிய காலம் முடிவடைந்து செல்லும் நிலையில் குடிநீர் மற்றும் வீதி அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண் டும் என தெரிவித்தார். (இ-7)

# எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றினால் அடுத்த விநாடியே இணைவதற்குத் தயார்

## ஓ.பன்னீர்செல்வம் அறிவிப்பு



(ஆலந்தூர்)

எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றினால் அடுத்த விநாடியே இணைவதற்கு தயார் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் டில்லி பயணத்தை முடித்துக் கொண்டு விமானம் மூலம் நேற்று சென்னை திரும்பினார். அப்போது விமான நிலையத்தில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது.

டில்லியில் கூட்டணி பற்றி பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டதும் கட்சியின் தலைமை கழக நிர்வாகிகள் அனைவருடனும் கலந்து பேசி உரிய முடிவு எடுக்கப்படும் என்று தான் கூறினேன்.


தமிழக மக்களின் பல தேவைகளை, தீர்க்கப்பட வேண்டிய பல கோரிக்கைகளை பிரதமரிடம் கோரிக்கை மனுவாக கொடுத்து உள்ளோம். இவற்றை கவனமாக கேட்ட பிரதமர் பரிசீலிக்கப்படும் என கூறியுள்ளார். பிரதமரிடம் அரசியல் பற்றி நான் எதுவும் பேசவில்லை.


இரு அணிகளும் இணைவதற்கு சில கோரிக்கைகளை வைத்து உள்ளோம். எங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை தர்ம யுத்தம் தொடரும். எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றினால் அடுத்த விநாடியே இணைவதற்கு எந்த நிபந்தனையும் இல்லை என்றார்.

அவரிடம் பாரதிய ஜனதாவுடன் நீங்கள் தொடர்பு வைத்து இருப்பதால் தான் அமைச்சர் வீடுகளில் சோதனை நடத்தப்பட்டதாக கூறப்படுகிறதே என கேட்டதற்கு, நீங்கள் யூகமாக கேட்கும் கேள்விகளுக்கு பதில் இல்லை என்றார். (இ)

# பா.ஜ.கவின் கதவு திறந்தேயிருக்கிறது

## ரஜனிக்கு அமித்ஷா அழைப்பு





(சென்னை)

ரஜனிக்காந்துக்காக பா.ஜனதாவின் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்று தேசிய தலைவர் அமித்ஷா பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.


ரஜனி அரசியலுக்கு வரப் போவதாக பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் பா.ஜனதா தேசிய தலைவர் அமித்ஷா ஒரு ஆங்கில தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், ரஜனிக்காக பா.ஜனதாவின் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்று பகிரங்கமாக அழைப்பு விடுத்தார்.

நல்ல மக்கள் யார் வேண்டுமானாலும் பா.ஜனதாவில் வந்து சேரலாம் என்றும் அவர் கூறினார். (இ)

# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சவுதி அரேபியாவுக்கு பயணம்







அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முதல் வெளிநாட்டு பயணம் றியாத்திலிருந்து தொடங்கியுள்ள நிலையில், அமெரிக்கா - சவுதி அரேபியா இடையே நேற்று முன்தினம் சனிக்கிழமை பல பில்லியன் டொலர் மதிப்புள்ள ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

சவுதி தலைநகரில் மன்னர் சல்மான், ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலனியாவை வரவேற்றார்.

ஜனாதிபதி ட்ரம்பின் 8 நாட்கள் பயணத்தில் இஸ்ரேல், பாலஸ்தீன பிராந்தியங்கள், பிரஸ்ஸல்ஸ், வத்திக்கான் மற்றும் சிஸிலி ஆகிய இடங்கள் இடம்பெறுகின்றன. அமெரிக்காவில் எப்.பி.ஐ. இயக்குநர் ஜேம்ஸ் கோமியை ஜனாதிபதி பதவிநீக்கம் செய்ததை தொடர்ந்து அவர் எதிர்ப்புகளை எதிர்கொண்டு வரும் நிலையில் இந்த பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததா? என்பதை கண்டறியும் விசாரணை குழுவிற்கு சிறப்பு சட்டத்தரணி ஒருவர் நியமிக்கப்பட்டதற்கு டொனால்ட் ட்ரம்ப் தன்னுடைய கண்டனங்களை பதிவு செய்திருந்தார்.


சம்பளமின்றி வெள்ளை மாளிகையில் ஆலோசகராக பணியாற்றும் ட்ரம்பின் மகள் இவான்கா இந்த பயணத்தில் ட்ரம்புடன் வருகை தந்துள்ளார். மேலும், ட்ரம்பின் அமைச்சரவையில் முக்கிய அங்கம் வகிக்கும் இவான்காவின் கணவரான ஜேரட் குஷ்னரும் இந்த பயணத்தில் இடம்பெற்றுள்ளார்.

சவுதி அரேபியாவுக்கு சமீபத்தில் வருகை தந்த பிரிட்டன் பிரதமர் தெரேஸா மே மற்றும் ஜேர்மன் சான்சலர் ஏங்கெலா மெர்கல் ஆகியோரை போன்று மெலனியாவும் இவான்காவும் தலையைமறைக்கும் துணியை அணியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2015 ஆம் ஆண்டு ஜனவரியில், அமெரிக்காவின் முதல் பெண்மணியாக இருந்த மிச்சேல் ஒபாமா சவுதி சென்ற போது தலையை மறைக்கும் துணியை அணியவில்லை என்பதற்காக ட்ரம்ப் அவரை விமர்சனம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# பணமதிப்பு நீக்க அறிவிப்புதான் இந்தியாவின் மிகப்பெரிய ஊழல்

## முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் குற்றச்சாட்டு



(தூத்துக்குடி)

கடந்த 3 ஆண்டுகளில் ஊழல் ஒழியவில்லை என்றும் இந்தியாவில் நடந்த மிகப்பெரிய ஊழல், பாரத பிரதமர் அறிவித்த பணமதிப்பு நீக்கம்தான் என முன்னாள் மத்திய நிதி அமைச்சர் பா.சிதம்பரம் குற்றஞ்சாட்டினார்.

தூத்துக்குடி சிதம்பர நகர் திடலில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு காங்கிரஸ் சார்பில் இந்திரா காந்தியின் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு காங்கிரஸ் மாநில துணை தலைவர் ஏ.பி.சி.வி.சண்முகம் தலைமை தாங்கினார். தூத்துக்குடி மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் அருள், காமராஜ், சிவசுப்பிர மணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், முன்னாள் காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், முன்னாள் எம்.பி. பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசினார்கள்.

கூட்டத்தில் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் பேசியதாவது,

இந்திரா காந்தியை அரசியலில் அறிமுகப்படுத்தியவர் காமராஜர். அப்போது அவருக்கு நேருவின் மகள் என்ற தகுதியை விட வேறு தகுதி இல்லை என்று பாகிஸ்தானில் உள்ளவர்கள் பேசினார்கள். அதனாலேயே அவர்கள் இந்தியா மீது போர் தொடுத்தார்கள். ஆனால் அப்போது இந்திய இராணுவம் எதிர்த்து சண்டையிட்டு தனது பலத்தை வெளிபடுத்தியது. அப்போது பா.ஜனதா மூத்த தலைவர் வாஜ்பாய் இந்திரா காந்தியின் முகத்தில் காளியை பார்க்கின்றேன் என்று கூறினார். அந்த அளவிற்கு இந்திரா காந்தி தனது திறமையை வெளிப்படுத்தினார்.


இந்தியாவில் போலி நாணயத்தாள்கள் ஒழிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார். ஆனால் இதுவரை அப்படி எதுவும் நடக்கவில்லை. கடந்த சில நாட்களுக்கு முன்பு பிரதமர் மோடி இலங்கை சென்றார். அப்போது அவர் அங்கு இருந்த புத்த பிக்குகள் காலில் விழுந்து வணங்கினார். ஆனால் அவர்கள் யாரும் எழுந்திருக்கவில்லை. இது அவருக்கு ஏற்பட்ட அசிங்கம் மட்டும் அல்ல. இந்தியாவிற்கு ஏற்பட்ட அசிங்கம் என்றார்.

கூட்டத்தில் பா.சிதம்பரம் பேசும்போது கூறியதாவது, இந்தியாவில் ஜனநாயக முறைப்படி பா.ஜனதா கட்சி வெற்றி பெற்றது. அதன் தலைமைப் பொறுப்பை நரேந்திர மோடி ஏற்றுள்ளார். இதனை மறுக்கவில்லை. ஆனால் பிரதமர் சொன்னதை செய்யவில்லை. தேர்தல் நேரத்தில் அவர் சொன்ன வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. தமிழகத்தில் மட்டும் பா.ஜனதா கட்சியால் வெற்றி பெற முடியவில்லை. அதற்கு காரணம் தமிழக மக்கள் முட்டாள்கள் இல்லை என்பதே.

திடீரென்று ஒரு நாள் 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். இதனால் கறுப்பு பணம், ஊழல், போலி நாணயத்தாள்கள் ஒழிக்கப்படும் என்று கூறினார். ஆனால் இந்த அறிவிப்பால் ஏழை மக்கள் மட்டுமே பெரிதும் பாதிக்கப்பட்டனர். கறுப்பு பணம் ஒழியவில்லை.

வருமான வரி சோதனையில் பல கோடி ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த 3 ஆண்டுகளில் ஊழல் ஒழியவில்லை. இந்தியாவில் நடந்த மிகப்பெரிய ஊழல், பாரத பிரதமர் அறிவித்த பண மதிப்பு நீக்கம்தான் என்று குற்றஞ்சாட்டினார். (இ)

# ஆப்கானிஸ்தான் துணை ஜனாதிபதி நாட்டை விட்டு தப்பியோட்டம்




(ஆப்கானிஸ்தான்)

ஆப்கானிஸ்தானின் துணை ஜனாதிபதி அப்துல் ராசிட் டஸ்ரம் (Abdul Rashid Dostum) நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசியல் போட்டியாளர்களை கடத்தவும், கொலை செய்யவும், பாலியல் ரீதியாக வன்கொடுமைக்கு உட்படுத்தவும் துணை ஜனாதிபதி அப்துல் ராசிட் தனது ஆதரவாளர்களுக்கு உத்தர விட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அப்துல் ராசிட் நாட்டை விட்டு வெளியேறி துருக்கிக்கு சென்றுள்ளதாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். அவர் மீதான குற்றச்சாட்டுக் கள் தொடர்பில் உத்தியோக பூர்வமாக எவ்வித குற்றச்சாட்டுக்களும் பதிவு செய்யப்படவில்லை என தெரிவிக் கப்படுகிறது. குற்றச்சாட்டுக் கள் குறித்து அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மருத்துவ பரிசோதனை ஒன்றுக்காக துணை ஜனாதிபதி அப்துல் ராசிட் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர் விரைவில் நாடு திரும்புவார் எனவும் அவரது பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ)

# விக்கிலீக்ஸ் நிறுவுநர் விடுதலையாவாரா?



(சுவீடன்)

பாலியல் குற்றச்சாட்டில் சிக்கிய விக்கிலீக்ஸ் நிறுவுநர் அசாஞ்சே மீதான பிடியாணையை சுவிஸ் அதிகாரிகள் இரத்துச் செய்துள்ளனர்.

அவர் மீதான குற்றச்சா ட்டுகளுக்கான பிடியாணையை அவரிடம் ஒப்படைப்பது சாத்தியமில்லையென அவர்கள் கூறியுள்ளனர்.

2012ஆம் ஆண்டு முதல் லண்டனிலுள்ள ஈக்வடார் தூதரகத்திற்குள்ளேயே அசாஞ்சே அடைபட்டு வாழ்ந்து வருகிறார். ஸ்டாக்ஹோமில் விக்கி லீக்ஸ் செய்தியாளர் சந்திப்பு நடந்த அதே ஆண்டில் இவர் மீது இந்த பாலியல் புகார் கூறப்பட்டது.

பெண்ணின் சம்மதத்துடனே பாலுறவு கொண்டதால் அது வல்லுறவல்ல என்று அசாஞ்சே மறுத்து வந்திருக்கிறார். அமெரிக்க இராணுவ இரகசியங்களை வெளியிட்டதற்கு பழிவாங்கவே புகார் சுமத்தப்பட்டதாக அவர் கூறினார்.

சுவிஸ் அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து அடுத்த நகர்வுகள் லண்டனில் நடக்குமெனவிக் கிலீக்ஸ் டுவீட் செய்துள்ளது. (இ)




# அமெரிக்காவின் உளவாளிகளை சீனா கொன்றதா?

(பீஜிங்)

கடந்த 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், அமெரிக்காவின் மத்திய புலனாய்வு முகாம்மயை (சிஐஏ)யை சேர்ந்த சுமார் 20 உளவாளர் தெரிவிக்கும் ஒரு பணியாளர் சுட்டுக் கொல்லப்பட்டதாக அந்த அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த செய்தி குறித்து சிஐஏ அமைப்பு எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.



ளிகளை சீன அரசு கொன்றோ அல்லது சிறையில் அடைத்தோ அந்நாட்டில் பல ஆண்டுகளாக நடந்து வந்த அமெரிக்காவின் இரகசிய தகவல் சேகரிப்பு பணியை சேதப்படுத்தியதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிஐஏ முகவர்களை சீன அரசு அடையாளம் காண அந்த அமைப்புக்குள் ஊடுருவப்பட்டதா? அல்லது ஊடுருவல் முகவர்கள் மூலம் அவர்கள் அடையாளம் காணப்பட்டனரா? என்பது தெளிவாகத் தெரியவில்லை என நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையிடம் முன்னாள் சிஐஏ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மற்றவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில், சீனாவில் உள்ள ஓர் அரசாங்க கட்டடத்தில் உளவு தகவல் தெரிவிக்கும் ஒரு பணி... 

கடந்த 2010ஆம் ஆண்டில் சீன அரசு அதிகாரத்துவ மையங்கள் தொடர்பாக தங்களுக்கு வரும் தகவல் ஆதாரங்கள் குறைய ஆரம்பித்ததாக நான்கு முன்னாள் சிஐஏ அதிகாரிகள் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

2011ஆம்ஆண்டின்தொடக்கத்தில் உளவு தகவல் தெரிவிப்பவர்கள் காணாமல் போகத் தொடங்கினர்.

ஆனால், 2013ஆம்ஆண்டில் அமெரிக்க உளவு முகவர்களை அடையாளம் காணும் திறனை சீன அரசு இழந்து விட்டது போன்ற தோற்றம் உருவாகியுள்ளது. இதனால் சீனாவில் சிஐஏ தனது கட்டமைப்பை மீண்டும் உருவாக்கத் தொடங்கியது என அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# சிரியாவில் குழந்தைகள் உட்பட 19 பேர் எரித்துப்படுகொலை

## ஐ.எஸ்ஸின் அட்டூழியம் தொடர்கிறது

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள், 2 குழந்தைகள் உள்ளிட்ட 19 பேரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்று உடலை எரித்துள்ளதாக மனித உரிமை கண்காணிப்பக அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களுக்கு ஆதரவளிக்காத பொது மக்களை சித்திரவதை செய்து கொன்று அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், அந்நாட்டின் வடக்குப்பகுதியில் உள்ள



ஜஸ்ரத் பவுஷம்ஸ் எனும் கிராமத்தில் நேற்று முன்தினம் நுழைந்த தீவிரவாதிகள் அங்குள்ள மக்களை சிறைபிடித்துள்ளனர்.

பின்னர் அவர்கள் தலையில் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டு, உடல்களை எரித்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் இரு குழந்தைகள் மற்றும் பெண்கள் அடங்கும். இந்த கொடூர செயலை செய்து விட்டு பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்றுள்ளனர். இந்த தகவலை அந்நாட்டில் இயங்கி வரும் இங்கிலாந்தை சேர்ந்த மனித உரிமை கண்காணிப்பக அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமிருந்த பெரும்பாலான இடங்கள் அரசுப் படையினரின் கைவசம் வந்து விட்டதால், ஆத்திரமடைந்துள்ள தீவிரவாதிகள் இந்த செயலை செய்திருக்கலாம் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (இ)

# மீண்டும் ஜனாதிபதியானார் ரூஹானி

ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானி, ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது முறையாக வெற்றி பெற்றுள்ளதாக அந்நாட்டு அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

தேர்தலில் பதிவான சுமார் 40 மில்லியன் வாக்குகளில், இதுவரை எண்ணப்பட்டதில் பாதிக்கும் மேற்பட்ட வாக்குகளை ரூஹானி பெற்றுள்ளதாகவும் சில பகுதிகளின் முடிவுகள் இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அதிகாரிகள் தொலைக்காட்சியில் அறிவித்தனர்.

மிதவாத தலைவராக அறியப்படும் ரூஹானி உலக முன்னணி நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தப்படி ஈரானின் அணு திட்டங்களை கட்டுப்படுத்த ஒப்புக் கொண்டார்.

வாக்குப்பதிவில் முறைகேடுகள் நடத்திருப்பதாக ரூஹானியின் போட்டி வேட்





பாளர் குற்றஞ்சாட்டியுள்ளார். ரூஹானியின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் வாக்குச்சாவடி மையங்களில் ஆதரவு பிரசாரத்தில் ஈடுபட்டனர் என்று ரூஹானியின்பழைமைவாத போட்டியாளரான இப்ராகிம் ரைசி குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவ்வாறு வாக்குச்சாவடிகளில் பிரசாரத்தில் ஈடுபடுவதென்பது தேர்தல் சட்டத் திட்டத்தின்படி தடை செய்யப்பட்ட ஒன்றாகும்.

இன்னும் நகர்ப்புற பகுதிகளிலிருந்து தேர்தல் முடிவுகள்வெளிவரவில்லை. ஆனால் அவை ரூஹானிக்கே ஆதரவாக இருக்கும் என கருதப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் ரூஹானி வெற்றி பெற்றதை தொடர்ந்து அரசு தொலைக்காட்சி அவருக்கு பாராட்டுக்களை தெரிவித்துள்ளது.

தற்போது வாக்கு எண்ணும் பணி முடியும் தறுவாயிலுள்ள நிலையில், ரூஹானி 58.6% வாக்குகளை பெற்றுள்ளார்.ரைசி 39.8% வாக்குகளை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# வைரஸுக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

## வடகொரியா மறுப்பு

(பியாங்யாங்)

கணனிகளை ஹேக் செய்யும் வைரசான ரான்சம்வேர்-க்கும் தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என வடகொரியா மறுப்பு தெரிவித்துள்ளது.

டெக் உலகின் அசுரர்களாக சமீபத்தில் உருவெடுத்த 'வான்னாக்ரை' ஹேக்கிங் குழுவினர் ஈமெயில் மூலமாக ஹேக்கிங்மால்வேரை ஒருவரது கணனிக்கு அனுப்புகின்றனர். கணனிகளை இயக்கும் நபர் விபரமின்றி அந்த ஈமெயிலை திறக்கும் போது அந்த மால்வேரானது கணனியில்உள்ள தகவல்களை ஹேக் செய்து விடுகிறது.

குறிப்பிட்ட அளவு பணம் தரும் பட்சத்தில் திருடப்பட்ட தகவல்களை திரும்ப அளிப்போம், இல்லையெனில்



அந்த தகவல்களை அழித்துவிடுவோம் எனவும் அக்குழுவினர் எச்சரிக்கை செய்தி வெளியிட்டுள்ளனர். இந்த 'ரான்சம்வேர்' வைரஸின் தாக்குதலுக்கு உலகம் முழுவதுமுள்ள வைத்திய சாலைகள், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் கணனிகள் தப்பவில்லை.

அனைத்து நாடுகளிலும் உள்ள இணைய பாதுகாப்பு அமைப்புகள் இத்தாக்குதலில் இருந்து எப்படி தப்பிப்பது என்பது குறித்த வழிமுறைகளை வெளியிட்டு வருகின்றன. இருப்பினும் இந்த வைரஸ் தாக்குதலால் பல்லாயிரக்கான நிறுவனங்கள் தங்களது வழக்கமான பணிகளை நிறுத்தி வைத்துள்ளதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை இழந்துள்ளது. இணைய உலகை பெரும் அச்சத்திற்கு உள்ளாகியுள்ள இந்த வைரஸானது வடகொரியா மூலம் உருவாக்கப்பட்டதற்கான பல குறியீடுகள் காணப்படுவதாக காஸ்பஸ்கை உள்ளிட்ட பிரபல ஆண்டி வைரஸ் நிறுவனங்கள் தெரிவித்திருந்தது.

லாசரஸ் குரூப் எனப்படும் பிரபல சைபர் கிரைம் குழு கடந்த 2014 ஆம்ஆண்டு சோனி பிக்சர்ஸ் நிறுவனத்தின் கணனிகளையும், 2016 ஆம் பங்க ளாதேஷத்தை சேர்ந்த வங்கிகளின் கணினிகளை ஹேக் செய்து பெரும் பரப ரப்பை ஏற்படுத்தியது.

குறிப்பாக தென்கொரியாவுக்கு எதிராக தொடர்ந்து இயங்கிவரும் இந்த சைபர் கிரைம் குழு வடகொரியாவால்உருவாக்கப்பட்டது என்று கடந்த சில ஆண்டுகளாகவே குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது. இந்த லாசரஸ்குரூப் உருவாக்கிய வைரஸ்களின் தரவுகளும் தற்போது பரவிவரும் ரான்சம்வேர் வைரஸின் தரவுகளும் ஒன்று போலவே இருப்பதாக கணனி வல்லுநர்கள் பலரும் தெரிவித்து வருகின்றனர்.


இந்நிலையில், இந்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் வடகொரியா திட்டவட்டமாக மறுத்துள்ளது. மேலும், உலகில் எங்கு எந்த பிரச்சினை நடந்தாலும் வடகொரியாவை இழுத்து விடுவது மிகவும் கேலிக்குரியதாகவுள்ளது என ஐக்கிய நாடுகளுக்கான வடகொரியாவின் துணைத் தூதர் கிம் இங் ரியோன் தெரிவித்துள்ளார். (இ)

# முஸ்லிம்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிமுறையை உடனடியாக இனங்காண்போம்

## முஸ்லிம் மீடியா போரம் வலியுறுத்து

(கொழும்பு)

முஸ்லிம்கள் தங்களது பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக வுள்ள பலமான வழிமுறையை இன்னும் கையில் எடுக்கத் தவறியுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்தார்.



முஸ்லிம்களுக்கு இந் நாட்டின் நாளுக்கு நாள் நெருக்குதல்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இவற்றை சரியான முறையில் உரிய இடங்களுக்கு கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு உரிய பலமான தகுதியான ஊடகம் ஒன்று இல்லாதிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இன்றுள்ள ஊடகங்கள் முஸ்லிம்களிடையே இடம் பெறும் பிரச்சினைகளையே உலகிற்கு படம்பிடித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இரு அமைச்சர்கள் கருத்து முரண்பாடு கொண்டால், அதுவே எல்லா ஊடகங்களிலும் பேசுபொருளாக மாறுகின்றன. ஆனால், முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெறும் கருவறுப்புக்கள், இனவொழிப்புக்கள் பற்றி எந்த ஊடகமும் கண்டு கொள்வதில்லை.

இவற்றை உலகிற்கு எடுத்துச் சொல்வதற்கு இன்னும் ஓர் ஊடகத்தைப் பெற்றுக் கொள்ள வக்கில்லாத சமூகமாக முஸ்லிம் சமூகம் காணப்படுகின்றது. அடி வாங்கும் போது மாத்திரம் ஊடகத்தின் தேவையை உணர்ந்து விட்டு, அதனைப் பழைய பிரச்சினையாகப் பார்க்கும் நிலைமை கவலையானது.

இன்று முஸ்லிம்கள் தமக்கென உள்ள ஊடகங்களை யாவது பலப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

கஹட்டோவிட்டாவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் அனுசரணையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சியனே மீடியா வட்டத்தின் ஊடக செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் போரத் தின் தலைவர் என்.எம். அமீன் இதனைக் கூறினார். (இ-7)


**மனதில் சுமையா?**

வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?
உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
"மதசார்பற்றது" "ரகசியமானது" இலவச சேவை
021 222 8117, 077 900 877
(தினமும் காலை 9.00 - 1.00)
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

**பயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி**

அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்.

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (சி-8579) 0212228680, 0775925088

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

இவர்களுக்கு **மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம் : பூசம்
கி.பா :60
உயரம் : 5'6"
தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்
தொ.இ: B/7380

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம் : கேட்டை
கி.பா : 63செவ் 1 ல்
உயரம் : 5'6"
தகைமை/தொழில்:தொழில் நுட்பஉத்தியோகத்தர்
தொ.இ: B/7381

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம் : பூரட்டாதி செவ் 1ல்
உயரம் : 5'2"
தகைமை/தொழில்:A/Lலண்டன்
தொ.இ: B/7383

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம் : திருவாதிரை
கி.பா : 92செவ் 7 ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: AATலண்டன் PRஎதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்தானவர
தொ.இ: B/7387

இவர்களுக்கு **மணமகன் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம் : அச்சுவினி
கி.பா : 30
உயரம் : 156cm
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/5893

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம் : கார்த்திகை
கி.பா: 26 செவ் 4 ல்
தகைமை/தொழில்: BBA/ கணக்காளர்
தொ.இ: G/5895

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா:23 செவ் 4 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: நூலகவிஞ்ஞானம்/அரசதொழில்
தொ.இ: G/6201

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம் : உத்தராடம்
கி.பா : 45 செவ் 1 ல்
உயரம் : 5'
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6205

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# போலி நாணயத்தாளில் சூதாட்டம்; ஒருவர் கைது

கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள இரவு களியாட்ட விடுதி ஒன்றில், போலி நாணயத்தாள்களை கொண்டு சூதாட்டத்தில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

75 போலியான 1000 ரூபா நாணயத்தாள்கள் கொண்டு குறித்த நபர் சூதாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர், சூதாட்டத்தில் விளையாடுவதற்காக போலி நாணயத்தாள்களை பயன்படுத்த முயற்சித்துள்ளார்.

இந்த நிலையில், அந்த நபரின் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கை தொடர்பில் அறிந்து கொண்ட விடுதியின் முகாமையாளர், கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே கொள்ளுப்பிட்டி பொலிஸார், பசறை பகுதியைச் சேர்ந்த 38 வயது மதிக்கத்தக்க சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

மேலும், சந்தேகநபர் நாட்டின் குற்றவாளிகள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளவர் என்றும், வெள்ளவத்தை பகுதியில் இரண்டு கார்களை கொள்ளையடித்துள்ளதுடன் கடன் அட்டை மோசடியிலும் ஈடுபட்டுள்ளார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, சந்தேகநபர் குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (இ-7)


**1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்**

யாழ். **கலாலயா** பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



✌ *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).

✌ *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.



✌ *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.



✌ FACIALS *(முக அழகுக்கலை)*
Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)

✌ BRIDAL DRESSINGS
*(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

✌ *பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,* மற்றும் மகளிருக்கான ஆடைகள் தைக்கும் கிழமைநாள் தையல் பயிற்சிகள்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-05-2017
புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 27-05-2017
சனி காலை 10.00 மணி



மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

Guru


# தேசிய சுற்றாடல் வாரம் பிரகடனம்

(கொழும்பு)

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு இம் மாதம் 29 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 4ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை தேசிய சுற்றாடல் வாரமாக பிரகடனப்படுத்தவிருப்பதாக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைவாகவே சுற்றாடல் வாரம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இயற்கையுடன் ஒன்றிணைந்த மக்கள் எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி சர்வதேச சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சர்வதேச சுற்றாடல் தினத்திற்கான ஆரம்ப வைபவம் ஜூன் மாதம் 5 ஆம் திகதி பதுளை மாவட்டத்தில் நடைபெறவுள்ளது எனவும் அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# பள்ளிவாசல் மீது அதிகாலை பெற்றோல் குண்டு தாக்குதல்

(கொழும்பு)

குருநாகல், மல்லவ பிட்டிய ஜும்மா பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை 3.30 மணியளவில் பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

ஆறு பேர் கொண்ட கும்பல் ஒன்றினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் இதன்போது மூன்று பெற்றோல் குண்டுகள் வீசப்பட் டுள்ளதில் ஒன்று மாத்திரமே வெடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தாக்குதலினரல் பள்ளிவாசலின் கண்ணாடிகளில் சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.


அண்மைக்காலங்களில் சிறுபான்மையினத்தவர்கள் மீது இனவாதப் போக்குடையவர்களால் மேற்கொள்ளப் படும் தாக்குதல்கள் அதிகரித்துச் செல்வதுடன் பல அச் சுறுத்தல்களும் விடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கிழக்கு மாகாண முதலமைச்சர் இனவாதம் குறித்து ஜனாதிபதியின் முன்னிலையில் வெளிப்படையாகக் குற்றஞ் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சட்டமா அதிபருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

(கொழும்பு)

சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரியவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை கொண்டு வர கூட்டு எதிர்க்கட்சி உத்தேசித்துள்ளது.

உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு செய்ய எவ்வித சந்தர்ப்பமும் வழங்காது, மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பிற்கு அமைய கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை வெற்றிடமாகி உள்ளது என நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.



இந்த அறிவிப்பு தொடர்பில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட உள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வழக்கு தீர்ப்பு ஒன்றின் பின்னர் அது தொடர்பில் மேன்முறையீடு செய்ய 42 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும்.

எனினும், வழக்குத் தீர்ப்பு அளித்து நான்கு நாட்களில் நாடாளுமன்ற உறுப்புரிமை வெற்றிடமாகியுள்ளதாக சட்டமா அதிபர், நாடாளுமன்றிற்கு அறிவித்தமையானது அரசியல் பக்கச்சார்பு நிலையை பிரதிபலிப்பதாக குறித்த பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே சட்டமா அதிபருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார். (இ-7)

# ஜி.எஸ்.பி.பிளஸ் வழங்கப்பட்டமை தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் விவாதம்

(கொழும்பு)

இலங்கைக்கு ஜி.எஸ்பி பிளஸ் வழங்கப்பட்டமை தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்றம் விவாதம் நடத்த வேண்டும் என்று அரசியல் மற்றும் சிவில் சமூக தமிழ் புலம்பெயர்வாளர் அமைப்புக்கள் கோரிக்கை விடுத் துள்ளன. இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் ஒன்று இதனை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் குறித்த விவாதம், மே 31ஆம் திகதியன்று இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகத் துறை ஆணையாளர் அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் மாற்றம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் யோசனைகள், முஸ்லிம் விவாக உரிமை மற்றும் பெண்கள் தொடர்பான உரிமைகள் போன்ற நிபந்தனைகள் அடங்கியிருக்கும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# அமைச்சர் பதவிகள் இருந்தும் முஸ்லிம்களுக்கு அதிகாரமில்லை

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா கவலை

(கொழும்பு)

முஸ்லிம் அரசியல் தலைமைகளிடம் அமைச்சுப் பதவிகள் இருந்தும் அதிகாரம் மாத்திரம் இல்லாதிருப்பதாக இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கஹட்டோ விட்டாவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் அனுசரணையில் இடம்பெற்ற சியனே மீடியா வட்டத்தின் ஊடகச் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முஸ்லிம் சமூகத்திலிருந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித்து ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தோம். ஆனால் அதே பிரச்சினைகள் இன்றும் தொடர்கின்றன.

இன்று 21 முஸ்லிம் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தும், பிரச்சினையொன்றை முன் வைத்து தீர்வைப் பெற்றுக் கொள்ள பலமற்றவர்களாக உள்ளோம். எனினும் முஸ்லிம் அரசியல் தலைமைகளிடையே ஏற்படும் ஒற்றுமையினால் மாத்திரமே அதிகாரங்கள் கிடைக்கப் பெறும்" என அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாமேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 18 வயதை பூர்த்தி செய்தவர்கள் வாக்காளராக பதிவு செய்யவும்

2017 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்புத் திருத்தம் செய்யப்பட்டு வருகின்ற இச் சந்தர்ப்பத்தில் 18 வயதை பூர்த்தி செய்த தமிழ், முஸ்லிம் மக்கள் தம்மை புதிய வாக்காளராக பதிவு செய்து கொள்ள முன்வர வேண்டும் என சப்ரகமுவ மாகாணசபை ஐ.தே.க உறுப்பினர் வை.எம். இப்ளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாக்காளர் தேருநர் இடாப்புகளின் திருத்தப் பணிகள் தற்போது நாட்டின் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் ஆரம்பமாகியுள்ளன. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் கிராம சேவகர்கள் மூலமாக குடியிருப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 1999 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்த அனைவரும் புதிய வாக்காளர்களாக தம்மை பதிவு செய்து கொள்ள முடியும். எனவே இது விடயமாக கூடிய ஈடுபாட்டுடன் செயற்படுமாறு அவர்கேட்டுக்கொண்டார் (இ-7)

# இன்று ஒரு தகவல்

## படுத்தி எடுக்கும் மனிதர்கள்

வாழ்க்கையில் நம்மீது மேலாண்மை செலுத்துகிறார்கள் பலர் பொல்லாதவர்களாகவும் அமைந்து விடுவது உண்டு.

இப்படி மேலாண்மை செலுத்துகிறார்கள் நூற்றுக்குச் சரிபாதி பேர், வேண்டுமென்றோ, தெரியாமலோ நம்மைப் படுத்தி எடுப்பார்கள்.

முன்னே போனால் மாடாய் முட்டுவார்கள்; பின்னே போனால் கழுதையாய் உதைப்பார்கள். அவர்களைக் கையாள்வதும் இவர்கள்ள வெற்றி கொள்வதும் ஒரு தனிக்கலை.

இவர்களை எல்லாம் நம்மால் மாற்றுவது கடினம். நாம் தான் இவர்களை வித்தியாசமான கண்ணோட்டத்துடன் அணுக வேண்டும்.

எவருக்குமே இதயத்தின் ஒரு மூலை இளகிய பதத்தில் இருக்கும். கல் போன்ற நெஞ்சர்களாக இருந்தாலும் அதிலும் ஓர் ஈரக் கசிவு இருக்கும். அந்த இடத்தைத் தொடவும் நெருங்கவும் நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்,

முதல் கட்டமாக இவர்களை எதிர்த்துப் போராடும் முயற்சியைக் கைவிட்டு அவர்கள் பாதையிலேயே போய்ச்சுற்றி வளைக்க வேண்டும். இது போர்த் தந்திரம் போன்றது.

அதற்காக அவர்கள் செய்யும் அநியாயங்களுக்குத் துணை போக வேண்டும் என்று நாம் வாதிடவில்லை. உங்கள் போக்கில் எனக்கு உடன்பாடு இல்லை என்பதை இதமாக எடுத்துச் செல்ல வேண்டும். மாறாக உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள்! எனும் அணுகுமுறையைக் கைவிட வேண்டும்.

அடுத்த கட்டமாக படுத்தி எடுக்கும் மனிதர்களுக்குப் பெரும்பாலும் எதிர்பார்ப்புக்கள் அதிகமாக இருக்கும். என்ன செய்தாலும் இந்த ஆளிடம் நல்ல பெயர் வாங்க முடியாது என்கிற தீர்மானத்திற்கு வந்துவிடாமல், இன்னும் இன்னும் என்று நிறைய ஒத்துழைப்பைத் தர முன்வரவேண்டும். அல்லது முன்வருவதாகக் காண்பித்துக் கொள்ளவாவது வேண்டும்.

இவர்களது கடு சொற்கள் எந்த அளவிற்குத் தம்மைப் பாதித்தன என்பதை அவர்கள் நல்ல மனநிலையிலும் கேட்டுக் கொள்ள நினைக்கும் சூழ்நிலையிலும் இருக்கும் போது எடுத்துச் சொல்வது நல்ல பலனைத் தரும். இது போக இத்தகைய ஜென்மங்கள் என்ன சொன்னாலும் அவர்கள் சுபாவமே அப்படித் தான்; கத்தினால் கத்தட்டும் என்று பழகிக் கொள்ள வேண்டும்.

நம் மென்மையான இதயத்தைப் புண்படுத்த எண்ணுகிறவர்களுக்கு எதிராக இத்தகைய கேடயத்தைப் பிடித்துக் கொள்ளவேண்டியது அவசியம். பிசாசுக்கு வாழ்க்கைப் பட்டுவிட்டு வேப்பமரம் வேண்டாம் என்றால் எப்படி?

இவர்கள் நம்மைப் பேச அனுமதிக்கிற போது நம் சுபாவங்கள், நம் விருப்பம், நம் மனநிலை ஆகியவற்றை எடுத்துச் சொல்லி விட வேண்டும். அதாவது, மனம் விட்டுப் பேச வேண்டும்.

இந்த வழிகளையெல்லாம் கடைப்பிடித்தால் "அந்தப் பொல்லாக் குரங்கு உங்களிடம் மட்டும் வாலைச் சுருட்டிக் கொண்டு கிடக்கிறதே. அது எப்படி? " என்று மற்றவர்கள் நம்மைப் பார்த்து நிச்சயம் கேட்பார்கள்!

**லேனா தமிழ்வாணன்**

# இனவாத நடவடிக்கைகளை உடன் கட்டுப்படுத்த வேண்டும்

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வலியுறுத்து

அரசு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி சிறுபான்மை இன மக்களும் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்தும் வண்ணம் இனவாத நடவடிக்கைகளை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக நாட்டில் அதிகரித்து வரும் இனவாத சக்திகளின் பரவலான நடவடிக்கைகள் தொடர்பாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற முஸ்லிம்களுக்கெதிரான அச்சுறுத்தல்களும் இனவாத சம்பவங்களும் அமைதியை விரும்பும் அனைத்து மக்களையும் கவலை கொள்ளச் செய்துள்ளன.

இது நாட்டின் சட்டம் ஒழுங்கை அச்சுறுத்தும் போக்காகவும் இது மாறியுள்ளது. இந்தக் குழப்பகரமான நிலமையை அரசாங்கம் உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அராஜக ஆட்சி ஏன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என்பது குறித்தோ, அல்லது அந்த ஆட்சி மாற்றத்தின் மூலம் சிறுபான்மை மக்கள் உள்ளிட்ட அனைத்து நாட்டு மக்களும் எதனை இந்த அரசாங்கத்திடம் எதிர்பார்த்தார்கள் என்பது குறித்தோ எவ்வித அக்கறையுமின்றி மிகுந்த அலட்சியமாக இந்த அரசாங்கம் நடந்து கொள்வதையே இந்த தொடர் சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

அந்த வகையில் இனவாத சக்திகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியே இந்த அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டது என்பதனை இந்த அரசாங்கம் மறந்து விடக்கூடாது.

இதனைக் கணக்கிலெடுக்காமல் அரசாங்கம் அலட்சியமாக நடந்து கொள்வதானது அப்பட்டமான நம்பிக்கைத் துரோகமாகும்.

அதிலும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முக்கிய அமைச்சரான மனோகணேசனின் அமைச்சு அலுவலகத்துள் அத்துமீறிச் சென்று மிரட்டுமளவுக்கு நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றுள்ளது.

அத்தோடு, மீண்டும் பழையபடி சிறுபான்மையினருக்கு எதிரான இன வெறுப்புப் பேச்சுகளும் இன வெறிபிடித்த நபர்களால் தூண்டிவிடப்பட்டுள்ளன.

இதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சரவையும் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டும்.

இது மிகத் தெளிவான சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாகும். ஆனால், பொலிஸ்மா அதிபரோ பொலிஸ் திணைக்களமோ இதில் பாரா முகமாக நடந்து கொள் கிறது. இதனை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்து, நாட்டு மக்களிடையே குரோதத்தையும் வெறுப்பையும் தூண்டும் எல்லா நபர்களையும் சக்திகளையும், எவ்வித காலதாமதமுமின்றி சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வந்து சட்ட வாட்சியை நிலை நிறுத்துமாறு, அரசாங்கத்தை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வலியுறுத்தி வேண்டிக் கொள்கிறது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஏழு மாகாண சபைகளின் ஆட்சி ஸ்திரமற்ற நிலையில்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அதிகாரம் உள்ள ஏழு மாகாண சபைகளிலும் உள்ள கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சுயாதீன குழுக்களாக செயற்பட தீர்மானம் எடுத்துள்ளனர்.

மாகாண சபைகளின் அதிகாரத்தை வைத்துள்ள ஐ.ம.சு.முன்னணியின் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்கள் கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் எனவும் இவர்களுடனான பேச்சுவார்த்தைகள் தற்பொழுது ஆரம்பித்துள்ளதாகவும் கூட்டு எதிர்க் கட்சி அறிவித்துள்ளது.


வட மத்திய, மத்திய, மேல், வட மேல் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளிலுள்ள கூட்டு எதிர்க் கட்சிக் குழுவினர் இது தொடர்பில் இறுதித் தீர்மானத்துக்கு வந்துள்ளதாகவும் தெரியவருகிறது. (இ-7)


## வெளிமடைப் பொங்கல் – கடைகள்

தும்களை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவிலின் வெளிமடைப் பொங்கல் எதிர்வரும் 2017.05.26 ஆம், 27ஆம் திகதிகளில் (வெள்ளிக் கிழமையும், சனிக்கிழமையும்) நடைபெறவிருப்பதனால் உற்சவ காலகடைகளை நடத்த கடைக்குரிய நிலத்தை குத்தகைக்கு எடுக்க விரும்புபவர்கள் 2017.05.24 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சபை அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

*சபா ரவீந்திரன்,*
*தலைவர்,*
*தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தர்ம பரிபாலன சபை*


# தகவல் அறியும் உரிமைச் சட்டம்




ஒருநாட்டின் குடிமக்கள் என்ற வகையில் அந்நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு தனிமனிதனுடைய உரிமைகளையும் பாதுகாப்பது அரசின் கடமையாகும். அதேநேரம் தமக்கு எவ்வாறான உரிமைகள் சட்டத்தின் மூலம் வழுங்கப்பட்டிருக்கின்றன என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டியதும் ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும்.

இந்த அடிப்படையில் எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு முக்கிய சட்டமே தகவல் அறியும் உரிமைச் சட்டமாகும். ஊடக சுதந்திரத்தை வலியுறுத்திய நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்ட பல தசாப்தகால போராட்டத்தின் வெற்றியாகவே இத்தகவல் அறியும் உரிமைச் சட்டம் கருதப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச்சட்டம் எமது பாராளுமன்றத்தில் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டு 2017 பெப்ரவரி 3 ஆம் திகதி நடைமுறைக்கு வந்திருக்கின்றது. இச்சட்டத்தின் மூலம் இதுவரை காலமும் நாட்டு மக்களின் நம்பிக்கை பொறுப்புதாரிகள் என்ற வகையில் அரசு தன்வசம் வைத்திருக்கின்ற பல்வேறு தகவல்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தகவல்களை அறிந்து கொள்வது எமது அடிப்படை உரிமையாகும். இந்த உரிமையை அனுபவிப்பதற்கு குறித்த யாதாயினுமொரு அரசநிறுவனத்தில் ஒரு விண்ணப்பம் ஒன்றை மேற்கொண்டால் அவ்



விண்ணப்பத்தின் மீது அவ்வரச நிறுவனம் குடிமகனாகிய உங்களுக்கு தகவல் அளிப்பதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது.

தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒழுங்கு விதிகளை உள்ளடக்கிய விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இலங்கை பிரஜைகள் யாவரும் இந்நாட்டில் உள்ள ஒரு அமைச்சு, அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம், உள்ளூராட்சி அதிகார சபைகள், மாகாண சபைகளினால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்கள், பொதுச் சேவைகளை வழங்கி வருகின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், நீதிமன்றங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த சட்டத்தில் சொல்லப்பட்டதற்கிணங்க, எவரேனும் ஆள் அதிகபட்சமாக 28 நாட்களுள் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். எந்தவொரு அரச ஆவணங்கள் தொடர்பாகவும் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். உதாரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துப் பிரகடனங்கள் தொடர்பிலான தகவல்களை கூடப் பெற்றுக் கொள்ளமுடியும்.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் என்ற வகையில் எல்லாவிதமான தகவல்களையும் அளிக்கும் கடப்பாடு அரசுக்கு இல்லை. ஏனெனில் சில தகவல்களின் தன்மையைப் பொறுத்து அவை தொடர்பான இலகுவான அணுகுதல் காணப்படுமாயின் பொது அமைதியும் நீதி நிர்வாகமும் சீர்குலையும் என்ற அடிப்படையில் சில மட்டுப்பாடுகளை இச்சட்டம் கொண்டுள்ளது. உதாரணமாக வெளிநாட்டு அரசுடன் செய்து கொள்கின்ற பொருளாதார உடன்படிக்கைகள், தனிப்பட்ட நபரொருவரின் மருத்துவ அறிக்கைகள் போன்றவற்றைக் இச்சட்டத்தின் கீழ் கோரிப் பெற்றுக்கொள்ள முடியாது.

எவ்வாறாயினும் தகவல் அறியும் உரிமைச் சட்டமானது எமது நாட்டுப்பிரஜைகளுக்கு கிடைத்துள்ள வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும். ஏனெனில் இதுவரைகாலமும் அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பொதுமக்கள் குறிப்பிட்ட ஒருவிடயம் தொடர்பிலான தகவல்களை பெற்றுக் கொள்வதில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர்.

ஆனால் இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பிற்பாடு அரச உத்தியோகத்தர்களும் அரச நிறுவனங்களும் ஏன் குறிப்பிட்ட ஒருவிடயம் அல்லது ஆவணம் தொடர்பிலான தகவல் வழங்க இயலாமலிருப்பின் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றபடியான நியாயமான காரணங்களை கூறவேண்டும். எனவே பொதுமக்களாகிய நாம் தகவல் அறியும் விடயம் எமது உரிமை என்பதை மறந்து விடாமல் உரிய இடங்களில் அதனை உபயோகித்து எமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்வோம்.

தொகுப்பு-எஸ்.எச்.மஹறூஸ் - சட்டத்தரணி
இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு,
கிளிநொச்சி.

# ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை போட்டி மிகுந்த பொருள் ஏற்றுமதிக்கான சந்தர்ப்பம்



ஜி. எஸ். பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு மீண்டும் கிடைத்தமையால் போட்டித் தன்மையுடன் மீண்டும் ஐரோப்பிய சந்தையில் ஏழாயிரத்து 200 பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடிய ஆற்றல் இலங்கைக்கு கிடைத்திருப்பதாக ஆரம்ப கைத்தொழிற்றுறை அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சில வருடங்களில் உலகின் பாரிய வர்த்தக சந்தையாக ஆசிய சந்தை தரமுயரும். ஆடைத் தொழில் துறை ஏற்றுமதியில் பங்களாதேஷ் போன்ற நாடுகள் குறைவான சம்பளம் மற்றும் குறைவான செலவு ஆகியவற்றின் அடிப்படையில் உலக சந்தைக்கு குறைந்த விலையில் தயாரிப்புகளை விநியோகித்து வருகிறது. இருந்த போதிலும் எமது நாட்டின் தரமான தயாரிப்பின் காரணமாக சந்தையில் எமது தயாரிப்புக்களுக்கு பெரு வரவேற்பு உண்டு என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

29 நாடுகளைக் கொண்டுள்ள இந்த அமைப்பில் 550மில்லியன் மக்களிடையே பொருட்களை பரிமாறக் கூடிய வர்த்தக செயற்பாட்டுக்கான வசதிகளை வழங்கக் கூடியதே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு மாநகர சபை மீது குவியும் குற்றச்சாட்டுக்கள்!



மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகார சபையினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள திட்டங்கள் எவையும் கொழும்பு மாநகர சபையினால் நடை முறைப்படுத்தப்படுவதில்லை என குறித்த அதிகாரசபையின் பணிப்பாளர் நலின் மன்னப்பெரும குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து விழுந்ததன் பின்னர் மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகார சபை, குப்பைகளை அகற்றுவது தொடர்பாக கொழும்பு மாநகர சபைக்கு யோசனைகள் பலவற்றை முன்வைத்துள்ள நிலையில் அவை இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதன்காரணமாக எதிர் காலத்தில் குப்பைகளை கொட்டும் போது பாரிய பிரச்சினைகள் தோன்றலாம்" என நலின் மன்னப்பெரும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சட்ட விரோத கிருமிநாசினி ஒருவர் கைது.



சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட கிருமிநாசினி தொகையுடன் சந்தேகநபரொருவர், திம்புலபத்தனையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

2 லீற்றர் கொள்ளளவுடைய கிருமிநாசினி கலன்கள் 144 மற்றும் அனுமதிப் பத்திரம் இன்றி, தரமற்ற முறையில் தயாரிக்கப்பட்ட 2 லீற்றர் கொள்ளளவுடைய கிருமிநாசினி கலன்கள் 13 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரை ஹற்றன் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக திம்புலபத்தனை பொலிஸார் கூறினர். (இ-7)

# வெள்ளவத்தை 'எக்சலன்ஸி' கட்டட உரிமையாளர் கைது

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் இடம்பெற்ற கட்டட சரிவுதொடர்பில் கட்டடத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். வெள்ளவத்தை, சார்லி மண்ட் வீதியில் சவோய் திரையரங்கின் பின்னால் அமைந்துள்ள "எக்சலன்ஸி" என்ற பெயரைக் கொண்ட வரவேற்பு மண்டபத்தின் பின்னால் உள்ள 5 மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 21 பேர் காயமடைந்திருந்தனர்.

இந்த அனர்த்தம் காரணமாக இருவர் உயிரிழந்தது டன், நேற்று முன்தினம் இரவு பத்தனையை சேர்ந்த ராமன்நிரோஷன் என்ற இளைஞன் சடலமாக கண்டுப் பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் குறித்த கட்டடத்தின் உரிமையாளர் தலைமறைவாகி இருந்தார்.

எனினும் நேற்றுக்காலை பொலிஸில் சரணடைந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# போகம்பரை சிறைச்சாலையில் போதைப்பொருள் வர்த்தகம்!

கண்டி போகம்பரை சிறைச்சாலையில் போதைப் பொருள் வர்த்தகம் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. பாரியளவில் போதைப் பொருள் வர்த்தகம் சிறைச்சாலைக்கு உள்ளேயே நடைபெறுவ தாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் சிறையிலிருந்து விடுதலையாகி வந்த கைதியொருவர் வார இறுதிப் பத்திரிகையொன்றுக்கு இது பற்றிய விபரங்களை வெளியிட்டுள்ளார்.

இந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும்சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கூடுதலான வருமானம் கிடைக்கப் பெறுவதாக அந்தக் கைதி தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் நீண்ட கால கைதிகள் போன்றோர் அதி நவீன செல்லிடப்பேசிகளை பயன்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளார். (இ-7)

# இராஜதந்திரிகள் மத்தியிலும் இரட்டை பிரஜாவுரிமை சிக்கல்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை பிரச்சினை எழுந்துள்ள நிலையில் இராஜதந்திரிகள் மத்தியில், இரட்டைப் பிரஜாவுரிமையை கொண்டிருப்பவர்கள் தொடர்பில் ஆராய்வுகள் இடம் பெறுகின்றன.

வெளியுறவுத்துறை அமைச்சு இதற்கான நட வடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் தூதரகங்களில் பணியாற்றுபவர்களில் இரட்டைப் பிரஜாவுரிமைகளை கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்களா? என்பதை கண்டறியும் முகமாகவே இந்த ஆராய்வு இடம் பெறுகிறது.

வியன்னா உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இந்த ஆராய்வு இடம் பெறுகிறது. (இ-7)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1080

Search for people, places and things Nagendram Home

பிரணவன்




மேகலா




பிதுர்ஜா




விஜிதா




சஞ்சிகா




சஞ்சீவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அமைச்சர்களை இன்று காலை ஒன்றுகூடுமாறு அவசர அழைப்பு

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

(கொழும்பு)

அமைச்சரவை இன்று மாற்றி அமைக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் அனைத்து அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களையும் இன்று காலை 8.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்துக்கு வருமாறு ஜனாதிபதி மைத்திரி அழைப்பு விடுத்துள்ளார்.

இதையடுத்து இன்று காலையில் மாற்றியமைக்கப்பட்ட புதிய அமைச்சரவை பதவியேற்பு இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, அமைச்சரவை மாற்றம் தொடர்பான சிக்கல்கள் குறித்து தேசிய புலனாய்வுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன் றையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசரமாக சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

அமைச்சரவை மாற்றத்தினால் அரசியல் சதிப்புரட்சி ஒன்று ஏற்படலாம் என்று தேசிய புலனாய்வுப் பிரிவு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்ததாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் மூடிய அறைக்குள் தனியாகப் பேச்சுக்களை நடத்தினார்.

இதையடுத்து, இன்று திங்கட்கிழமை அமைச்சரவை மாற்றத்தை செய்வது என்று முடிவெடுக்கப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அவசர மத்திய குழுக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அமைச்சரவை மாற்றம் தொடர்பான சிக்கல்கள் தொடர்பாக ஆராயவே இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை அமைச்சரவை மாற்றத்தின் போது, நிதி, வெளிவிவகாரம், ஊடகம், பொதுநிர்வாகம், நெடுஞ்சாலைகள், சட்டம் ஒழுங்கு, அமைச்சுக்களின் பதவிகளில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட நீண்ட பேச்சுக்களை அடுத்து தனது நிதியமைச்சர் பதவியை விட்டுக் கொடுக்க ரவி கருணாநாயக்க இணாங்கியுள்ளார். அவர் அடுத்த வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சராக உள்ள மங்கள சமரவீர நிதியமைச்சராக நியமிக்கப்படவுள்ளார். மங்கள சமரவீரவின் வேண்டுகோளின் பேரில், அரச தொழிற்துறை அபிவிருத்தி பிரதி அமைச்சராக உள்ள ஏரான் விக்கிரமரத்ன, பிரதி நிதி அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

எனினும், ஜனாதிபதி நிதியமைச்சர் பதவி குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என்றும், அந்தப் பதவியை பிரதமரே மேற்பார்வை செய்வார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. (இ-7)

## பள்ளிவாசல் மீது தாக்குதல்; அமெரிக்கா கடும் கண்டனம்



குருநாகல், மல்லவபிட்டிய ஜும்மா பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட பெற்றோல் குண்டு தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாகக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெஷாப் வலியுறுத்தியுள்ளார்.

பள்ளிவாசல் மீது நடந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (இ-7)

## கட்டட உரிமையாளர் விளக்கமறியலில்

கொழும்பு, வெள்ளவத்தைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கட்டட சரிவு தொடர்பில் கைது செய்யப்பட்ட கட்டட உரிமையாளரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.


கட்டட சரிவு தொடர்பில், கட்டடத்தின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அதனையடுத்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (இ-7)

## பாலியல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கு










(கொழும்பு)

கந்தப்பளை தேயிலை மலை தோட்டத்தில் கடந்த 12.05.2017 அன்று 16 வயதான சிறுமியை நால்வர் வல்லுறவுக்குட்படுத்தி மயக்கமான நிலையில் வாழை இலையால் மூடி தப்பி சென்ற சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து மலையக ஆய்வாளர் அமைப்புடன் இணைந்த மீனாட்சி பெண்கள் பாதுகாப்பு அமைப்பு கண்டன ஆர்பாட்டம் ஒன்றினை நேற்றுக்காலை கந்தப்பளை நகரில் நடத்தியது.

சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்ட போதிலும் குறித்த நபர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்தி இவ் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.


இவ் ஆர்ப்பாட்டம்தேயிலை மலை தோட்ட வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு பேரணியாக கந்தப்பளை நகரத்திற்கு வந்தது. இதில் சுமார் 300ற்கு மேற்பட்ட பெண்கள், ஆண்கள் கலந்து கொண்டனர்.


கந்தப்பளை பொலிஸார் போராட்டத்தை முன்னெடுக்க தடைசெய்த போதும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு வாசகங்களை எழுதிய பதாதைகளை ஏந்திய வண்ணம் மக்கள் ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டனர். இதில் சட்டவிரோத சாராய தறவணைகளை மூடு, மது அருந்தும் காமுகனிடமிருந்து எமது பிள்ளைகளை காப்பாற்று, மலையக மக்களை போதைக்கு அடிமையாக்காதே, வல்லுறவில் ஈடுப்பட்டவர்களுக்கு மரண தண்டனை வழங்கு என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர் (இ-7)

## போர் வெற்றி விழாவை புறக்கணித்த ராஜபக்ஷர்கள்







போர் வெற்றியின் எட்டாவது ஆண்டைக் கொண்டாடும் நிகழ்வொன்று கூட்டு எதிர்க் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வுநேற்று முன்தினம் மாலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் முக்கிய விருந்தினர்களாக முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் ராஜபக்ஷ சகோதரர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என கூட்டு எதிர்க்கட்சியினரால் கவலை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு பெங்கமுவே நாலக்க தேரரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மகிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் ராஜபக்ஷ சகோதரர்கள் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பலாலியை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்ய தடை எங்குள்ளது?

## இந்தியா உதவத் தயாராகவுள்ளது; நாம் தான் கேட்கவில்லையோ?

பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசுக்கு அதிக சிரமங்கள் தேவையில்லை. போர் ஏற்படுவதற்கு முன்பாகவே குறித்த விமான நிலையம் மிகச் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்தால் எமது மக்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகளை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

பெருமளவு தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் சுமார் 10 இலட்சத்திற்கு மேல் வாழ்ந்து வருகின்றனர். பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்தால், புலம்பெயர்ந்தவர்களது பெருமளவு பயண நேரத்தை சேமிக்கக்கூடியதாக இருக்கும். நேரடியாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவும் இதன் மூலமாக பொருளாதார வளர்ச்சிக்கு யாழ்ப்பாணம் சிறப்பாக முகம் கொடுக்கவும் முடியும்.

வடக்கு மாகாணத்தில் இதனால் ஏற்படப் போகும் பொருளாதார வளர்ச்சியானது வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மாத்திரமன்றி வட மத்திய மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெருமளவு பங்கு செலுத்தும் வாய்ப்பு அதிகமாக தென்படுகிறது.

உள்ளூர் உற்பத்திகள் பெருமளவு ஏற்றுமதியாகும்.

அரசு மனம் வைத்தால் ஒரு வருடத்திற்குள்ளாகவே சர்வதேச தரம் வாய்ந்த பிராந்திய விமான நிலையமாக இதனை தரமுயர்த்த முடியும்.

இதற்கு உதவ இந்தியா முன்வரும். ஏற்கெனவே இந்திய அதிகாரிகளால் இதற்குரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பலாலி விமான நிலையம் கடலோடு இணைந்ததாக இருப்பதும் அருகில் காங்கேசன்துறைமுகம் அமைந்திருப்பதும் எமக்குக் கிடைக்கப்பெற்ற பெரிய செல்வங்கள். எனவே இத்துறைமுகத்தையும் பலாலி விமான நிலையத்தையும் இனியும் காலம் தாழ்த்தாது துரிதமாக அபிவிருத்தி செய்து மக்களின் பயன்பாட்டுக்கும் பொருளாதார வர்த்தக தேவைகளுக்கும் பயன்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

இந்த அபிவிருத்திகளை இனியும் நாம் படவில்லை.

ஆனால், அதற்கு முதல் நாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்தியப் பிரதமருக்கு வழங்கப்பட்ட இராப்போசன விருந்தில் இரா.சம்பந்தரும் வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதில் வைத்து வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் தனக்கு அருகில் இருந்த இந்திய வெளிவிகார செயலர் ஜெயசங்கரிடம் மேற்படி விடயங்களை எடுத்துக் கூறியுள்ளார். ஆனால் அது ஒரு உத்தியோகபூர்வ சந்திப்பில் பேசுவது போல் அமையாது.

### மலையக தலைவர்களிடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளோம்

மலையகத் தலைவர்கள் தனித்தனியே இந்தியப் பிரதமரைச் சந்தித்தனர். தமக்கு வேண்டியதை கேட்டுப் பெறுகின்றனர். அவர்களின் கோரிக்கைகளில் ஒன்று தலைமன்னார்-இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்பது. நடைமுறைச் சாத்தியமானதை கேட்டுப் பெறுகிறார்கள். நாம் ஒரே பல்லவியை திரும்பத் திரும்பப் பாடுகிறோம். ஆனால்

செய்திருந்தார். அதன்போது யாழ் மாவட்டச் செயலகத்தில் கடந்த 19-ம் திகதி இடம்பெற்ற பலம்மிக்கதோர் இலங்கை பொருளாதார கலந்துரையாடலில், பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக மாற்றியமைப்பது தொடர்பில் தொழில்நுட்ப மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்படும் என்றும், அதனை அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான நிதி வழங்குநரை தேடிக் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக மாற்றுவது தொடர்பிலும் பேசப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோர், தற்போதுள்ள காணிக்கு மேலதிகமாக மக்கள் காணியை சுவீகரிக்காமல் இதனை பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

இந்தியத் தொழில்நுட்ப குழுவினர் விமான் நிலையத்தை ஆராய்ந்தனர். தற்போதுள்ள ஓடுதளமே பிராந்திய விமான நிலையமாக மாற்றுவதற்குப் போதுமானது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் விமானப் படையினர் பிராந்திய விமான நிலையமாக மாற்றுவதற்கு மக்களின் காணிகள் தேவை என்று குறிப்பிடுகின்றனர் என்று பிரதமருக்கு கூட்டமைப்பு பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப்பட்டது.

## நிதியை தேடுகிறதாம் அரசு

புலம்பெயர் தமிழ் மக்கள் மட்டுமன்றி ஏனைய உல்லாசப் பயணிகளும் பெருமளவில் வடக்கு மாகாணத்திற்கு வருகின்றனர். இங்கு வாழும் மக்களின் கலை கலாசாரத்தில் அவர்கள் அதிகளவு ஆர்வம் கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. பலாலி விமான நில்யத்தின் அபிவிருத்தி இப் பிராந்தியத்தின் சுற்றுலாத் துறையின் அபிவிருத்தியுடன் மட்டும் நோக்காது தேசிய பொருளாதாரத்திற்கு நாம் செலுத்தும் பங்களிப்பையும் கணிசமாக அதிகரிக்கும் வாய்ப்பையும் புறந்தள்ளலாகாது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வேலையில்லாப் பிரச்சினையால் அவர்கள் விரக்தி நிலையில் இருப்பதனையும் காண முடிகிறது. இவ்வாறான இளைஞர்களுக்கு சுற்றுலாத்துறையில் அதிக வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும். வடக்கு கிழக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கமும் செயற்றிட்டமும் பலாலி விமான நிலையத்துடன் மேம்பாட்டுடன் இணைந்ததாகவே இருக்க முடியும்.

பலாலி விமான நிலையம் மூலமாக உதாசீனம் செய்தால் எமது பிராந்தியத்தின் பொருளாதார வர்த்தக வளர்ச்சியில் தேக்க நிலைமை ஏற்படும். அதிகரித்து செல்லும் வேலையில்லாப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும்.

காங்கேசன்துறைமுகம் வர்த்தக நடவடிக்கைக்காக திறந்து விடப்பட வேண்டும். வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் தற்போது கொழும்புத் துறைமுகம் மூலமே இறக்குமதி-ஏற்றுமதி வர்த்தகம் செய்கிறார்கள். இதனால் வீண் செலவும் தூரமும் அதிக நாள்களும் செல்கிறது. ஆகவே காங்கேசன்துறைமுகத்தை வர்த்தக நடவடிக்கைக்காக திறந்துவிடல் வேண்டும்.

இது தொடர்பில் இலங்கை அரசுடனும் இந்திய பிரதமருடனுடம் உரையாடி விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்ப்பாணம் வணிகர் கழகம் எதிர்க் கட்சித் தலைவரும் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனிடமும் கூட்டமைப்பு எம்பிக்களிடமும் மோடியின் அண்மைய விஜயத்திற்கு முன்னர் கோரியிருந்தது.

ஆனால் இந்தியப் பிரதமருடனான விமான நிலைய சந்திப்பில் கூட்டமைப்பால் மேற்படி கோரிக்கைகள் முன்வைக்கப்




## மீண்டும் முதலில் இருந்தா...

செயலில் ஒன்றும் கிடையாது.

அதுபோக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் வடக்கிற்கு விஜயம்




இதன் பின்னர் பதில் வழங்கிய பிரதமர், தொழில்நுட்ப மீள் மதிப்பீடு செய்யப்படும். பலாலி விமான நிலையம் பிராந்திய விமான நிலையமாக மாற்றப்படும். இதனை அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான நிதி வழங்குநரை தேடிக் கொண்டிருக்கிறோம் என்றார்.

பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணியை இந்தியாவே மேற்கொள்ளும் என முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன. இதிலிருந்து தெரிவது இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய உதவுமாறு கோரிக்கை விடுக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கோரவில்லை.

அவ்வாறு கோரியிருந்து நிதி வழங்க முடியாது என இந்தியா மறுத்ததா? அப்படியாயின் அக் கூட்டத்திலேயே கூட்டமைப்பு இதைத் தெளிவுபடுத்தியிருக்கலாம்.

அப்படியாயின் ஏன் பிரதமர் பொருத்தமான நிதி வழங்குனரை தேடிக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார். நிதி-நிதி வழங்குநர் தான் பிரச்சினையா? இதற்கான தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காலம் தாழ்த்தாது கண்டறிய வேண்டும்.

# வடக்கு பாதை வலையமைப்பை விருத்தி செய்வதில் இந்தியா ஆர்வம் -ரணில்

வடக்கு மாகாண பாதை வலையமைப்பை அபிவிருத்தி செய்வதில் இந்தியா வெகு ஆர்வமாக உள்ளது. இந்தியாவின் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி இது தொடர்பில் யாழ்ப்பாணத்துக்கு வந்து ஆராயவுள்ளார். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டச் செயலகத்தில் கடந்த 19-ம் திகதி இடம்பெற்ற பலம்மிக்கதோர் இலங்கை பொருளாதார கலந்துரையாடலில் தலைமை உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்தேன். இந்தியாவின் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரியை சந்தித்து பேசியிருந்தேன். அவர்கள் வடக்கின் பாதை வலையமைப்பை அபிவிருத்தி செய்வதில் ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி ஊடாக மன்னாருக்கு விரைவுப் பாதை அமைக்கப்படும். அங்கிருந்து கடலோர விரைவுப் பாதை அமைத்து அதனூடாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துடன் இணைப்பது முதலாவது திட்டம்.

மன்னாரிலிருந்து வவுனியா ஊடாக திருகோணமலைக்கு விரைவுப் பாதை அமைப்பது இரண்டாவது திட்டம். இவ்வாறு அமைக்கப்படும் பாதைகள் அனைத்தும் தற்போதுள்ள பாதைகளுக்கு மேலதிகமாகவே அமைக்கப்படும். இதனை விட வடக்கின் உள்ளூர் நெடுஞ்சாலைகளையும் அபிவிருத்தி செய்ய இந்தியா விரும்புவதாக இந்திய அமைச்சர் கூறினார். என்றார்.

இப்போதே யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு தயாராக இருப்பதாக நிதின் கட்கரி . பிரதமரிடம் கூறியுள்ளார். தனது பயணம் பயனுள்ளதாக அமைய வேண்டும் பாதைக் கட்டமைப்புத் தொடர்பில் செயலாக்க ஆய்வுகளைத் தயாரித்த பின்னர் இது தொடர்பில் நேரில் வந்து ஆராய்வதாகவும் தலைமை அமைச்சரிடம் கட்கரி கூறியதாக தெரியவருகிறது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 150.62 | 154.42 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 194.25 | 200.86 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 166.25 | 172.55 |
| சுவிஸ் பிராங் | 152.69 | 158.74 |
| கனேடிய டொலர் | 110.02 | 114.38 |
| அவுஸ்திரேலிய டொலர் | 110.68 | 115.66 |
| சிங்கப்பூர் டொலர் | 107.69 | 111.63 |
| ஜப்பான் யென் | 1.34 | 1.39 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.35 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.51 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




# கால் முளைத்த மீன்கள்



ஒரு நாள் பரமாத்த குருவின் சீடர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிக்க வேண்டும் என்ற ஆசை மட்டிக்கு ஏற்பட்டது. தன் விருப்பத்தைக் குருவிடம் தெரிவித்தான்.

அதைக் கேட்ட மடையன், "குருவே! பகலில் போனால், பெரிய பெரிய அலைகள் நம்மைச் சாகடித்து விடும். அதனால் இராத்திரியில் தான் போக வேண்டும்" என்றான்.

"ஆமாம் குருவே! அப்போது தான் கடல் தூங்கிக் கொண்டு இருக்கும்!" என்றான். மண்டு "ஒரே இருட்டாக இருக்குமே? என்ன செய்வது?" எனக் கேட்டான் மூடன்.

"என் கையில் தான் கொள்ளிக்கட்டை இருக்கிறதே!" என்றான் முட்டாள். கடல் என்றதுமே பரமார்த்தருக்குப் பயமாக இருந்தது. இருந்தாலும், சீடர்கள் தன்னைக் கோழை என்று நினைத்து விடக்கூடாது என்பதால் சம்மதம் தெரிவித்தார்.

சீடர்கள் மகிழ்ச்சியோடு ஆளுக்கு ஒரு தூண்டில் தயார் செய்தனர். இரவு வந்தது. குருவும் சீடர்களும் கொள்ளிக்கட்டை வெளிச்சத்தில் மீன் பிடிக்கப் புறப்பட்டார்கள். கடற்கரை ஓரத்தில் படகு ஒன்று இருந்தது. அதில் பரமார்த்தரும், அவரது ஐந்து சீடர்களும் ஏறிக் கொண்டனர். மட்டியும், மடையனும் கண்டபடி துடுப்புப் போட்டனர்.

மூடன் தூண்டிலைப் போட்டான். அவன் போட்ட தூண்டிலில் தவளை ஒன்று மாட்டியது. அதைக் கண்ட சீடர்கள், "இதென்ன? விசித்திரமாக இருக்கிறதே!" என்று கேட்டனர். அது தவளை என்பதை மறந்த பரமார்த்தர் "இதுவும் ஒரு வகை மீன்தான். அதிகமாக தின்று கொழுத்து விட்டால் இப்படிக் கால்கள் முளைத்து விடும்" என்று விளக்கம் கூறினார்.

"அப்படியானால் கால் முளைத்த மீன்களைக் கட்டிப் போட்டு, வீட்டிலேயே வளர்க்கலாம்!" என்றான் மட்டி. அதற்குப் பிறகு, மண்டு போட்ட தூண்டிலில் ஒரு சிறிய மீன் மட்டுமே மாட்டியது. "குருநாதா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. படகுக்கு வெளியே நிறைய மீன்கள் இருந்தாலும் கொஞ்சம் தான் நமக்குக் கிடைக்கின்றன. அதனால் படகில் சில ஓட்டைகளைப் போட்டு, பக்கத்தில் கொஞ்சம் பூச்சிகளை வைத்து விடுவோம்! அந்தப் பூச்சிகளைத் தின்பதற்காக, மீன்கள் ஓட்டை வழியாகப் படகுக்குள் வரும். உடனே லபக் என்று பிடித்துக் கொள்ளலாம்!" என்றான் முட்டாள்.

"சபாஷ்! சரியான யோசனை!" என்று முட்டாளைப் பாராட்டினார், பரமார்த்தர்.

அவன் யோசனைப்படி படகிலிருந்த ஆணிகளால், ஆளுக்கு ஒரு ஓட்டை போட்டனர். அவ்வளவு தான்! அப்போதே கடல் நீர் குபுகுபு என்று படகுக்குள் பாய்ந்து வந்தது. அதைக் கண்ட சீடர்கள் "ஐயோ" என்று கத்திக் கொண்டு எகிறிக் குதித்தனர். அதனால் இன்னும் கொஞ்சம் ஆட்டம் கண்டது படகு.

அதற்குள் படகு முழுவதும் நீர் நிரம்பி விடவே, படகு கடலுக்குள் மூழ்கியது. குருவும் சீடர்களும் லபோ திபோ என்று அலறியபடி நீருக்குள் தத்தளித்தனர்.

அவர்கள் போட்ட சப்தத்தைக் கேட்டு, அங்கு வந்த சில மீனவர்கள் நீந்திச் சென்று அனைவரையும் காப்பாற்றினர்.

மடத்துக்கு வந்து சேர்ந்த சீடர்கள், "நம் படகு எப்படிக் கவிழ்ந்தது?" என்று கேட்டனர். "கடலும், மீன்களும் சேர்ந்து சதித் திட்டம் செய்து தான் நம் படகைக் கவிழ்த்து விட்டன! என்றார் பரமார்த்தர். "அப்படியானால், எப்படியாவது கடலின் திமிரையும் மீன்களின் கொட்டத்தையும அடக்க வேண்டும்" என்றான் மட்டி.

குருவே! முடிந்தவரை மீன்களைப் பிடித்துக் கொன்று விடுவோம்" என்றான் மடையன். "ஆமாம்! சும்மா விடக்கூடாது. மறுபடியும் மீன் பிடிப்போம், வாருங்கள்" என்றான் முட்டாள். மறுநாளும் மீன்பிடிக்கப் புறப்பட்டனர்.

கடலுக்குள் சென்றதும், "குருவே! எங்களை விட உங்கள் மீது தான் மீன்களுக்குக் கோபம் அதிகமாக இருக்கும். அதனால், தூண்டில் போடுவதற்குப் பதில், உங்களையே கயிற்றில் கட்டி கடலுக்குள் இறக்கி விடுகிறோம்" என்றான் மட்டி. "உங்களைக் கடிப்பதற்காகக் கடலில் உள்ள எல்லா மீன்களும் வரும். உடனே நாங்கள் எல்லா மீன்களையும் பிடித்து விடுகிறோம்" என்றான் மடையன். குரு சற்று நேரம் யோசித்தார். "நீங்கள் சொல்வதும் சரியே" என்றார்.

உடனே சீடர்கள் அவரைக் கயிற்றில் கட்டி, கடலில் தூக்கிப் போட்டனர். நீச்சல் தெரியாத பரமார்த்தர், நீருக்குள் மூழ்கியதும் மூச்சு விட முடியாமல் துடித்தார். நீரின் மேல் பரப்பில் காற்றுக் குமிழிகள் வருவதைக் கண்ட சீடர்கள், "அடேயப்பா! நம் குரு நிறைய மீன்களைப் பிடிக்கிறார் போலிருக்கிறது" என்றனர்.

பரமார்த்தரின் வயிறு முழுவதும் நீர் நிரம்பியதால் குமிழிகள் வருவது நின்றன. எல்லா மீன்களையும் பிடித்து விட்டார் என்று நினைத்த சீடர்கள், நீரிலிருந்து குருவைத் தூக்கினர்.

ஆனால் பரமார்த்தரோ மயங்கிக் கிடந்தார். "மீன்களோடு நீண்ட நேரம் சண்டை போட்டதால் களைத்து விட்டார்!" என்றான் மட்டி. கண் விழித்த பரமார்த்தர், "சீடர்களே! இன்னும் நம் மீது, கடலுக்கு இருக்கும் கோபம் தீரவில்லை.

எப்படியோ இந்தத் தடவை தப்பித்துக் கொண்டோம். இனி மேல், கடல் பக்கமே போக வேண்டாம்!" என்றார். கடைசியில் கடலையும் மீன்களையும் திட்டியபடி அனைவரும் கரை சேர்ந்தனர்.




- 1834 - இலங்கையில் சட்டசபையின் முதலாவது கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது.
- 1844 - பாரசீக மதகுரு பாப் தனது பாபிசம் என்ற தனது மதக்கொள்கையை வெளியிட்டார். இவரே பஹாய் சமயத்தைத் தோற்றுவித்த பகாவுல்லாவின் முன்னோடி எனக் கருதப்படுகிறது.
- 1906 - ரைட் சகோதரர்கள் தமது பறக்கும் கருவிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- 1915 - ஸ்கொட்லாந்தில் ஐந்து தொடருந்துகள் ஒன்றோடொன்று மோதியதில் 227 பேர் கொல்லப்பட்டனர். 246 பேர் காயமடைந்தனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: மெக்சிக்கோ நேச நாடுகள் தரப்பில் போரில் குதித்தது.
- 1958- இலங்கை இனக்கலவரம் - இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிங்களவ்ர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1960 - தெற்கு சிலியில் நிகழ்ந்த 9.5 அளவு நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலையினால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இதுவே இதுவரையில் பதியப்பட்ட அதிசக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஆகும்.
- 1968 - அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஸ்கோர்ப்பியன் மூழ்கியதில் 99 பேர் கொல்லப்பட்டனர்.
- 1972 - இலங்கையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்து குடியரசு ஆகியது. சிலோன், ஸ்ரீலங்கா எனப் பெயர் மாற்றம் பெற்றது. பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெற்றது.
- 1990 - வடக்கு யேமன் மற்றும் தெற்கு யேமன் ஆகியன இணைந்து யேமன் குடியரசு ஆகியது.
- 1990 - விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது.
- 2004 - நெப்ராஸ்காவில் இடம்பெற்ற சூறாவளியினால் ஹலாம் நகரம் முற்றிலும் அழிந்தது.

பிறப்புகள்

- 1408 -அன்னமாச்சாரியார், இந்து சமயப் பெரியார், கர்நாடக இசை அறிஞர் (இ. 1503)
- 1772 - இராசாராம் மோகன் ராய், இந்திய மெய்யியலாளர் (இ. 1833)
- 1813-ரிச்சார்ட் வாக்னர், செருமானிய இசையமைப்பாளர் (இ. 1883)
- 1844 - மேரி கசாட், அமெரிக்க ஓவியர் (இ. 1926)
- 1859 - ஆர்தர் கொனன் டொயில், பிரித்தானிய எழுத்தாளர் (இ. 1930)
- 1867-உமையாள்புரம் சுவாமிநாத ஐயர், தமிழக கர்நாடக இசைக் கலைஞர் (இ. 1946)
- 1900-தேவதாஸ் காந்தி, இந்திய விடுதலைச் செயற்பாட்டாளர், காந்தியவாதி (இ. 1957)
- 1926-தமிழ்வாணன், தமிழக எழுத்தாளர், இதழாசிரியர் (இ. 1977)
- 1933-ஊரன் அடிகள், தமிழக நூலாசிரியர், உரையாசிரியர், பத்திரிகையாசிரியர்
- 1935-சி.வி.சந்திரசேகர், தமிழக பரதநாட்டியக் கலைஞர், நடன அமைப்பாளர்
- 1940-வை.சச்சிதானந்தசிவம், ஈழத்து ஓவியர், எழுத்தாளர் (இ. 2006)
- 1940-பி. விருத்தாசலம், தமிழகத் தமிழறிஞர், பேராசிரியர் (இ. 2010)
- 1944-வைகோ, தமிழக அரசியல்வாதி
- 1948 - நெடுமுடி வேணு, இந்திய நடிகர்
- 1959 -மெகபூபா முப்தி, இந்திய அரசியல்வாதி

இறப்புகள்

- 1545 - சேர் சா சூரி, இந்திய அரசர் (பி. 1486)
- 1885 - விக்டர் ஹியூகோ, பிரான்சிய புதின எழுத்தாளர், கவிஞர் (பி. 1802)
- 1967 -லாங்ஸ்ரன் ஹியூஸ், அமெரிக்கக் கவிஞர், எழுத்தாளர் (பி. 1902)
- 1991 - எஸ். ஏ. டாங்கே, இந்திய அரசியல்வாதி (பி. 1899)

சிறப்பு நாள்

- அடிமை ஒழிப்பு நாள் (மர்தினிக்கு)
- குடியரசு நாள் (இலங்கை)
- ஒற்றுமை நாள் (யெமன், 1990)
- பன்னாட்டு பல்லுயிர் பெருக்க நாள்

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 80 | 120 | 120 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 85 | 120 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 200 | 240 | 200 | 200 | 200 |
| தக்காளி | 120 | 100 | 70 | 100 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 160 | 200 | 120 | 140 | 160 | 200 | 120 |
| கரட் | 280 | 400 | 150 | 200-320 | 240 | 300 | 250 |
| பூசணி | 50 | 60 | 40 | 60 | 50 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 | 40 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 240 | 300 | 180 | 240 | 280 | 300 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 95 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 200 | 140 | 160 | 140 | 160 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 100 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | — | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 160 | 100 | 50 | 140 | 220 | 120 | 120 |
| லீக்ஸ | 80 | 100 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 130 | 100 | 100 | 120 | 120 | 140 | 140 |
| கறிமிளகாய் | 160 | 200 | 100 | 200 | 140 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 110 | 120 | 100 | 120 | 100 |
| போஞ்சி | 180 | 200 | 140 | 240 | 160 | 200 | 220 |
| கத்தரித்தம்புள்ள | 100 | 50 | 60 | 80 | — | 120 | 90 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 150 | 30 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 50 | 60 | 40 | 70 | 40 | 40 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 70 | 70 | 60 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | — | 100 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 150 | 240 | 240 | 280 | — |
| முள்ளங்கி | 80 | 100 | 140 | 80 | 80 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 60 | — | 100 | 70 | — | — |

சந்தர்ப்பம் வரும் என்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். தங்களுக்கு தேவையான சந்தர்ப்பத்தை தேடிப் பெறுபவர்கள்தான் முன்னேற்றம் காண்பர்.

– பெர்னாட்ஷா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கின் முதலமைச்சர் களத்தில் இறங்க வேண்டும்

தமிழ் மக்களின் விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கின்ற அதேநேரம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து தமிழ் மக்களின் மிக இக்கட்டான சூழ்நிலையை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் எடுத்துக் கூற வேண்டும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கொழும்புக்கு வந்திருந்தாராயினும் அவர் தமிழ் மக்களின் விடயம் தொடர்பில் எந்தவிதமான உறுதிமொழிகளையோ அல்லது இலங்கை அரசுக்கான அழுத்தத்தையோ கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

நாங்களும் பிரதமர் மோடியைச் சந்தித்தோம் என்ற ஒரு பதிவைத் தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் இந்தியப் பிரதமருக்குமான சந்திப்பு எந்த வகையிலும் பெறுமதி இல்லாத சந்திப்பு என்று சொல்வதை விட வேறு வழியில்லை.

அதேநேரம் இந்தியாவின் பிரதமர்களாக இருந்தவர்களில் அன்னை இந்திரா காந்தி அவர்கள் ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்தவர். சில முக்கியமான விடயங்களை முன்னெடுத்தவர். அவர் உயிரோடு இருந்திருந்தால், இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்திருக்கும் என்று திடமாகக் கூற முடியும்.

என்ன செய்வது! எங்கள் தலைவிதி அவர் அகால மரணமடைந்து போனார். அதன் பின்பு இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜிவ் காந்தியும் எம்மீது கருசனை கொண்டவராக இருந்தாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் எதிர்மறையான முடிவுகளையே தந்து போயின.

அந்த துன்பியல் சம்பவங்களுக்குப் பின்னர், இந்தியாவின் பிரதமர்களாக இருந்த எவரும் ஈழத் தமிழ் மக்களைப் பற்றிக் கதைப்பதையோ பேசுவதையோ இந்தியாவின் அரசியல் சாசனத்துக்குப் பங்கம் என்பது போல நடந்து கொண்டனர்.

எனினும் இந்தியாவின் இன்றைய பிரதமர் நரேந்திர மோடி அண்டைய நாடு தொடர்பிலும் ஈழத் தமிழர்கள் தொடர்பிலும் கருசனை எடுக்கக்கூடியவர் என்பது தெரிகிறது.

இவ்வாறு அவர் எங்கள் மீது கருசனை கொள்வதாக இருந்தால் அவருக்கு எங்களின் இன்றைய நிலைமையை வலுவாக எடுத்துரைக்க வேண்டும்.

அதிலும் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் இதைச் செய்தால் அதற்கு நல்ல விளைவு கிடைக்கும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியும்.

வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள், இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திப்பது, எங்கள் பிரச்சினைகளை அவருக்கு எடுத்துரைப்பது என்ற விடயத்தில் யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய இந்தியத் துணைத் தூதரகம் தனது கணிசமான வகிபங்கை ஆற்ற முடியும்.

உண்மையில் இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாணத்தில் இயங்குவதனை எமக்குச் சாதகமாக்குவது என்பது தமிழ் மக்களின் உயர்ந்த இராஜதந்திரமாக இருக்கும்.

நல்லாட்சி; இந்தியப் பிரதமர்; வடக்கின் முதலமைச்சர்; யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் ஆர்.நடராஜன் என்ற ஒரு சுற்றுவட்டப் பாதையில் பிரதமர் மோடியை எம்பக்கமாக திசை திருப்பம் செய்யும் போது தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மட்டுமன்றி உரிமைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்பதால்,

பிரதமர் மோடியைச் சந்திக்க முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் களமிறங்க வேண்டும்.

# தமிழ் சமூகத்தை மீண்டும் அநாதையாக்க அரசு சதி!

## வியாழேந்திரன் எம்.பி.குற்றச்சாட்டு

எமது தமிழ் சமூகத்தை மீண்டும் அநாதையாக்கும் நோக்கில் போதைப்பொருள் பாவனையை அதிகரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்துகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் குற்றம் சாட்டினார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம்இடம்பெற்றபோதைக்கு எதிரான பேரணியில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறியுள் ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் திறக்கப்பட்ட, திறக்கப்பட இருக்கின்ற அனைத்து மதுபானசாலை உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களை தனியார் திறக்கவில்லை. தனியாருக்கு அனுமதியை நேரடியாக வழங்குவது அரசாங்கமே.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொண்டுவரப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களை நிறுத்துவதற்கோ அல்லது மூடுவதற்கோ, பிரதேச செயலாளர், மாவட்ட அரச அதிபர், மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.

முற்றுமுழுதாக தமிழர் தாயக பூமியில் மதுபான சாலைகளை அமைக்க திட்டமிட்டுக்கொண்டிருப்பது மத்திய அரசாங்கம். அரசாங்கம் இந்த விடயத்தில் தன்னை முழு அளவில் திருத்திக் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் போராட்டக் காலத்தில் தாயகப் பூமியிலுள்ள மண் வளம் பாதுகாக்கப்பட்டது. ஆனால் தற்போது கொழும்பில் உள்ளவர்கள் தான், மட்டக்களப்பு மாவட்ட மண் வளத்தையும் எமது வளத்தையும் சுரண்டி கோடீஸ்வரர் ஆகின்றார்கள்.

யுத்தம் மற்றும் சுனாமி போன்ற பல்வேறுபட்ட அனர்த்தங்களுக்கு உள்ளான மட்டக்களப்பு மாவட்டத்தை கல்வி ரீதியாக பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் சேர்ந்து எவ்வாறு முன்னேற்றுவது என்று சிந்திக்கின்ற வேளையில், மது போதையை விதைக்கும் நல்லாட்சி அரசின் இந்த செயற்பாட்டை எம்மால் ஒரு போதும அனுமதிக்க முடியாது.

மத்திய அரசு, மாகாணம், மாவட்டம், பிரதேச செயலகம் போன்றவற்றின் கீழ் செய்கின்ற பல்வேறுபட்ட செயற்திட்டங்களை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் வன்மையாக கண்டிக்கின் றோம்.

நல்லாட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப் பிட்டது போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மதுபான விற்பனை நிலையம் கூட திறக்கப்படாது என கனவு கண்டோம்.

ஆனால் நல்லாட்சி ஆட்சிக்கு வந்த 4 மாதத்தில் மட்டக்களப்பு கல்குடா கும்புறு மூலைப் பகுதியில் 19 ஏக்கர் நிலப்பரப்பில், 450 கோடி ரூபாய் செலவில் ஒரு மதுபானசாலை உற்பத்தி தொழிற்சாலை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவில் குறித்த மதுபான உற்பத்திச் சாலை கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மக்கள் போராட்டம், மாவட்ட அபிவிருத்திக் குழு அமர்வுகளில் குறித்த மதுபான சாலை உற்பத்தி நிலையத்தை மூடுமாறு அழுத்தம் கொடுத்தும், அரசு வாய்மூடி கைகட்டிக் கொண்டிருக்கின்றது.


அத்துடன், மத்திய அரசு அதற்கான ஆதரவை வழங்கிக்கொண்டிருப்பதை வன்மையாக கண்டிக்கின் றோம். குறித்த விடயம் தொடர்பில் அரசாங்கம் முடிவை வழங்க வேண்டுமென எதிர்பார்த்து இருக்கின்றோம்.

மட்டக்களப்பில் இருக்கின்ற புத்திஜீவிகள் என தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருப்பவர்கள் தெளிவாக ஒன்றை புரிந்து கொள்ளுங்கள்.

இந்த மாவட்டத்தில் மதுபான உற்பத்தி தொழிற்சாலையினால் கிடைக்கும் வேலைவாய்ப்பு எமது மக்களுக்குத் தேவையில்லை.

கல்குடா மதுபான உற்பத்தி நிலையத்தினால் முழு இலங்கைக்கும் மதுபானம் வழங்கும் நிலையமாக மாறப் போகின்றது. குறித்த மதுபான உற்பத்தி தொழிற்சாலை எமது மாவட்டத்திற்கு தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்துள் ளார். (இ-7)

## உலக உயிர்கள் தலைவனே முருகா! அழியாது காப்பாய்



காத்தல் கடவுளே நல்லூர் சிவ முருகா
கணபதி சிவதம்பி கலியுக சிவவேலவா
கற்பனை கடந்த சோதி எங்குமாகியே
கஜவல்லி மகா வல்லியுடனேவாவா
நித்தம் நினைக்கும் அன்பருள்ளத்தில்
நற்காப்பு சத்துரு சங்கார சிவகுகா வா
நீதி நல்உலகில் சமதர்மமாகவும்
நல்லுயிரானயாவும் நிலைக்கவே
அருளுக வித்தகப் பெருமானே
உலகமகா சமாதான வையகதேச
சமாதான சிவகந்தாகாப்பு
விண்ணுயர் கோபுர தேவாதி தெய்வமே
வாழ்வு தரும் சிவ தண்டாயுதபாணி சிவ
முத்திக்கு வித்தே அனாதீ மூலப் பொருளே
முக்கண்பிதாவின் சிவ அக்னி ஆறுமுகா
மாயைசட உலகின் உயிர்கள் தலைவனே
அழியாது காத்திரு மணவாள சிவ முருகா!

நல்லூர் சிவமுருகன்.
என். தமிழ்மகன் (நந்தகுமார்) குருக்கள் (B.A)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் சிலாவத்தை, உடுப்பிக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாடடங்கேணி, கொக்கிளாய், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும மன்னார் பிரதேசத்தில அடம்பனிலிருந்து பாப்பா மோட்டை ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும்.(இ-9)

## நாய்க்கடியிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்!

கடிநாய் ஒன்று துரத்தும் போது நிலத்தில் விழுந்து விட்டால் முகத்தை கைகளால் மூடிய வண்ணம் படுத்துக் கொள்ளுங்கள்.

**வளர்ப்பு நாய்கள் கட்டின்றி பெருகுவதைத் தடுக்க கருத்தடை சிகிச்சை செய்திடுவோம்!**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உலக அமைதி (World Peace)




1. ஒரு நாட்டுக்கு நாடு அரசியல் முறை வேறுபட்டிருக்கும் வரைக்கும்
2. இயற்கையின் மூலதனமான பூமியைத் தனி மனிதனோ அல்லது குழுவினரோ தங்களுக்குச் சொந்தம் என்று எல்லைக் கட்டிக் கொண்டிருக்கும் வரைக்கும்
3. ஒரு மனிதன் முயற்சியினால் விளைவிக்கும் எந்தப் பொருள் எனினும் அது அவனுக்கோ, அவனுடைய வாரிசுகள் எனப்பட்ட குறிப்பிட்ட நபர்களுக்கோ தான் உரிமையானது என்ற கற்பனை முறை நீடித்திருக்கும் வரைக்கும்
4. குழந்தை வளர்ப்பு, முதியோர் பராமரிப்பு என்ற இருவகையும் பெற்றோர்கள், மக்கள் இவர்கள் பொறுப்பிலிருந்து விடுபட்டுச் சமுதாயப் பொதுவாக நடைபெறும் காலம் வரைக்கும்
5. வாலிபப் பருவமும், உடல் வலிவும் உடைய அனைவருக்கும் அறிவிற்கும், உடலுக்கும் தகுந்தபடி ஆக்கத் தொழில் புரியும் வாய்ப்பு சமுதாயத்தில் கிடைக்கும் ஒரு அமைப்பு ஏற்படும் வரைக்கும்
6. உலகில் ஒரு மனிதனேனும் உணவு கிடைக்கவில்லை என்ற காரணத்தால் பட்டினி கிடக்க நேரிடும் முறையில் நிர்வாகம் நடைபெறும் வரைக்கும்
7. உணவிற்காக வேறு ஒரு ஜீவனைக் கொல்லும் பழக்கமும், அவசியமும் மனிதனுக்கு இருக்கும் வரைக்கும்.

உலக மக்கள் வாழ்வில் நிரந்தரமாக அமைதி என்பது ஏற்பட முடியுமா?

# சென்.சேவியர் கல்லூரியை வீழ்த்தி சம்பியனாகியது புனித ஹென்றியரசர்




வட மாகாண பாடசாலைகள் விளையாட்டு விழாவின் கால்பந்து தொடரின் பலம் மிக்க அணிகளைக் கொண்ட 20 வயதின் கீழ் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணியை வீழ்த்தி பிரபல இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி சம்பியன் பட்டம் வென்றது.

அதற்கு முன்னர் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியினர் மன்னார் முருங்கன் கல்லூரி அணியினரை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

அதேபோன்று, இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மன்னார் சென்.சேவியர் கல்லூரி வீரர்கள் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியினரை 2-0 என்ற கோல்கள் அடிப்படையில்வீழ்த்தியிருந்தனர்.

தொடரின் இறுதி ஆட்டமானது அண்மையில் பெரும் எண்ணிக்கையிலான ரசிகர் கூட்டத்திற்கு மத்தியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தின் முதல் சில நிமிடங்கள் சற்று மந்த நிலையில் சென்றுகொண்டிருந்தது. எனினும், ஆட்டத்தின் இடையில் சென்.சேவியர் அணியின் தண்டப் பரப்பினுள் அவ்வணியின் பின்கள வீரர் ஒருவரின் கையில் பந்து பட்டமையினால் ஹென்றியரசர் அணிக்கு தண்ட உதைக்கான (பனால்டி) சந்தர்ப்பம் கிடைத்தது.

இதன்போது அவ்வணியின் முன்கள வீரர் அமலதாஸ் மதுஸ்சன் மிக லாபகமாக முதல்கோலைப் பெற்றார்.

முதல் கோலின் பின்னர் ஆட்டம் சூடு பிடித்தது. ஆட்டத்தின் வேகம் குறையாமல்நடைபெற்றுக்கொண்டிருக்க, முதல் கோலைப் பெற்ற மதுஸ்சன் நீண்ட தூரத்தில் இருந்து ஒரு அசத்தல் கோலை போட்டு அணிக்கு மேலும் பலம் சேர்த்தார்.

இருந்தும் மனம் தளராத மன்னார் சென்.சேவியர் அணி வீரர்கள், தமது அணிக்கான முதல் கோலைப் பெறுவதற்கு எத்தனித்துக்கொண்டே இருந்தனர். எனினும் அவர்களது முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை.

இரண்டாவது பாதியாட்டத்தில் முதல் பாதியை விட மன்னார் சென் சேவியர் அணி ஆதிக்கம் செலுத்தியிருந்தது. அவர்கள் தமது முதல் கோலுக்காக பலமுறை முயற்சி செய்தும் அவை எதுவுமே பலன் அளிக்கவில்லை.

எனினும், மறுமுனையில் ஆட்ட இடையில் புனித ஹென்றியரசர் அணியின் மற்றொரு வீரரான அன்டனி ராஜ் அணிக்கான மூன்றாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். அவரது கோலின் மூலம் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியின் வெற்றி உறுதியானது.

எனவே, 2015ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கு இடையிலான கொத்மலே கிண்ண சம்பியன்களான புனித ஹென்றியரசர் கல்லூரி, இந்த ஆட்ட நேர முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வட மாகாண சம்பியன்களாக முடிசூடினர்.

### மூன்றாம் இடத்திற்கான போட்டி

அரையிறுதி ஆட்டங்களில் தோல்வியடைந்த மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம் மற்றும் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி ஆகிய அணிகள் இப்போட்டியில் மோதியிருந்தன.

ஆட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதிய போதும், முதற்பாதியிலேயே இரண்டு கோல்களால் முன்னிலை பெற்றனர் முருங்கன் மகாவித்தியாலய அணியினர்.

மீண்டும் இரண்டாவது பாதியின் ஆரம்பத்திலேயே மேலும் ஒரு கோலை பெற்றனர் முருங்கன் மகா வித்தியாலய அணியினர்.

அதன் பின்னர் ஆட்டத்தை வேகப்படுத்திய ஹாட்லி கல்லூரி அணியினருக்கு ததீசன் முதல் கோலைப் பெற்றுக் கொடுத்தார். அவரது கோலுடன் உற்சாகமடைந்த அவ்வணி வீரர்கள் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

அதன் பலனாக, உதயசாந் அடுத்தடுத்து இரண்டு கோல்கள் போட, ஆட்டநேர நிறைவில் இரு அணிகளும் தலா 3 கோல்களினால் சமநிலை பெற்றது.

இதன் காரணமாக, சமநிலை தவிர்ப்பு (பனால்டி) உதையில் 5:4 என்ற கோல்கள்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தினை தமதாக்கியது மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம். (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III - 2017

## சம புள்ளிகளுடன் ஜொனியன்ஸ் - விக்டோறி






சுற்றுப் போட்டி தொடரின் தகுதி காண் போட்டிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்த வரிசையில் மூளாய் விக்டோறி- யாழ்.ஜொனியன்ஸ் அணிகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் மழை இடையூறு காரணமாக போட்டியை தொடர்ந்து நடத்த முடியாமல் போனதால் ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III இற்கான போட்டி விதிகளின் படி இரு அணிகளுக்கு சம புள்ளிகள் வழங்கப்பட்டு போட்டி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இரு அணிகளுக்கு சம புள்ளிகள் வழங்கப்பட்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டோறி அணி 46 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 212 ஓட்டங்களை பெற்றது.

ஐங்கரன்-31,கணேஷ்-27, இன்பராசா-36, கஜீன்தரன் ஆட்டமிழக்காது 41, பிரதீஸ்-19 ஓட்டங்களைப் பெற்றனர்.கானாமிர்தன்-02, லவேஸ்கிரா -01, கிஸாந்துஜன்-02, டக்ஸன்-02, பிருந்தாபன்-02 இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 6 ஓவர்களில் 2 இலக்குகளை இழந்து 20 ஓட்டங்களைப் பெற்றது. கானாமிர்தன்- 10 ஓட்டங்களை பெற்றனர்.

இந் நிலையில் மழை குறுக்கிட்டபடியால் போட்டி இடைநிறுத்தப்பட்டது. (க)

## கழுகு, ஸ்ரீமுருகன் அரையிறுதிக்கு தகுதி

மண்ணின் மைந்தர்கள் வெற்றிக்கிண்ண விளையாட்டு விழா கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப்போட்டிக்கு நெற்கொழு கழுகு, வதிரி ஸ்ரீ முருகன் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தி வரும் மண்ணின் மைந்தர்கள் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்த சுற்றுப்போட்டிகளின் அரையிறுதிப்போட்டிகளுக்கு யாழ். மாவட்டத்தின் முன்னணி கழகங்களான நெற்கொழு கழுகு, வதிரி ஸ்ரீ முருகன் அணிகள் தகுதி பெற்றுள்ளன. (க)

### பருத்தித்துறை ஐக்கிய வி.கழகம் நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவருக்கான உதைபந்தாட்டம்

# ஆதிசக்தி சம்பியன்




கவிதா ரேடேர்ஸ், வெஸ்ரேன் யூனியன் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் பருத்தித்துறை சிரேஷ்ட லீக் உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி 19.05.2017 வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

தொடக்கம் முதலே விறுவிறுப்பாக மோதிய இருகழகங்களும் கோல் கம்பங்கள் நோக்கி பந்துகள் வேகமாக நகர்ந்தன.

போட்டியின் 8 நிமிடத்தில் முதலாவது கோலை பதிவு செய்தது ஆதிசக்தி. தொடர்ந்து வேகமாக விளையாடிய அன்ரனிஸ் 13 ஆவது நிமிடத்தில் கோல் போட்டு போட்டியை சமநிலைப்படுத்த போட்டி இடைவேளையின் போது 1:1 சமநிலையில் காணப்பட்டது.

பிற்பாதியில் இரு அணிகளும் வேகமான நகர்வுகள் ஊடாக பந்து நகர்ந்த போதும் தனக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திய ஆதிசக்தி போட்டியின்23ஆவதுநிமிடத்தில்கோலை போட்டு முன்னிலை வகித்தது.

தொடர்ந்தும் விறுவிறுப்பாக போட்டி இடம்பெற்ற போதும் இறுதியில் 2:1 என போட்டி நிறைவு பெற ஆதிசக்தி சம்பியன் ஆகியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஆதிசக்தியின் கோல்காப்பாளர் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாம் இடத்தை பருத்தித்துறை ஐக்கியம் பெற்றுக்கொண்டது. இவர்களுக்கான பரிசில்களை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வழங்கி கௌரவித்தார். (க)

## சட்ட விரோதமா...

அகழ்வு மற்றும் மணல் வியாபாரத்தில் ஈடுபட்ட 12 பேரை நேற்று தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மிக நீண்ட காலமாக கிளிநொச்சி கல்லாறு காட்டுப்பகுதியில் சட்ட விரோதமாக நடைபெற்று வரும் மணல் அகழ்வு மற்றும் மணல் வியாபாரம் குறித்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பொறுப்பான பொலிஸ் உயர் அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தருமபுரம் பொலிஸார் மற்றும் மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட சோதனையின் மூலம் சந்தேக நபர்களை கைது செய்ததுடன், மணல் ஏற்றிச் சென்ற வாகனங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், கல்லாறு காட்டுப்பகுதியில் இருந்து பிரமந்தனாறு காட்டுப்பகுதியினை வந்தடையும் ஆற்றில் இருந்து நீண்ட காலமாக சட்டவிரோத மணல அகழ்வில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான வீடுகள் நிர்மாணிப்பதற்கு என தெரிவித்து நீண்ட காலமாக மணல் வியாபாரம் நடைபெற்று வந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-281-312)

## படகு சேவையில்...

செயற்பாட்டால் அன்றாடம் பணிநிமித்தம் பயணிக்கும் அரச அதிகாரிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறிகாட்டுவானில் இருந்து தீவுப்பகுதிகளுக்கு அதிகளவான பயணிகள் அன்றாடம் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பயணம் செய்வதற்கு வடதாரகை, நெடுந்தாரகை மற்றும் குமுதினி படகுகள் பயன்பாட்டில் இருந்தன.

வடதாரகை ஒருமாதங்களுக்கு முன்னர் பழுதடைந்துள்ளது. நெடுந்தாரகை கடந்த நான்கு நாட்களாக பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் போக்குவரத்து மிகவும் பாதிப்படைந்துள்ளது.

இந்த நிலையில் பணி நிமித்தம் தீவுகளுக்கு சென்று வரும் அதிகாரிகள் குறித்த படகு சேவை தொடர்பில் விசனம் அடைந்துள்ளதுடன் பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் வலம்புரியிடம் கருத்து தெரிவிக்கையில், நெடுந்தீவுக்கு, நயினாதீவுக்கு பணி நிமித்தம் காரணமாக அரச உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு நாளும் சென்று வருகின்றனர். ஆனால் காலை 8.30 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் நெடுந்தாரகை படகில் கடற்படையினர் சுற்றுலா பயணிகளையே ஏற்றி செல்கின்றனர். அதிலும் தமக்கு வேண்டியவர்களையே ஏற்றி செல்கின்றனர். சில வேளைகளில் குறித்த நேரத்துக்கு முன்னரே படகு சென்றுவிடும். இதனால் அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எடுத்து சொல்லியிருந்த போதும் எவரும் கண்டுகொள்வதாக தெரியவில்லை உரிய நடவடிக்கை எடுக்கவும் இல்லை.

சில வேளைகளில் குறிகாட்டுவான் வரை சென்று பணிக்கு செல்லாமல் வீடு வர வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. காலை நேரத்தில் ஆரம்பிக்கும் பயணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கும் மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால் அதை எவரும் கவனத்தில் எடுக்கவில்லை மிகவும் சிரமத்தின் மத்தியில் சென்று வரும் எமக்கு, சாதகமான உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக எடுக்க வேண்டும். அத்துடன் சுற்றுலா பயணிகளை முன்னுரிமைப்படுத்தி படகுகளில் ஏற்றும் கடற்படையினர் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பவ இடத்தில் அதிகாரிகள் கண்காணிப்பினை மேற்கொண்டால் எமது வேதனை அவர்களுக்கு புரியும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-9)

## பயங்கரவாத எதிர்ப்பு...

னரான அரசாங்கமும் பகிரங்கமாக கூறி வருகின்ற நிலையில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தேவையற்றது எனவும் அதனை நீக்குவதற்கு தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்திற்கு பல்வேறு வழிகளில் அழுத்தம் கொடுப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ்.பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் அலுவலகத்தில் நேற்றைய தினம் தமிழரசு கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம்,

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழர் சமூக ஜனநாயக கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியன நேற்றைய தினம் சந்திப்பொன்றை நடத்தியிருந்தன. இதன் போதே பயங்கரவாத தடை சட்டம் ஒன்று தேவையற்றது எனவும், தற்போது கொண்டு வரப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதம் நாட்டில் தோற்கடிக்கப்பட்டுள்ளதாக, கடந்த அரசாங்கமும் இந்த அரசாங்கமும் பகிரங்கமாக கூறி வருகின்ற நிலையில், பயங்கரவாத சட்டம் என்பதே தேவையற்றது என இந்த கூட்டத்தில் அனைத்து கட்சிகளாலும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட மசோதாக்களை நீக்குவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்க வேண்டும் எனவும், இந்த அழுத்தத்தை மலையக மக்களையும், முஸ்லிம் மக்களையும் இணைத்து கொண்டு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தவிர தென்னிலங்கையில் உள்ள முற்போக்கு கட்சிகளும் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் இணைத்து கொள்வது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகள், போராட்டங்களை முன்னெடுத்து பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை நீக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்குவது எனவும் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் தமிழரசு கட்சியின் சார்பில் அக்கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.சுகிர்தன், தமிழீழ விடுதலைக்கழகத்தின் சார்பில் அதன் தலைவரும் (புளொட்) பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் அதன் தலைவரும் (ஈ.பி.ஆர்.எல்.எப்) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் சார்பில் அதன் தலைவர் சுகு சிறிதரன்,

தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத்தின் (டெலோ) சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா, உப தலைவர் ஹென்றி மகேந்திரன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், விந்தன் கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இந்த கூட்டத்திற்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியவற்றுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் கலந்துகொள்ளவில்லை என ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த இரு கட்சிகளும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தேவையற்றது என்பதில் ஒத்த கருத்தோடு உள்ளனர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (செ-4)

## வைத்தியசாலை...

சாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

வேரஹெர பிரதேசத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ் வைத்தியசாலை, 20 விசேட சிகிச்சை நிலையங்கள், 814 கட்டில்கள் மற்றும் நவீன உபகரணங்களைக் கொண்ட முழு நிறைவான சர்வதேச தரம்வாய்ந்த வைத்தியசாலையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையை திறந்துவைத்த ஜனாதிபதி, அங்குள்ள சிகிச்சை நிலையங்களை பார்வையிட்டதுடன், சிறுவர் விடுதி மற்றும் விசேட விருந்தினர் விடுதிகள் தொகுதியையும் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டு மக்களின் இலவச சுகாதார சேவையை பலப்படுத்துவதற்கு பங்களிக்கவேண்டியது அனைவருடையதும் பொறுப்பாகும் என்று தெரிவித்தார்.

அரசாங்க வைத்தியசாலைகளில் விசேட வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இச்சேவையில் உள்ளவர்களில் வருடாந்தம் வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை இதற்கு முக்கிய காரணம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அப்படி வெளிநாடுகளுக்குச் செல்வோரை தடுத்து வைத்துக்கொள்வதற்கான வழிகள் இல்லை என்ற போதும் மக்களுக்கு இலவச சுகாதார சேவை மற்றும் இலவச கல்வியின் நன்மைகளை பெற்றுக்கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவது அனைத்து பிரஜைகளினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ரியர் அத்மிரால் ஜே.ஜே. ரணசிங்கவினால் ஜனாதிபதிக்கு விசேட நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன, பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ அபேகோன், பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர் அத்மிரால் தயா சந்தகிரி, உபவேந்தர் ரியர் அத்மிரால் ஜே.ஜே.ரணசிங்க ஆகியோர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ)

## முதியோர் இல்லங்கள்...

சிரியர் கலாநிதி குணசிங்கத்தின் உதவியில் வவுனியாவில் நிர்மாணிக்கப்பட்ட நினைவு கட்டடமொன்றை நேற்று திறந்து வைத்து, முதியோர் இல்லத்திற்கான அடிக்கல்லையும் நாட்டி வைத்து உரையாற்றிய போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வயோதிப இல்லங்கள் இன்று பல இடங்களில் புதிது புதிதாக தோற்றம் பெற்று வருகின்றன. வெளிநாடுகளில் இருந்து வருகின்ற பலர் தமது தாய் தந்தையர் முறையான பராமரிப்பின்றி வீட்டில் அல்லற்படுவதை அவதானித்து அவர்களைத் தாம் வாழுகின்ற நாடுகளுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையிலும் அந் நாடுகளில் காணப்படுகின்ற சீதோஷண நிலைகள் இவர்களுக்கு ஒத்துவராது என்பதாலும் வேறு வழியின்றி தமது உணர்வுகளை கல்லாக்கிக் கொண்டு முதியோர் இல்லங்களில் பெற்றோரை இணைத்துவிட்டு கனத்த மனத்துடன் தமது நாட்டிற்கு திரும்புவதை நாம் அவதானித்திருக்கின்றோம்.

குழந்தைகள் போன்று வயோதிபர்களும் பராமரிக்கப்பட வேண்டும். நித்தமும் வெளியில் சென்று பல வேலைகளுக்கிடையே நாட்டு நடப்புக்கள், செய்திகள் என அறிந்து வந்தவர்கள் ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கும் போது அவர்களுக்கு பேச்சுத் துணைக்கு ஒரு உறவு தேவை. ஆனால் எமக்கோ அவர்களுடன் பொழுதைக் கழிக்க நேரமில்லை. இந்த நிலையில் அவர்களும் துக்கப்படுகின்றார்கள். நாமும் மனச்சுமையுடன் சஞ்சலப்பட வேண்டியுள்ளது.

எனவேதான் இன்றைய நிலையில் வயோதிபர்கள் பலர் தாமாகவே வயோதிப இல்லங்களில் வாழ விரும்புகின்றார்கள். சில சமயங்களில் வயோதிப இல்லங்களில் போதுமான வசதிகள் காணப்படாத போதும் தமது பிள்ளைகள் படுகின்ற அல்லல்களைச் சகிக்க முடியாது அதே நேரம் தமது இயலாமையையும் கருத்தில் கொண்டு இல்லங்களிலேயே அவர்கள் இருந்துவிடத் தீர்மானித்து விடுகின்றார்கள்.

எனினும் இல்லங்கள் சர்வதேச தரத்திற்கொப்பானதாக அமைகின்ற போது அவர்களின் வாழ்க்கைத்தரம் சுகமானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமையும் என்று எதிர்பார்க்கலாம். இல்லை என்றால் அவர்கள் பல கஷ்டங்களின் மத்தியில் வாழ நேரிடும் என முதலமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார்.(செ)

## அச்சுறுத்தல்களை...

ளரும் தமிழ் மக்கள் பேரவையின் அங்கத்துவ அமைப்புகளில் ஒன்றான தமிழ் சிவில சமூக அமையத்தின் பேச்சாளருமான வண பிதா எழில்ராஜன் மீது, விசாரணை எனும் பெயரில் தொடர்கின்ற அச்சுறுத்தலை தமிழ் மக்கள் பேரவை வன்மையாக கண்டிக்கிறது.

ஏற்கெனவே கடந்த காலங்களிலும் பல்வேறு அச்சுறுத்தல்களுக்குள்ளான அவர், இந்த முறை மூன்றாவது தடவையாகவும் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

அதுமட்டுமல்லாது, அவரது பெற்றோர்களும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர்.

நினைவுகூரும் உரிமையை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் இந்த மிகவும் மோசமான அடக்குமுறை குறித்து, அதிலும், அடிகளாரின் வயோதிப பெற்றோரையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கிய இந்த அடக்குமுறை குறித்து தமிழ் மக்கள் பேரவை ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது.

இது மட்டுமல்லாது, வடக்கு கிழக்கு பகுதிகளில் பல்வேறு இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்திய செயற்பாட்டாளர்கள் , கலந்து கொண்ட மக்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மீது இராணுவப் புலனாய்வாளர்களால் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றது. இவற்றை ஆழ்ந்த விசனத்துடன் நாம் சர்வதேச சமூகத்திடம் சமர்ப்பிக்கின்றோம்.

பல்வேறு இடங்களிலும் தனித்தனியாக இடம்பெறும் இப்படியான அச்சுறுத்தல்களும் துஷ்பிரயோகங்களும், எதிர்காலத்தில் நினைவு கூரல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை எமக்கு உணர்த்துகிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட ரீதியில் இவை நடக்கும்போது, எம்மீதான அச்சுறுத்தல்களை குறைத்துக்கொள்ள முடியும் எனவும் அப்படி அச் சுறுத்தல்கள் இடம்பெறுகின்ற பட்சத்திலும் அதுகுறித்து தேவையான நடவடிக்கைகளை இலகுவாக எடுக்கமுடியும் எனவும் தமிழ் மக்கள் பேரவை கருதுகிறது.

நினைவுகூருதல் எனப்படுவது ஒரு அடிப்படை மனித உரிமை. நினைவு கூருபவர்களை அச்சுறுத்துவதென்பதானது, நினைவுகூரலை, மறுதலிக்கின்ற ஒரு அப்பட்டமான அடிப்படை மனித உரிமை மீறலேயாகும். இதன் மூலம் இப்படியானநினைவுகூரல்களை ஒழுங்குபடுத்துபவர்களும் கலந்து கொள்பவர்களும் அச்சுறுத்தல்களுக்குள்ளாவார்கள் எனும் செய்தியை எமது மக்களுக்கு வழங்கி, ஒரு அச்சமூட்டும் சூழலை தொடர்ந்தும் பேணி, அதன் மூலம் மக்களை தாமாகவே இப்படியான நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்க வைக்கும் ஒரு உளவியல் போராகவே நாம் இதனை பார்க்கின்றோம்.

நேரடி வன்முறையை பாவித்து முன்னைய அரசாங்கம் நினைவு கூரல்களை அடக்கியிருந்தது. நல்லாட்சி என தம்மை அழைத்துக் கொள்ளும் இந்த அரசாங்கமானது, உளவியல் போரின் அங்கமான மறைமுக அழுத்தங்கள் மூலம் நினைவுகூரும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகிறது.

நினைவுகூருதலை மறுதலிப்பதென்பது, ஒரு சமூகத்தின் அடிப்படை உரிமையை மறுதலிக்கின்ற ஒரு செயற்பாடு என்பதோடு, அச் சமூகத்தின் கூட்டு உளவியலையும் தொடர்ந்தும் சிதைவுற்ற நிலையில் பேணும் ஒரு முயற்சியேயாகும்.

நினைவுகூரும் உரிமையை வழங்கியுளளோம் என வெளியுலகிற்கு கூறிக்கொள்ளும் இந்த அரசாங்கம், களத்தில், உண்மையான நடைமுறையில் அந்த நினைவுகூரும் உரிமையை அச்சுறுத்தல்கள் மூலம் கபடமான முறையில் மறுதலிப்பது என்பது முன்னைய அரசாங்கத்தின் இலக்குகளை நோக்கியே வேறு வடிவங்கள் மூலம் இந்த அரசாங்கமும் நகர்கிறது என்பதை வெளிப்படுத்துகின்றது. அத்துடன், நல்லிணக்கம் எனக்கூறிக் கொண்டு, நல்லிணக்கத்தின் முக்கிய அங்கமான நினைவுகூரலை திட்டமிட்ட ரீதியில் மறுதலிப்பதென்பது, இந்த அரசாங்கத்துக்கும் இதய சுத்தியான நல்லிணக்கத்தில் அக்கறையில்லை என்ற விமர்சனங்களை நிரூபிக்கின்றது.

இலங்கையில் நடைமுறைக் கள யதார்த்தத்தை பொறுத்தவரையில், காவல்துறை விசாரணை என்பது சாதாரண சிவில் சட்ட நீதி நடவடிக்கையாக மட்டும் கருதப்படமுடியாதது. அரசின் தொடர்ச்சியான இன ஒடுக்குமுறை செயற்பாட்டில் கணிசமான பங்கை இலங்கை காவல்துறையும் வகித்திருந்தது. இலங்கை காவல்துறை குறித்து எதுவித நம்பிக்கையுமற்ற, அச்ச உணர்வும் உளவியல் வடுவுமே பாதிக்கப்பட்ட தரப்பாகிய தமிழ் மக்களின் மனதில் இருக்கிறது என்ற பின்னணியிலேயே சர்வதேச சமூகம் இதனை அணுக வேண்டும்.

ஐ.நா மனித உரிமை பேரவை பல தடவைகள் தொடர்ச்சியாக பாதுகாப்பு பிரிவின் மீளமைப்புக்கு வலியுறுத்தியும் , அதனை உதாசீனம் செய்து, எதுவித மறுசீரமைப்பும் செய்யப்படாது, முன்னைய கட்டமைப்புடனும் அதே மனோநிலையிலும் இயங்கிவரும் இலங்கை பாதுகாப்பு பிரிவின் ஒரு அங்கத்தின் அச்சுறுத்தல் நடவடிக்கையாகவே இதனை நோக்க வேண்டும் என நாம் சர்வதேச சமூகத்தை கோருகின்றோம்.

வண பிதா எழில்ராஜன் மீதும் ஏனைய செயற்பாட்டாளர்கள் மீதும், குறித்த நினைவு கூரலோடு தொடர்புபட்ட பொதுமக்கள் மீதும் பிரயோகிக்கப்படுகின்ற இந்த அச்சுறுத்தலை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுத்து, தொடர்கின்ற அச்சுறுத்தல்களை முடிவிற்கு கொண்டு வருவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என நாம் வேண்டிக்கொள்கிறோம்.

அத்தோடு, செயல்பாட்டாளர்களை அச்சுறுத்துவதன்மூலம், மக்களின் ஒன்றுகூடும் உரிமையையும் நினைவுகூரும் உரிமையையும் பயத்திற்குரியதாக்கி, மக்களை தாமாகவே அப்படியான செயல்பாடுகளிலிருந்து ஒதுங்கி நிற்கவைக்கும் இந்தஅரசாங்கத்தின் கபடத்தனமான செல்நெறியையும் சரியாக அடையாளம் காணவேண்டும் எனவும் நாம் சர்வதேச சமூகத்தைவேண்டுகின்றோம் என தமிழ் மக்கள் பேரவை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (செ)

## நாகர்கோவில்...

நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இம்மோதல் சம்பவத்தில் நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த பத்மநாதன் கருணாநிதி (வயது36), மரிய அமலதாசன் விமலதாசன் (வயது28) மற்றும் நாகர்கோவில் மேற்கைச் சேர்ந்த யோசப்யோன்சன் பகிரதன் (வயது 29) ஆகிய மூவருமே படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

மேலும் இச்சம்பவத்தில் அப்பகுதியில் உள்ள குடிசை ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இதனால் நேற்று முன்தினம் இரவு அப்பகுதியில் பெரும் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

## புகலிடக் கோரி...

கூறியுள்ளார்.

இலங்கையில் இருந்து போருக்கு முன்னரும் போரின் பின்னரும் ஆபத்தான கடல் வழிப்பயணங்களை மேற்கொண்டு ஆயிரக் கணக்கானவர்கள் அவுஸ்திரேலியாவில் புகலிட தஞ்சம் கோரியிருந்தனர்.

இலங்கையை தவிர ஏனைய ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் அகதி தஞ்சம் கோரி, அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்துள்ளனர்.

இந்த நிலையில் அகதிகள் தொடர்பான நெருக்கடி அதிகரித்ததை அடுத்து கடுமையான குடிவரவு கொள்கைகளை முன்னைய தொழிற்கட்சி அரசாங்கம் அமுல்படுத்தியிருந்ததுடன், அவுஸ்திரேலியாவின் தற்போதைய லிபரல் அரசாங்கம் அவ்வாறான கொள்கையை பின்பற்றி வருகின்றது.

எனினும் புகலிடம் கோரி நாட்டுக்குள் பிரவேசித்துள்ள சிலர் புகலிட விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவில்லை என குறிப்பிட்ட பீற்றர் டுட்டன், ஏனையவர்கள் தமது அடையாளம் தொடர்பான அடிப்படை தகவல்களை வழங்க மறுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் தொழிற்கட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் சுமார் 50 ஆயிரம் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாட்டிற்குள் பிரவேசித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (செ)

## 2000 பேருக்கு...

கப்பட்ட விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் போது சுமார் 2ஆயிரம் பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் 8ஆயிரம் பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ப்ரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் டெங்கு அபாயம் நிலவும் 12 மாவட்டங்களில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

நாடு முழுவதிலும் சுமார் 48ஆயிரம் பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)


# பதவி வெற்றிடம்

- அச்சு இயந்திர இயக்குநர்கள் (அனுபவமுள்ளவர்கள்)
- உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும் - ஊடகத்துறை அனுபவமுள்ளவர்கள்)
- செய்தியாளர்கள் (இருபாலாரும்)

ஆர்வமும் தகைமையும் உடையவர்கள் நாளை மறுதினம் 24.05.2017 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

குறிப்பு : நேரில் வருகை தரும் போது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வருவது அவசியமானதாகும்.

இல.3, 2-ம் ஒழுங்கை, - பொது முகாமையாளர்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். வலம்புரி


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 26 . 11 . 1944



மறைவு 19 . 05 . 2017

அமரர்

**சபாபதிப்பிள்ளை இரத்தினகோபால்**

(ஜெகா மோட்டேர்ஸ் நிறுவன உரிமையாளர், நெல்லியடி வர்த்தக சங்க முன்னை நாள் தலைவர்)

சபாபதிப்பிள்ளை இரத்தினகோபால் அவர்கள் கடந்த 19.05.2017 வெள்ளிக்கிழமை அன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன், அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கஜமுகன் காட்வெயார் (K.M.H)

(சி-8637)


# உடனடி வேலைவாய்ப்பு

எமது Dynamic நிறுவனமானது தனது புதிய கிளைகளை வடக்கில் இவ்வாண்டு ஆரம்பிக்கவுள்ளது.

- தகுதி O/L, A/L
- பயிற்சியின் போது 15,000 - 18,000/=
- பயிற்சியின் பின் 40,000 - 45,000/= வரையும் நிரந்தரமாக பெற்றுக்கொள்ளலாம்.
- உணவு தங்குமிட வசதிகள் இலவசம்.

உடனே அழைக்கவும்

0766668385, 0766781042, 0215679002

(8635)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(சி-8564)

## சிறுநீரகம் தேவை

32 வயதுடைய பெண் ஒருவ ò Âz O Blood Group உடைய சிறுநீரகம் தேவை.

தொடர்பு :

077 254 3304

(8693)

## AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY

T.P: 021 205 7455

- சகல வைபவங்களுக்குமான உயர்தர உணவுகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
- வட மாகாணத்தில் அதிகூடிய உணவு உற்பத்தியாளர்கள்.
- வடக்கு முழுவதற்கும் இலகுவான விநியோக முறை.
- மிக மிக சுத்தமான கைதடி உணவுத் தொழிற்சாலையை பார்வையிட்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.

ஆச்சி (FOOD FACTORY) ஆச்சி ஹொட் பூட் ரெஸ்ரோரன்ஸ்.

கைதடி கிழக்கு, கைதடி. (சி-8631)

147, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P: 021 222 5001

# அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை



(சி-8630)

365 நாட்களும்

அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (Express Service)

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call 021 222 3536

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call 021 222 6113

DHL aramex FedEx Express SKYNET


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.